ஓம்

லக்ஷ்மி

OFFICE OF THE REG... 20 MAR ... MADRAS

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை
சித்திரப் படங்களுடன் கூடியது.
பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௨. | ரக்தாட்சி௵ மார்கழி௴ 1924 டிஸம்பர் | இதழ் ௫

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	215
2.	பாரத நாடு	216
3.	இந்திய மாதர்கள்	217
4.	வெண்பா நூற்கள்	221
5.	கல்வியும் மதமும்	225
6.	அவுரங்கசீபின் விவாகம்	233
7.	பால் உணவு	236
8.	சூரிய வெளிச்சம்	240
9.	ஐந்து வக்கரில் சுயராஜ்யம்	244
10.	டாக்டர் சுப்பிரமணிய ஐயர்	251
11.	கலியாணமான ஆண், பெண் கவனிக்க வேண்டிய முறைகள்	256
12.	சித்திரப்பத்தி...	259
13.	பத்திராதிபர் குறிப்புகள்	261
14.	தேசாபிமானிகள் படம்	264
15.	அதிசயம்	265
16.	குருவிப் பாட்டு	269
17.	மதிப்புரை	271

சித்திரப் படங்கள்.

1. பத்மநாப ஸ்வாமி.
2. குணபரன்.

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணு 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10வுக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தியாகாது!

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. விலை ரூ. 3.

தபாற்செலவு வேறு.

சொற்ப காபிகளே கைவச முள்ளது. முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

மாணிக்க மேனி யுட னுன்னை நாடி
மலர் சொரிந்து
பேணிக்கை கூப்பும் பயனிந்த
வாறிங்கு பெற்றிருந்தும்
ஆணிக்கனக முளார் தங்க
ளாண்மை கண்டஞ்சி முகம்
நாணிக்கவிழ்தர லாமோ பொன்போலும்
நளின மின்னே !

பாரத நாடு.

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோயில்களே காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு
பழைமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே.(1)

உண்மைஅரிச் சந்திரனை உவந்தளித்த நாடு
உயர்ஜனகன் ராமபிரான் உலவியபொன் னாடு
கண்ணன்விளை யாடலெல்லாங் கண்டுகளி நாடு
கண்ணனொடு பஞ்சவர்கள் காத்ததனி நாடு
தண்மைநிறை புத்தரவர் தருமம்வளர் நாடு
தகைமையுறு வள்ளுவர்தந் தமிழ்பிறந்த நாடு
பண்ணமருங் கரிகாலன் பரித்தபுகழ் நாடு
பகைவர்களுந் தொழுதேத்தும் பாரதநன் னாடே.

வான்மீகி வியாசமுனி வளர்ந்திருந்த நாடு
வாகடதன் வந்திரியும் வசிட்டமுனி நாடு
"நான்" மறந்த சுகர்முதலோர் ஞானமொளிர் நாடு
நாயன்மார் ஆழ்வார்கள் நண்ணியதண் ணாடு
மேன்மையுறு பட்டினத்தார் மேவுமணி நாடு
வேதாந்த ராமகிருஷ்ணர் விளங்கியசெந் நாடு
பான்மைபெறு கம்பர்முதல் பாவலர்கள் நாடு
பத்தரோடு ஞானிகள்வாழ் பாரதநன் னாடே.(3)

திரு. வி. க.

இந்திய மாதர்கள்

(ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகையம்மாள் எழுதியது.)

முற்கால இந்திய மாதர்களுக்கும் தற்கால இந்திய மாதர்களுக்குமுள்ள மாறுதல்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முற்கால மகளிரிடம் அன்பு, அறம், தூய்மை, பொறை, அடக்கம், பெரியோர்ப் பேணுதல், தெய்வப்பற்று முதலிய உயரிய குணங்களே பொற்பணிகளாகத் திகழ்ந்தன.

பாவாணரும் அன்னாரைக் கண்டே "இல்லற மல்லது நல்லற மன்று" எனவும் "மனைக்கு விளக்க மடவார்" எனவும் புகழ்ந்து பாராட்டினர்.

அக்காலத்தினர் இயற்கை யின்பமே நுகர்ந்தனர், இயற்கை வளமே பெருக்கினர். துறவோர்ப் பேணலும் அறவுரை கேட்டலும் பேரிளம் பெண்ணான காலத்து வானப்பிரஸ்தாச்சிரமம் என்னும் படியினை மேற்கொள்வதும் அரச பத்தினிகளுக்கும் இயற்கையறமாயிருந்தன. அரண்மனைச் செல்வத்தில் மூழ்கி நிற்கும் வனிதைகளும் மரவுரியை யுடுத்து வனமல்லிகைகளை யாபரணமாக வணிந்து பொலியும் முனிபத்தினிகளைக் காணின் தெய்வமென மதித்துத் தொழுது ஆசி பெற்று அகமகிழ்வர். அத்தகைய பண்டைக் கால பாரத புத்திர்கள் தற்காலம் எங்கே? அவர்களைத் தோற்றுவித்த இப்பாரத தேசமு மிதுவே.

இருந்தும் பழைய எண்ணம் பழைய நடை தற்காலம் உளதெனப் புகல முடியுமோ?

பல்வேறு நாட்டவரின் படையெடுப்பினால் சிறுகச் சிறுக நந்தொன்மை யெண்ணங்கள் தொலைந்தன, பண்டை யொழுக்கங்கள் பறந்தன. தற்காலம் பழமை யெனப் பாராட்டும் சில ஆசரணைகளும் கூட நீண்ட ஆராய்ச்சி

யின் கண் இடைக்காலத்து இந்தியாவிற் குடியேறிய பிற மத வொழுக்கங்களே யெனப் புலனுகின்றன.

பழமை புதுமை யென்பதுவும் கண்டுணர முடியாத படி அளவளாவிக் கலந்து நிற்றலின் அறப்பழமை யென்பது அறவே மறைந்தொழிந்தது.

ஆயினும் சொற்கட்டிடங்கள் பல அழிவுறுது சிலவி பிருத்தலினால் அறிவுடையோர் அப்பண்டை நாகரீகத்தினை மீண்டும் பரிணமிக்கச் செய்தல் அரிதன்று.

தானம் பெறும் பேராசையினுல் பெண் வேடம் புனைந்து போந்த பிரமசாரியைப் பெண்ணுகவே ஆகுக வெனச் செப்பிப் பெண்மை யெய்தச்செய்த சீமந்தனியை யும். மூவரையும் தொட்டிற் குழவிகளாக்கிய அநுசூயா தேவியையும் இந்நாளில் உண்டுபண்ண முடியாதாயினும் அன்னார் அருமையினையும் எவ்வாறு அத்தகைய ஆற்றல் அவர்கட்கு எய்திய தென்பதையாவது அறிந்து போற்றும் பண்பினையு மாவது இக்கால மகளிர் பெறுதல் இன்றியமை யாத தன்றோ? இப்பேறு எதனுல் எய்தும்? தற்கால பாலிகா பாடசாலைப் பயிற்சியினுலா? அவர்கட் கமையும் பிறமத போதகிகளின் வழக்க ஒழுக்கங்களினுலா? போதனு முறைகளினுலா? அன்னியநாட்டு உடைகளினுலா? முதற்கோணல் முற்றவுங்கோணல் என்ற மூதுரைப்படி சரீரத்தின் பிரதான அவயவமாகிற சிரசிலேயே பிரகாசிக் கும் கோணல் வகுடுகளினுலா? அன்னிய பாஷையை ஆவலோடு அரை குறையாகக் கற்கும் அறிவினுலா? சேர்க்கை மணத்தினுலா? அறிஞர்களே சிந்தியுங்கள்.

இந்திய மாதர்களின் எண்ணத்தில் பகட்டுடைகளில் ஆர்வமும் பிறருடைய போலி நாகரீகங்களில் பற்றும் முளைப்பதற்கு விதை விதைக்கும் இடம் தற்கால பாலிகா பாடசாலைகளே யாகும். பின்னர் குடும்பத் தலைவிகளாகுங் கால் இவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து பற்றி யலைக்கும் பயனற்ற ஆடம்பர விருப்பங்களாலும், கற்பனைக் கதைகளாகிற நாவற் சுவடிகளின் நவை மிகுஞ் சுவையாலும் போலி நாகரிக நடைபேணி இந்தியாவின் பழைய சாயலை முற்றும் இழக்கின்றனர்.

இக்கூட்டத்தினரால் பல ஏழைப்பெண்கள் உபாத்தியாயனிகளாக வமர்ந்து ஜீவிக்க வழி காண்கின்றனர். அம்மட்டில் அது சிறந்த உதவியே. எனினும் நமது பாடசாலைகளின் பயன் பாலிகைகளின் அறிவை விருத்தி செய்தற்கா? அல்லது புதிய போதனாமுறைப் பயிற்சி பெறும் சில பெண்களின் ஜீவனோபாயத்திற்கு வழி காட்டுவதற்கா? இக்கேள்விக்கு அவரவர்களே விடையளித்துக்கொள்ளுதல் வேண்டும்.

தற்காலக் கல்வி கற்கும் பெண்கள் மங்கைப்பருவமடைந்து மனையறம் புரியுங்கால் கற்ற கல்வியின் பயனைக அனுபவிக்கும் சுவை யாது? ஆறுதல் தான் யாது?

"ஆலும் வேலும் பல்லிற் குறுதி", "நாலும் இரண்டும் சொல்லிற்குறுதி" என்ற அழகிய ஆன்ற மொழித் தொடரின்படி குறளையும் நாலடியாரையும் மனப்பாடமாக இளமையிற் பயின் றிருப்பரேல் உலகியலை யுணர வேண்டிய வயதில் அநுபவ பூர்வமாக இளமையிற் கற்ற முதுமொழிகள் ஆனந்த மளிக்கும். அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கின் பாகுபாட்டினை யறிந்து அதற் கேற்ப ஒழுகமுந்துவர். அன்னிய பாஷையில் பட்டதாரிகளாகி வெளிவரும ஆண் மக்களிற் பலரே செய்யுளின்பம் அறியாராய் கவிஞர் மீது குறை கண்டு தம்மறிவு பயனிழந்த தறியாராய் கவிகள் கடினமா யிருப்பதெனஅபிப்பிராயங் கூறக் கூசாமல் வெளிவரும் இந்நாளில் மகளிர் செய்யு ளின்பத்தினை நுகர்வ தெப்படி?

ஒட்டக்கூத்தன் பாட்டிற் கிரட்டைத் தாழ்ப்பாள் என்று பொருளுணர்ந்து விடையிறுத்த பாண்டியன் மகளும், போஜராஜனது அவையை அலங்கரித்த பெண் கவிகளும், சாபானுக்கிரக முடைய ஒளவையாரும இன்னும் பல சமயோசித மதியூகிகளும் தோன்றி யிருந்த நாடு இதுவேயன்றோ?

தேசாபிமானம் செழிக்க வேண்டுமாயின் அவரவர்களின் தாய் மொழியன்றிப் பிற மொழிகள் துணை யாகுமோ? தேசாபிமானிகளாகும் மக்களை யுண்டுபண்ண வேண்டியவர்

கள் தேசாபிமான மிக்க தாய் மார்க ளன்றோ? தாய்மார்கள் அறிவும் விருப்பமும் அமையும் தன்மையை யன்றோ, மக்களிடம் காணலாகும். பெண் மக்களை நவீன நாகரிகக் கல்வி கற்க விடாமல் தாய்மொழி வல்ல முதியாரைக் கொண்டு இலேசான முறையில் அடக்கமான செலவில் பண்டை முறைப்படி பயிற்றி வருவதே தற்காலப் போலி வேஷத்தினைக் களைதற்குத் தக்க வழிகளாகும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நாலடியார், குறள் இவைகளை விடச் சிறந்த நூல்களும் பிற வேறு மொழிகளிலும் உளதென்று கூற முடியுமோ? யாதோ? அறிகிலேம். வயது முதிருங்கால் அவ்வவர் சமயத்திற் கேற்றபடி தேவாரமாதி பக்தி மார்க்கப் பனுவல்களும், பிரபந்தத் திரட்டுகளும், வேதாந்த நூல்களும் நந் தமிழமொழியில் வற்றா வின்பம் பயக்க வல்லதன்றோ?

கீழ்ப்படிதல் என்னும குணம இந்திய மாதர்களிடம் இயல்பாகவே உண்டு இக் குணம் பிறநாட்டுப் பெண் மக்களிடம் காண்பதரிது.

கற்பில் இந்தியப் பெண்களை எவர்களும் குறை கூற முடியாது. கடமையாற்றுதலிலும் கணவருக்கும் புதல்வருக்கும் உபசரிக்கும வகையிலும் இந்திய மாதருக்கு நிகரார் எத்தேசத்திலும இல்லை யென்றே பகரலாம். பழமை பாராட்டுதல் என்னும் அருங் குணமும் இவர்கள் உள்ளத்தினின்றும் பிரிக்க முடியாதபடி பின்னிக்கொண்டுள தெனக் கூறலாம்.

இத்தகைய இயற்கைக் குண நலம் நிறைந்த பெண்மக்களை இந்தியாவின் இயற்கைப் பெண் மக்களாகப் பொலியும்படி தேசீயக் கல்வியினால் திருத்தித் தற்காலச் செயற்கைப் போலி யன்னிய முறைப் போதனைகளிற் புகுத்தாது தடுத்துக் காத்து வளர்க்க வேண்டு மென்னும பேரவாக் கொண்டே இக்கட்டுரையை எனது தேசாபிமானமுடைய சோதரர்களை நோக்கி உரிமையுடன் வரைய முன் வந்தேன்.

அன்புடைய அறிஞர்கள் எனது வேண்டுகோளை அநுதாபத்துடன் மனங்கொண்டு இயன்றவளவாவது பாலிகைகளின் கல்வி விஷயத்தில் கவனம் செலுத்துவதே பாரத மாதாவிற் காற்றும் பயன் தரு செம்பணி யாகும.

வெண்பா நூற்கள்

(ஸ்ரீமாந் சீனி வேங்கடசாமி எழுதியது.)

இந்திய மக்கள் யாவரும் இதுகாலைத் தத்தம் தாய் மொழியைப் போற்றத் துவக்கி விட்டார்கள். தாய் மொழி வளர்ச்சியுறுவதாலேயே ஒவ்வொரு தேசமும் உயர் நிலை யடைகின்றது என்னும் உண்மையை இப்பொழுது மக்கள் யாவரும் நன்குணர்ந்து கொண்டார்கள். வடக்கே வங்க நாடும், தெற்கே கேரள நாடும் பாஷை வளர்ச்சியில் இப்பொழுது முனைந்து நிற்கின்றன. தமிழ் நாட்டு மக்களுந் தாய் மொழி வளர்ச்சியில் மனஞ் செலுத்தி யிருப்பது தமிழ் நாட்டின் நற்காலமே. ஆண் மக்களும் பெண் மக்களும் ஒருங்கே தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கி யிருக்கிறார்கள். மாணவ மாணவிகளைப் பலவாற்றானும் ஊக்கப் படுத்த வேண்டியது பண்டிதர்களின் இன்றியமையாக் கடமை யாகும். நிற்க.

தமிழ் மொழியில் அந்தாதி, கலம்பகம், சதகம், பிள்ளைத் தமிழ், நிகண்டு, புராணம் முதலிய பற்பல வகையான பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் பற்பல நூற்கள் பற்பல புலவர்களால் இயற்றப் பட்டுள்ளன. தமிழ் கற்கும் மாணவர்கள் தத்தம் விருப்பத்துக் கியைந்தவாறு, சிலர் புராணங்களையும், சிலர் கலம்பகங்களையும், சிலர் பிள்ளைத் தமிழ்களையும், சிலர் வேறு நூல்களையும் வாசிக்கப் பிரியப் படுவார்கள். அவ்விதம் பிரியப்படுபவர்கள், தாங்கள் படிக்க விரும்பும் பகுதியில் இன்னின்ன நூற்கள் உள்ளன என்று அறியவேண்டுவது அவசியம். அங்ஙனம் அறிந்தாலன்றோ அவற்றை எல்லாம் வாசித்து அத்துறையில் வல்லவராதல் கூடும்? ஆதலின், அறிஞர்கள் முன்வந்து இந்த இந்தப் பகுதியில் இந்த இந்த நூற்கள் உள்ளன என்று வெளிப்படுத்த வேண்டுகிறேன். இனி,

மாணவர்களில் சிலர் வெண்பா நூற்களை மாத்திரம் ஆராய்வதில் விருப்பமுள்ளவர்களா யிருத்தல் கூடும். அத்தகைய மாணவர்களுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு, வெண்பாயாப்பினால் இயற்றப் பட்ட நூற்களை ஈண்டு எழுதுவான் முன் வந்தேன். இரட்டை மணிமாலை, நான்மணிமாலை, மும்மணிக்கோவை முதலிய பகுதிகளின் இடை இடையே காணப்படும் வெண்பாக்களையும் தனிப் பாடற்றிரட்டில் காணப்படுங் கணக்கற்ற வெண்பாக்களையுந் தவிர்த்து, முழுவதும் வெண்பா யாப்பிலேயே இயற்றப்பட்ட தனி நூற்களைமட்டுமே ஈண்டு குறிப்பிடுகின்றேன். நூற்பெயரும் இயற்றியவர் பெயரும் வருமாறு :—

அத்வைத வெண்பா—சிவப்பிரகாசர்
அரிச்சந்திர வெண்பா—செ. தணிகைராய முதலியார்
அறுபது வருட வெண்பா—இடைக்காடர்
ஆத்திசூடி வெண்பா—இராமபாரதி

இரங்கேச வெண்பா—
* இராமாயண வெண்பா—குரவை இராமாநுஜ தாசர்
இராமாயண வெண்பா—சங்கத்தார்
இராமாயண வெண்பா—சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்
கலைசைச் சிலேடை வெண்பா—சுப்பிரமணிய சுவாமிகள்
குசேல வெண்பா—
குடந்தை வெண்பா—முருகேச பண்டிதர்
கோவல வெண்பா—ஸ்ரீநிவாஸாசாரியார்
சாவித்திரி வெண்பா—சாமிநாத முதலியார்
சிங்கைச்சிலேடை. வெண்பா—நமசிவாயக் கவிராயர்
சிவ சிவ வெண்பா—சென்னமல்லையர்
சோமேசர் முதுமொழி வெண்பா—சிவஞான சுவாமிகள்
* திருக்குறள் உண்மை வெண்பா—
* திருக்குறள் திருத்தொண்டர் இணைப்பு வெண்பா—
தொட்டிக்கலைசை வெண்பா—சுப்பிரமணிய தேசிகர்
நல்லைவெண்பா—சேனாதிராச முதலியார்
நள வெண்பா—புகழேந்திப்புலவர்
நீதிவெண்பா—ஔவையார்
நெல்லைச்சிலேடை வெண்பா—வெ. பா. சுப்பிரமணிய முதலியார்
பகவற்கீதை வெண்பா—திருநயம் S. முத்துசுவாமி முதலியார்
பகவற்கீதை வெண்பா—வாதிகேசரி ஸ்ரீஅழகிய மணவாள ஜீயல்
பஞ்சகால வெண்பா—தெ. நாராயண ஐயர்
பாரத வெண்பா—பெருந்தேவனார்
புலியூர் வெண்பா—மாரிமுத்துப் புலவர்
மதுரைச் சிலேடை வெண்பா—மு. ரா. கந்தசாமிக் கவிராயர்
மயிலணிச்சிலேடை வெண்பா—முருகேச பண்டிதர்
முருகேச வெண்பா—
வினாவெண்பா—உமாபதி சிவாசாரியர்

அருணைச்சிலேடை வெண்பாமாலை—சிந்நயச் செட்டியார்
தணிகைச்சிலேடை வெண்பாமாலை—கந்தப்பையர்
புறப்பொருள் வெண்பாமாலை—ஐயன் ஆரிதனார்

வெண்பா நூற்கள்

* அரிச்சந்திர சரிதை—
இன்னிசை இருநூறு—சோழவந்தான் அ. சண்முகம் பிள்ளையவர்கள்
* கைந்நிலை—புள்ளங்காடனூர்
சிவஞான விளக்கம்—
சிவபோகசாரம—
நல்வழி—ஔவையார்
நன்னெறி—சிவப்பிரகாச சுவாமிகள்
நீதிநெறி விளக்கம்—ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
மூதுரை (வாக்குண்டாம்)—ஔவையார்
முத்தொள்ளாயிரம்—சங்கப்புலவர்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகத்தில் உள்ளவை :—

திரு வெண்பா—
பண்டாய நான்மறை—
திருத்தசாங்கம்—

பதினோரும் திருமுறையிலுள்ள வெண்பாக்கள் :—

அற்புதத் திருவந்தாதி—காரைக்காலம்மையார்
க்ஷேத்திரத் திருவெண்பா—ஐயடிகள் காடவர்கோன்
கபிலபாதி காளத்திபாதித் திருவந்தாதி—நக்கீரர்
திருவீங்கோய்மலை எழுபது—நக்கீரர்
கார் எட்டு—நக்கீரர்
சிவபெருமான் திருவந்தாதி—பரணதேவர்

நாலாயிரப் பிரபந்தத்தில் உள்ள வெண்பாக்கள் :—

முதல் திருவந்தாதி—பொய்கையாழ்வார்
இரண்டாந் திருவந்தாதி—பூதத்தாழ்வார்
மூன்றாந் திருவந்தாதி—பேயாழ்வார்
நான்காந் திருவந்தாதி—திருமழிசைப்பிரான்
பெரிய திருவந்தாதி—நம்மாழ்வார்

அருணகிரி யந்தாதி—குகை நமச்சிவாயதேவர்
திருக்கருவை வெண்பா வந்தாதி—அதிவீரராம பாண்டியர்
திருவேங்கடமாலை—பிள்ளைப் பெருமாளையங்கார்
நூற்றெட்டுத திருப்பதியந்தாதி— ,,
பந்தன் அந்தாதி—ஔவையார்
உபதேச ரத்தினமாலை—ஸ்ரீமணவாளமாமுனி
திருவாய்மொழி நூற்றந்தாதி— ,,

ஞானசாரம்—அருளாளப் பெருமாளெம் பெருமானர்
அறநெறிச்சாரம்—முனைப்பாடியார்
பதார்த்தகுண சிந்தாமணி—(வைத்தியம்) சித்தர்

இவை யன்றியும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த பதினெட்டு நூற்களும் வெண்பாக்களே. இவை வெண்பாவின் இனமாகிய குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா முதலிய யாப்புகளால் இயற்றப்பட்டவை. இவற்றின் பெயரும் ஆசிரியர் பெயரும் வருமாறு:—

நாலடியார்—சமணமுனிவர்
நான்மணிக்கடிகை—விளம்பிநாகனர்
இனியவை நாற்பது—பூதஞ்சேந்தனர்
இன்னா நாற்பது—கபிலர்
கார் நாற்பது—கண்ணங் கூத்தனர்
களவழி நாற்பது—பொய்கையார்
ஐந்திணை ஐம்பது—மாறன் பொறையனர்
திணைமொழி ஐம்பது—கண்ணஞ் சேந்தனர்
ஐந்திணை எழுபது—மூவாதியார்
திணைமாலை நூற்றைம்பது—கணிமேதாவியார்
திருக்குறள் (முப்பால்)—திருவள்ளுவ நாயனர்
திரிகடுகம்—நல்லாதனர்
ஆசாரக்கோவை—பெருவாயின் முள்ளியார்
பழமொழி—முன்றுறையரையனர்
சிறுபஞ்சமூலம்—காரியாசான்
இன்னிலை—பொய்கையார்
முதுமொழிக் காஞ்சி—
ஏலாதி—கணிமேதாவியார்

* இக்குறியிடப்பட்டவை அச்சிடப்படாதவை. சங்கத்தார் இயற்றிய இராமாயண வெண்பா இப்பொழுது கிடையாது. அரிச்சந்திர சரிதை யென்பது தொன்மையான நூல் என்றும் கவிச்சுவையுடையதென்றும் தெரிகிறது. அச்சிடப்படாத இந்நூற்களை யறிவித்த தமிழ்ப் பண்டிதர் திரு. துரைசாமி ஐயர் அவர்களுக்கு எமது வந்தனம். இந்நூற்களை அச்சுவாகன மேற்றிப் பலருக்கும் பயன்படச் செய்வது தமிழ்க் கழகங்களின் கடமையாகும்.

☞ இங்கு குறிப்பிடாத வேறு வெண்பா நூற்களுளவேல், அன்பர்கள் "லக்ஷ்மி" பத்திரிகையில் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

கலிவெண்பா யாப்பில் அமைந்த நூற்கள் தமிழில் ஏராளமாக வுள்ளனவாதலால் அவற்றின் பெயரைத் தனியே தொகுத்தெழுதுவாம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் ... 600 008

கல்வியும் மதமும்

(ஸ்ரீமாந் பா. ஆதிமூர்த்தி எழுதியது)

கல்வியும், மதமும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் சம்பந்த முள்ளவை என்பதை ஆராய்வதே இந்த வியாசத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த முக்கியமான ஆராய்ச்சியின் பலனால் மனிதன் மிகுந்த அறிவும், விவேகமும், ஞானமும் உள்ளவனாகலாம்.

மனித வாழ்வின் பிரதான அம்சங்களில் இந்த இரண்டும் வெகு தூரம் சம்பந்தப் பட்டிருப்பதாக நாம் அறிவதால், பதார்த்தங் களின் உருசிகளை மனிதன் ஏற்கனவே தெரிந்து வைப்பதினால் அடையும் பலன்களுக்குச் சமானமாகவாவது அல்லது அவற்றிலும் மேலானதாகவாவது இதைச் சொல்லலாம்.

எமது அபிப்பிராயப்படி கல்வியானது மனித சமூகத்தில் பரவ ஆரம்பிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே மதம் மனித சமூகத் தைக் கைப்பற்றி ஒரு அன்னிய அரசாட்சியானது, தனக்குச் சம்பந்த மில்லாத ஒரு நாட்டைக் கைப்பற்றி, ஆண்டு வருவது போல் ஆண்டு வரத் தொடங்கி விட்டது என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை. ஆனால் இந்த மத அந்நிய ஆட்சியானது நாம் உதாரணமாக எடுத் துக் கொண்ட அன்னிய நாட்டாரின் ஆட்சி போலன்றி, களங்கமற்ற மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்து, இரத்த சம்பந்தத்தை யடைந்து விட்டதென்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். "மஹாமாயையானது மனித வர்க்கத்தை வென்று, அவ் வர்க்கத் துடன் ஒன்று படக் கலந்து, வாழ்வின் எல்லாப் படிகளையும் தனக் குச் சுவாதீனமாக்கிக் கொண்டு விட்டதாகவும், ஆகையால் வாழ்வு இருட்டில் தடவி நடமாடுவது போலிருப்பதால், ஞானமாகிய சூரியன உதித்தாலன்றி இந்த மாயை நீங்க மாட்டாதென்றும்," நமது வேதாந்திகள் தங்கள் கொள்கைகளை ஸ்தாபிப்பதற்கு ஆதர வாகக் கூறுவதை இவ்வியாசத்தைப் படிக்கும் நண்பர்களுக்கு நாம் ஞாபகப் படுத்துகிறோம். ஏனெனில் கீழே வரப் போகும் ருசிகர மான விஷயத்தைப் படித்து மனதில் அமைத்துக் கொள்வதற்கு இந்த உதாரணம் மிகுந்த உதவி புரியும் என்பது எமது நம்பிக்கை யாகும்.

இனி இச் சொற்றொடரின் முதல் விஷயமாகிய கல்வியின் மானிட சம்பந்தத்தைப் பற்றிச் சற்றுராய்வோம்.

கல்வியானது மனித வாழ்வின் ஆராய்ச்சியின் சிருஷ்டிப் பலனே யன்றி வேறன்று. மனிதன் தன்னாராய்ச்சியால் சிறுகச் சிறுகப் பல்லாண்டுகளாகக் கண்டு பிடித்த பல உபயோகமான விஷயங்களில் முக்கியமானதே கல்வியாகும். ஆராய்ச்சிக்குக் கல்வி யென்று பெயர் நாம் கொடுப்பது தப்பிதம் என்று அறிவோமாகை யால் வரி வடிவெழுத்துக்கள் உண்டான நிமிஷத்திலிருந்தே நமது பரிசீலனையின் மூல தத்துவங்கள் ஆரம்பித்ததாகக் கொள்வோமாக,

ஏனெனில் கண்டு கொண்ட விஷயங்களை வாயால் சொல்வதி னால் மட்டும் பூர்த்தியையும், நிலைத்தல், என்ற பதவியையும் அடைய மாட்டாது. மறக்காமலும், நேரிலில்லாதோர் அறியுமாறும், மற் றோரும், பிற்சந்ததியாரும் அறிந்து அபிவிருத்தி யடையுமாறும் நிலைக்கச் செய்தாலன்றிப் பயன் தரமாட்டாது. ஆகவே வரிவடி வின்றிக் கூறப் படுவன ஆராய்ச்சியே யாகும். கல்வியாக மாட்டாது.

இக்கல்வி எப்பொழுது இவ்வுலகத்தில் பரவத் தொடங்கிற்றோ அதுமுதல் இது காறும் வழுக்களகற்றித் திருத்தப்பட்டும், விருத்தி செய்யப்பட்டுக் கொண்டும் வருகிறது. இது மேல் நிலை யடைய அடைய மானிட புத்திக்குப் பிரகாசமும், அறியாமையின் அழிவும், அபிவிருத்தியடைந்து கொண்டு வருகிறது. இவ்வபிவிருத்தி எக்கா லத்திலும் முடிவு என்பதை யடைய மாட்டா. ஆனால் அதற்கு மாறாக விரிவு, விருத்தி, தெளிவு என்ற பதவிகளை யடைந்துவரும்.

இந்நிலை மிகவும் போற்றத் தக்கதும் ஆனந்திக்கத் தக்கதுமாக விருப்பினும்; விரிவு, விருத்தி என்பவைகள் தப்பான உபயோகத் திற்குட் படுத்தப் படுமானால் அதன் பலன்கள் அநர்த்தம், அழிவு, ஆபத்து, அறிவீனம், அடிமை என்பன போன்ற தீமைகள் உண்டா கித் தீரவேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மனிதனது கண்களிரண்டும் ஒளி யிழந்து குருடனாகப் போன பிறகு அவனுடைய உத்தேசங்களும் வினைகளும் எப்படித் தொண் ணூற்றெட்டு பாகங்கள் பயன் படாது போய் விடுகின்றனவோ அது போல் கல்வியானது மேலே கண்ட அனர்த்தம் முதலாகிய வழி களுக்கு அடிமையாகும் நிலையை யடைந்து விட்டால் அம்மனித சமூகத்தின் வாழ்வில் தொண்ணூற்றெட்டு பாகங்கள் பயன்படாது போய் விடுகின்றன. இந்நிலைக்குத் தப்பிப் பிழைத்த மஹாபுத்தி சாலிகள் விழித்துக் கொண்டு, உலகத்தின் தப்பான வழிகளை யறிந்து, துக்கித்து, அத்துக்கம் தீரும் வழிகளைத் தேடுகின்றனர். இந்த நிலைமையிலும் ஆராய்ச்சியின் துணையைக் கொண்டே தங்கள் தப்பிதங்களை யறியத் தொடங்குகினறனர்.

“தொடங்குகின்றனர்” என்று கடைசியாக உபயோகித்த இந்த மொழியைத் தொடங்கி விட்டனர் என்று பொருள் கொள்ளத் தக்க காலம் இன்னமும் பூர்த்தியாக வராவிடினும் இச்சொற் றொடரின் ஆராய்ச்சிக்காக நாம் இங்கு தொடங்கிவிட்டனரென்று கொண்டு மேற் செல்வோமாக. கல்வியைப் பயன் படுத்தும் வினை களில் நாம் எவ்வினை பற்றி நடக்கிறோம் என்பதை இனிச் சற்று ஆராய்வோமாக.

இவ்வுலகத்தார் வரி வடிவான கல்வியைத் தேடிக் கண்டு கொண்ட தொடக்கத்தில் அதை எவ்விதங்களில் உபயோகிப்ப தென்று யோசனைசெய்தது வாஸ்தவமே என்ற போதிலும் அக் காலத்து மனித சுபாவப்படியும், சந்தர்ப்பங்களின் படியும் மிகுதிப்

பட்டு நின்றதாகிய பொதுவான வாழ்க்கை வினைகளிலேயே பெரும் பாலும் பயன் படுத்தி வந்திருத்தல் வேண்டும்.

அவ்விதம் பயன்படுத்தி வந்ததில் மற்ற விஷயங்கள் எழுதி வைக்கப்பட்டும், உபயோகப்படுத்தப் பட்டும் வந்தன. இவ்வாறு சென்று வரும் முறையில் தங்களுடைய வழக்கத்திலிருந்து வந்த "மதம்" என்ற கொள்கைகளுக்கும் "இக்கல்வி"யை உபயோகிக்கும் சமயங்கள் அடிக்கடி நேரிட்டும் நேரிட்ட வண்ணமே சிறுகச் சிறுக "மத உபயோகங்கள்" பலமடைந்த மத ஆராய்ச்சியும், மதப்பதி வும், மதவிதியுமாக வினைகள் அபிவிருத்தி யடைதல் போல் கல்வி யின் உபயோகமும் மிகப்பெருகத் தொடங்கிற்று.

அவ்வாறு தொடங்கிய பெருக்கம் பல்லாண்டுகளாக வாக அபார மாகப் பலபல கிளைகளைக் கொண்டு பூரணமாக அல்லது தொண்ணூற் றெட்டுப் பங்குகள் வரையும் கல்வியானது மதத்திற்கே பயன் படுவ தாயிற்று.

இவ்வாறு வளர்ந்த கல்வியின் வளர்ச்சியையும் அவற்றின் பல னையும் நாம் இப்பொழுது தூக்கிப் பார்த்து மதிப்பிட்டு வரத் தொடங்கி விட்டோம்.

உலகத்தின் மற்ற நாடுகளின் மதக்கல்வி எவ்வளவு தூரம் அபி விருத்தி யடைந்திருக்கிற தென்ற விசாரணை இவ்வியாசத்தின் நோக்கமல்ல வாகையால் அவைகளை நிற்கச்செய்து நமது பாரத நாட்டில் கல்வியை மதத்திற்காக எவ்வளவு உபயோகப்படுத்தி யிருக் கிறார்கள் என்பதை இங்கு ஆராய்வோம் :—

இந்த ஆராய்ச்சிக்கு இரண்டே வழிகள் தான் இருக்கின்றன. அவை :—மதத்தைப் பற்றி எழுதப்பட்ட ஏராளமான நூல்கள், தொழப் பட்டுவரும் கோவில்களின் எண்ணிக்கை, உற்சவங்களின் அபிவிருத்தி, ஜாதி வித்யாசங்கள், தனி மனிதனுடைய மதாசாரங் கள் முதலியன. இதுவே முதல்வழி. மற்றொன்று இந்த மதங்களா லும், இவைகளைச் சேர்ந்த காரியங்களாலும், நாம் அடைந்த நலன் கள். ஆக இந்த இரண்டு வழிகளைக் கொண்டு தான் ஆராய வேண் டும்.

நமது காலத்தையும், வினையையும், சிரமத்தையும் வீணாக்கிக் கொண்டு பெரும் புறக்கடல் போலும், மூல டமைம் போலும், விரிந்த முதல் வழியைக் கொண்டு நாம் பரிசிலனை செய்து நிச்சயிப்பதை விட இவற்றின பயன்களைத் தூக்கிப் பார்ப்பதாகிய இரண்டாவது வழி யைக் கொண்டே நாம் ஆராயத் தொடங்குவோமாக. ஏனெனில் அதுவே "மதத்தின் பயன்."

இவ்வாறு பரிசீலனை செய்யத் தொடங்கு முன் "மதம்" என்ற வினை அல்லது கொள்கையின் பிறப்பையும், வளர்ச்சியையும் விளக் கும் சரித்திர ரகசியங்களைப் பற்றிச் சற்று கூறுவோமாக.

லக்ஷ்மி

உலக சிருஷ்டியின் ஆரம்பத்தில் மனிதர்கள் எந்த நிலைமையில் இருந்திருப்பார்கள் என்பதை அறிவினுல் மதிக்கும் சாஸ்திர வல்ல வர்கள் தற்காலத்து மிருகங்களின் நிலையிலும், வரவரப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்த பின் குரங்குகளின் நிலையிலும் காலங் கழித்துக் காலம் மாற மாற அல்லது தாண்டத் தாண்ட மானிட உருவத்தைப் பூர்த்தியாக அடைந்த பின்னிருந்து தான் நமது ஆராய்ச்சிக்குத் துணையாக இம்மனிதவர்க்கத்தை யெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இந்த நிலைமையில் மானிட வர்க்கம் பல்லாயிர மாண்டுகள் வாழ்ந்து கழித்து, அவ்வாழ் நாட்களின் அனுபவத்தால் சிறிது சிறிதாக "நினைப்பு" என்ற வினைக்குத் தகுதியானவர்களாக மாறி வளர்ந்தனர். அவ்வளர்ச்சியில் உயிர்ப் பயமும், வலி பொருமையும், மரணத்தால் "இல்லாமற் போவ"தாகிய அழிவும், அனுபவத்தில் கூடவே வந்ததால் இவைகளும், இவைகளைப் போல பல காரணங் களும் பலனாக "பயம்" என்ற சுபாவமும் வளர்ந்து வரத் தொடங் கின. இந்தப் "பயமே" ஜனங்களுக்குள் மதம் என்ற பற்றுதல் அல்லது நம்பிக்கைக்கு அஸ்திபாரமாக விருந்தது.

இந்தப் பயத்தால் பீடிக்கப் பட்ட ஜன சமூகம், அப்பயத்தை விட்டுத் தப்புவதற்குப் பல முயற்சிகளைச் செய்ததில், ஒன்றுமே பலன் தராததாகிக் கடைசியாக மதங்களைத் தங்கள் அழுக்குள்ள, மயக்கமான, அனுபோகத்தால் நம்பத் தொடங்கினர். பாஷையின் வரிவடி வழகு, சப்தத்தின் சத்தி, சொற்கோர்வையின் அழகு, சொற் சேர்க்கையின் பொலிவு, மொழி அல்லது மொழிகளின ஐக் கிய சக்தி, ஆகிய இயற்கை வல்லமையுண்டாக வேண்டுமானுல், அம் மொழியானது உண்மையை யுரைப்பதாக மட்டு மிருத்தல் வேண்டும். ஒரு பாஷையின் சொற்ருெடர் பொய்மையை யுரைப்பதாயின், அம் மொழிகளின் அழகு குன்றி நசிப்பதில் தடையொன்று மிராது. ஆகவே உண்மையை விளக்கிக் காட்டிப் போற்றுவதே மொழியல் லது "கல்வி"யின் கடமையாகும்.

இத்தகைய கடமைக்காக ஏற்பட்ட அல்லது உண்டாக்கப் பட்ட "கல்வி"யானது எங்கு மதத்துடன் கலக்கப் பட்டதோ அந்த நிமி ஷம் முதலே அம்மதத்தின் இயற்கை யுருவாகிய பொய்யுடன் கலந்து கல்வியின் உருவமே பொய்யாகி, ஒளி மழுங்கித் தோன்றலாயின. கல்வியின் சிறப்பிலக்கணங்களா லுண்டான கவி, வசனம், கீதம் ஆகிய மூன்றும் மதத்தின் உருவத்தில் கலந்து உண்மை நீங்கத் தோன்றுவதாயிற்று. இக்காரணததால் அக்கல்வியைக் கற்பவர் மனதும் எண்ணங்களும் வினைகளும் பொய் கலந்த தாயின.

எது எப்படிப் போயினும் எங்கு மனித வர்க்கத்தின் மனங்களும், வினைகளும், பொய் கலந்ததாயிற்ருே அப்பொழுதே அவ்வினைகளின் பலன்களும் பொய்ப் பிழம்பாய்த் தோன்று மென்பதில் சந்தேக மென்ன ?

கல்வியும் மதமும்

மதத்தின் அஸ்திபாரம் வேறெந்தப் பலங்கொண்ட பதார்த்தத்தாலும் கட்டப் படவில்லை, மிகவும் பரிசுத்தமான "பொய்யினுல்" மட்டும் கட்டப் பட்டிருக்கிறது. இப் பொய்க்கோட்டை தன் பலமற்றதாக விருப்பதால் அறிவு, ஆராய்ச்சி என்ற ஆயுதங்கள் கஷ்டமின்றித் தகர்த்து விடுகின்றன. இவ்விதம் பொய்யாற் கட்டப்பட்ட மதக்கோட்டை தகர்ந்துபோவதில் ஜனசமூகம் துக்கப் பட்டதாகி அப்பொய் கோட்டையை எப்படியும் நிலை நிறுத்துவதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பதில் பல்லாண்டுகள் முயன்று தோல்விக்கு மேல் தோல்வியை ஏற்றுக் கொண்டன. இவ்விதம் அனுபவித்த பழக்கத்தால் பல்லாண்டுகள் பல பல வழிகளிலும் விடா முயற்சி செய்து வரலாயினர்.

இங்கிலேயிலும் பன்னூறுண்டுகள செல்லுங்காலையில் தங்களைச் சுற்றி எத்துறையிலும் கோடிசூரியப் பிரகாசத்துடன் தோன்றித் தழைத்து வரும் "கல்வி"யின் ஞான அலைகள் தங்கள்மீது தாக்குவதை ஜனங்கள் உணரத் தொடங்கினர்.

நாசகாரியான மத மென்னும் நள்ளிருளில் தவிக்கும் ஜன சமூகம் சிறுகச் சிறுகக் கல்வி என்ற ஒளியை ஆனந்தத்துடன் ஏற்று அத்துறையை ஆராய்ந்து கற்கத்தொடங்கின.

தொடங்கியதும் அந்தக் கல்வியின் வல்லமையையும், தெளிவையும், ஆராயுந் திறத்தையுங் கண்டு ஆச்சரியப் பட்டு இக்கல்வியின் பெருந்துணையால் தங்கள் மதமாகிய பொய்க்கோட்டையை ஸ்திரமாக நிலை நிறுத்தலா மெனத் துணிந்தனர்.

இம்முயற்சியில் ஒன்று போல் பன்னூறுண்டுகள் மானிடவர்க்கம் செய்து வந்த வினைகள் தான் தற்போது நம் முன் தோனறும் மதப் பெருக்கின் உருவமாகும்.

இவ்வாறு கல்வியின் வல்லமையைப் பொய்யென்றும் மதத்தின் பெருக்கிற்குப் பயன் படுத்தியதால் கல்வியின் வல்லமையும், அழகும் குன்றியதோடு ஆராய்ச்சியின் நிலையும் தடைப்பட்டுத் தளறலுற்றன.

கல்வியும், ஆராய்ச்சியும் குன்றவே மனித சமூகம் முன்னிலும் அறிவின்மையில் ஓங்கி வளர்வதாயிற்று. எப்படி யெனில்:—

கல்வியின் உதவியற்றிருந்த முற்காலத்தில் ஜனசமூகம் அக்காரணத்தாலேயே அறிவற்ற மூடர்களாய்ச் சிருஷ்டிகால மனிதர்களின் சுபாவங்களை விடாதவராய் வாழ்ந்து வந்தார்கள். இதன் பின் அந்த ஜனசமூகம் கல்வியின் பயிற்சியை யடைந்தும் அக்கல்வியை நல்வழியில் பயன் படுத்தாது "மதம்" என்னும் பொய் வழியை வளர்ப்பதில் உபயோகித்ததால், "கல்வி" பொய்யின் ஆராய்ச்சிக் கிடுபட்டு பொய்யின் பலனுகிய அறிவின்மை முன்னிலும் வேரூன்றி விரிவுடன் வளர்வதாயிற்று.

ஆகவே "சிருஷ்டி காலத்து" ஜனசமூகத்தை விடத் தற்காலத்து மதப் பற்றுள்ள ஜனசமூகம் மிகப் பழுத்த கற்றறிந்த மூழு மூட ஜன சமூகம் என்று கூறுவதில் நாம் சிறிதும் பயடபட வேண்டியதில்லை.

"ஓதியுணர்ந்தும் பிறர்க் குரைத்தும் தா மடங்காப்
பேதையிற் பேதையா ரில்"—(குறள்)

இங்ஙனம் மதம் தன் பொய்மையால் தன்னைத் தானே கெடுத்துக் கொண்டதன்றி, வல்லமையுள்ள பரிசுத்தமான கல்வியை அசுத்தமாக்கி ஜன சமூகத்தையும் அவிவேகிகளாக்கி விட்டமை மிகவும் துக்கிக்கத் தக்கதே யாகும். அன்றியும் கற்காத மதப்பற்றால் உண்டாகும் தீமைகளால் நிகழ்ந்ததும், நிகழ்வதும், நிகழப் போவதுமான கேடுகளை நினைக்கும்போது நமது மனம் பதறுமானால்; கல்வி கற்ற மதப்பற்றினால் செய்ததும், செய்யப் படுவதுமான பெருந் தீங்குகள் நமக்குண்டாக்கி வரும் கஷ்டங்கள் எவ்வகைத் தென்று நாம் நினைக்கவும் முடியாம லிருக்கின்றன.

இக்கற்ற மதத்தின் வல்லமை ஜனசமூகத்தின் வெளிவாழ்வையும், உள்வாழ்வையும் நாசமாக்கி வருகின்றன. இக்கேடுகளை விரிவாக எடுத் துரைக்க இந்த வியாசம் இடந்தரா தாகையால் அவைகளைப் படிப்போரே யூகித்தறியக் கடவர்.

இத்துக்க நிலையினின்று நம் நாட்டை மட்டு மன்று இவ்வுலகத்தையே காப்பாற்ற வேண்டும். இவ்வினை நன்கு படித்த விஞ்ஞானிகளின் கடமையாகும்.

ஐரோப்பிய நாடுகளில் பிரான்சு, ஜர்மனி, இட்டலி முதலிய அநேக நாடுகளும் அமெரிக்கக் குடியரசும் வெகு காலத்திற்கு முன்னரே மதத்தையும் கல்வியையும் வேறு வேறாகப் பிரித்திருக்கின்றன. என்றாலும் இந்தப் பிரிவினை மட்டும் பயன்படமாட்டாதென்று அவர்கள் தற்போது அறிந்து வருகிறார்கள்.

ருஷியாவில் மட்டும் எமது உண்மைக்கொள்கை அனுஷ்டானத்திற்கு வந்திருக்கிறது மிகவும் விவேகிகளும், கற்றோரும், விஞ்ஞானிகளுமான "போல்ஷவிக்" அரசாங்கத்தாரை நாம் வாயாரப் புகழ்ந்து, மனதார வாழ்த்தி மகிழ்வோமாக. இச்சிறந்த சமரச ஞான அரசாங்கததை ஸ்தாபித்த மஹானாகிய காலஞ்சென்ற மஹாத்மா நிகோலாய் "லெனின்" இவ்வுலகத்திற்குக் காட்டிய இச்சமரச விஞ்ஞானத்தை எல்லா நாடுகளும் கைக்கொண்டு சுகித்து வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதனும் உதவி செய்ய வேண்டுவது அவசியமாகும். அம்மகானின் கீர்த்தியைக் கீழே கண்ட செய்யுட்கள் மிக அழகாக எடுத்துரைக்கின்றன.

மதமும் கல்வியும்

“ மஹாத்மா நிகோலாய் லெனின் ” செய்யுள்.

“ மானிடரில் யாவருளர் நின்னை நிகரான
        மனவன்மை திடம் மாறில் கலையில்
வானவரில யாவருளர் இவ் வுலகில்
        வந்தெளியர் வன் துயர் தகர்க்கும் வலிரியார்
ஏனை யுலகங்களினும் யாவருளர்
        தம்முயிரை யீந்தறம் நிறுத்து மியலார்
ஞாலமிருந்த விறலோய “ லெனின்”
        எனும் பெயர்கொள் சுத்ததவ சூர முனியே.

எண்ணியன வெண்ணிய விதம் பெறுவர்
        எண்ணியவர் ஏற்றமுறு திண்ணிய ரெனில்
மண்ணிலுறு மானிடரி லென்று
        திருவள்ளுவர் வகுத்த வுரை வாழும் வகையே
புண்ணுறு சிறைக்குள் நினை வுற்றபடி
        பிறபகல் புரிந்தனை புகழ்க்கு முரியோய்
தண்ணளி தனக குறையுளான “ லெனின் ”
        எம்மிறை தனித்திற முரைத்த லெளிதோ.

வாழியுன தாளுகையும் வாழியுன தாரணமும்
        வாழியுன தன்பர் குழுவும்
ஆழி யுலகுள் ளளவும் ஆரியர்க ளுள்ளளவும்
        ஆவி நிலையுள்ள வரையும்
ஏழினொடு மேழுலகும் ஈடகலும்
        வானவரும் எவ் வுயிரு முள்ள தனையும்
ஊழினொடு மூழிவருடங்க ளழியாத
        புகழூற்றற முயர்ச்சி யுறவே.”

இத்தகைய விஞ்ஞான சமரச ஞானிகளின் வினைகளால் பரிசுத்தம் மறுமுறை உலகத்தில் பிரகாசித்து வரத் தொடங்கி விட்டது, இனி வரும் உலகத்திற்கு இஃதொரு பாக்கியமே யாகும்.

நம் நாட்டின் தற்போதுள்ள நிலைமையில் “மதத்தை யழித்து கல்வியைப் பெருக்கிக்கல்வியின் சுத்தத்தையும் கற்பையும் காப்பாற்ற வேண்டியது” மிகவும் அவசியமும் அவசரமுமாகும். இப்பெருந் தொழில் வேறொரு அந்நிய நாட்டாரால் செய்து முடிக்குந் தரத்ததன்று. நாமே செய்தல் வேண்டும். ஏனெனில் “ மதம்” மனித வாழ்விற் கின்றியமையாத தன்று என்பதை மறத்தல் வேண்டாம். இன்றியமையாமை எம்மதிக்கும், எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும் சிறப்புடைத்தாகும். “ மதம் ” “ கல்வி” ஆகிய இவ்விரண்டினும் மதம் இன்றியமைவதாகும். கல்வி இன்றியமை யாமையாகும். பொய்மையும், உண்மையும், ஜன சமூகத்தால் வெறுக்கவும் விரும்பவும் தக்கன. மதம் பொய்மையையும், கல்வி உண்மையையும் தழுவி நிற்பதால் மதம் வெறுக்கத் தக்கவையே.

லக்ஷியம்

இவ்வுலகத்தில் எக்காலும் பற்றுக்கோடாயுள்ளது உண்மையே யாகும். உண்மையின் பற்றுக்கோடின்றி எவ்வினையும் ஆற்றுத லரிது. பொய்மையும் உண்மையின் பற்றுக்கோட்டைத் துணைகொண் டே உலகத்தில் பிரகாசிக்கத் தகுதி யுடையதாகிறது. பச்சைப் பொய் வெளியிற்றோன்றும் போது வெறுக்கப்படுவதால் உண்மை யின் உதவியைக் கொண்டே உண்மை போல் நடித்துக் காட்டுகின் றன. இவ்வினைக்குள்ள பல உதாரணங்களை நாம் அறிவோமெனினும் மதமாகிய பொய், கல்வி என்ற உண்மையின் பற்றுக்கோட்டைக் கைகொண்டே உலகத்தில் சஞ்சரித்து வருவதை நாம் கண் கூடா கப் பார்ப்பதால் இச்சிறந்த உதாரணமே மிகுதியும் போதுமான தென மதிக்கிறோம்.

ஆகவே மதமின்றி ஜன சமூக வாழ்வு தடைபட்டு நிற்பதன்று. கல்வியின்றித் தடைபடுதல் மட்டுமன்று உலகமே யழிந்துபோகவும் கூடும். ஏனெனில் ஒன்று இன்றியமைவது, மற்றொன்று இன்றி யமையாதது. ஆகவே மதமும், கல்வியும் வேறு வேறாகப் பிரிக்கப் பட வேண்டியது மட்டுமன்று. பொய்யான மதமே மனிதவாழ்க் கையினின்றும் அழிக்கப் படல் வேண்டும். அழிவதால் சுயம் பிர காசமுள்ள கல்வி தன் பரிசுத்தத்தை யடையும். பொய்ப் புராணங் களும், பிதற்றுதலுள்ள வேதக் கூக்குரல்களும், மாயத் தெய்வங்க ளான கல்லுருவங்களும் இல்லாதொழியும். மனித வினைகளைப் பொய்யாக்கி வித்தியாசத்தையும், பிரிவினைகளையும் உண்டாக்கி வரும் "ஜாதிகள், தீண்டாமை," என்ற பெருங் கேடுகள் அழியும். மனித ஜாதியின் உட்கருமங்களும் வெளி வினைகளும் பொய்யற்று இயற்கை நிலைமையை யடையும். இவை மட்டுமன்று பயம், சந்தேகம், அறி வின்மை, ஏமாற்றம், களவு, மோசம், வேஷம், கள்ள நடிப்பு, முதலிய கொடிய தீமைகள் இவ் வுலகத்தை 'விட்டொழியும். உல கம் ஆனந்த வாழ்வை யடையும்.

இங்ஙனம் இன்றியமையாத தான "மத நாசஞ் செய்தலா"கிய புண்ணிய வினையை ஒவ்வொரு விவேகியும் தங்கள் கடமையாகக் கொள்ளல் வேண்டிய காலம் இதுவே யாகும்.

இதையே உண்மையான கல்வி யென்றும், "உயர்ந்த தேசாபி மானம்," என்றும் அறிவுடையோர் கூறுவர்.

வெண்பா.

"மதமு மதக்கலையும் மானிடரின் வாழ்நாளைச்
சிதையப் புரிந்து மவர் தேராரே—நிதமுந் தான்
ஆராயுங் கல்வி அறிவரிய விஞ்ஞானம்
பாரா தழிந்து படுவார்."

வந்தே மாதரம்.



குணபரன்.

முதலாவது மகேந்திர வர்மன், கி.பி. 600-625.

அவுரங்கசீபின் விவாகம்

(ஸ்ரீமாந் வே. சாமிநாத சர்மா எழுதியது.)

ஷாஜஹானின் மூன்றாவது புதல்வனாகிய அவுரங்கசீப் இளமை முதல் வீரமுள்ளவனாகவும் எதற்கும் சலியாத மனவுறுதியுடையவனாகவும் விளங்கிவந்தான். தன்னுடைய மற்றச் சகோதரர்களைக் காட்டிலும் தனக்கு அதிக திறமை யுண்டென்ற எண்ணம் இவன் மனதில் பாலியம் முதல் குடி கொண்டிருந்த தென்று கூறலாம். 1635-ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதன் முதலாக அவுரங்கசீப் யுத்தகளத்திற்கு அனுப்பப் பட்டான் என்று சென்ற மாதச் சஞ்சிகையில் கூறினோம். பண்டேலர் என்ற ராஜ புத்திர வமிசத்தவரைச் சேர்ந்த ஜுஜ்ஹார் சிங் என்பவன் ஷாஜஹானால் ஒரு முறை தோற்கடிக்கப் பட்டிருந்தான். இங்ஙனம் தோல்வியுற்றிருந்தும் இவன், கோண்ட் சமஸ்தானத்தின் மீது படையெடுத்து அச்சமஸ்தானத்து மன்னனைக் கொலை செய்து சுமார் பத்து லட்ச ரூபாய் பெறுமான சொத்துக்களை கைப்பற்றிக்கொண்டதோடு அவன் நாட்டின் ஒரு பகுதியையும் வசப்படுத்திக் கொண்டான். கொலை செய்யப் பட்ட மன்னனின் புதல்வன் தன்னை ஆதரிக்கும் படி ஷாஜஹானை வேண்டிக் கொண்டான. ஆனால், ஷாஜஹான், பண்டேலர் கைப்பற்றின நாட்டிற்குச் சமமான ஒரு பகுதி நாட்டையும் பத்து லட்ச ரூபாயையும் தனக்குக் கொடுத்து விட்டால், கொலை செய்யப் பட்ட கோண்ட் சமஸ்தானத்து மன்னனின் புதல்வனுடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை என்று ஜுஜ்ஹார் சிங்குக்குத் தெரிவித்தான். க்ஷத்திரிய வீரம் நிறைந்த ஜுஜ்ஹார் சிங், ஷாஜஹான கோரிக்கைக்கு இணங்கவில்லை. எனவே இருவருக்கும் பெரும் போர் மூண்டது. இப்போரிலேயே அவுரங்கசீப் மொகலாயர் பக்கத்தில் முதன் முதலாகச் சேனாதிபத்தியம் வகித்தான். பண்டேலர்கள் தோற்றுப்போனார்கள். ஜுஜ்ஹார்சிங்கும் அவன் குமாரன் விக்கிரமஜித்தும் கோண்டர்களால் கொலை செய்யப் பட்டார்கள். இந்த யுத்தத்தில் வெற்றி பெற்ற அவுரங்கசீப் தகப்பனால் பெரிதும் பாராட்டப்பட்டான் என்பதைக் கூறவேண்டுவதில்லை. உடனே அவுரங்கசீப் தட்சணத்து இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டான். 1636ம் வருஷம் ஜூலை மாதம் பதினான்காந் தேதி முதல் 1644ம் வருஷம் மே மாதம் இருபத்தெட்டாந் தேதி வரை இப்பதவியை இவன் திறமையுடன் வகித்து வந்தான. இவன் இப்பதவியை ஏற்கு முன்னரே, கோல்கொண்டா, பிஜபூர் முதலிய சமஸ்தானங்கள் மொகலாய ஆதிக்கத்துக்குட் பட்டிருந்தன. அவுரங்கசீப், இராஜப்பிரதிநிதி பதவியை ஏற்ற பிறகு பாக்லானா ஜில்லாவில் ஆண்டு கொண்டிருந்த இராஜ புத்திரரைத் தோற்கடித்தான; சிவாஜியின் தகப்பனான ஷாஜியை வணக்குவித்தான். இங்ஙனம் மொகலாய ஆட்சியின் செல்வாக்கைப் பரப்பினதுடன், இராஜ்ஜியத்தின் விஸ்தீரணத்தையும் பெருக்கினான். தட்சணத்து இராஜப பிரதிநிதி

பதவியை வகிக்க ஆரம்பித்த அடுத்த ஆண்டிலேயே அவுரங்கசீபுக்கு விவாகம் நடைபெற்றது. அக்பர் கால முதற்கொண்டு மொகலாய சமஸ்தானத்தில் கௌரவமான பதவிகளை ஓர் உயர்குடும்பத்தினர் வகித்து வந்தனர். அந்த உயர் குடும்பத்தைச்சார்ந்த ஷா நவாஸ்கான் என்பவனுடைய குமாரத்தியான தில்ராஸ் பானு பீகம் என்னும் கட்டழகு வாய்ந்த பெண்மணி, அவுரங்கசீப்பின் மனைவியாக நிச்சயிக்கப் பட்டிருந்தாள். 1637ம் வருஷம் ஏப்ரல் மாதம் பதினைந்தாம் தேதி, தன் விவாகத்தின் பொருட்டு அவரங்கசீப் ஆக்ரா வந்து சேர்ந்தான். எவ்வித ஆடம்பரமுமின்றித் தன்னை உடனே வந்து காணுமாறு ஷாஜஹானும் அவனுக்கு அன்பு நிறைந்த ஒரு கடிதம் எழுதிபிருந்தான். மறுநாள் குமாரனும் தந்தையும் சந்தித்துக் கொண்டார்கள். இக்காலத்தில் உள்ளம் நிறைந்த அன்போடு இருவரும் அளவளாவினர் என்பதில் ஐயமில்லை. மே மாதம் எட்டாந் தேதி விவாக முகூர்த்தமென்று சோதிடர்கள் நிச்சயித்திருந்தார்கள். அதற்கு முதல் நாள் அதாவது ஏழாந் தேதி ஹினாபத்தி என்ற சடங்கு நடை பெற்றது. அதாவது மணமகனுடைய கைகளிலும் கால்களிலும் ஹினா என்ற ஒரு வஸ்துவிலிருந்து உண்டாகும் சிவப்பு நிறமுள்ள ஒரு திரவ பதார்த்தசத்தைத் தடவுவதாம். பெண்வீட்டார் இந்த ஹினா என்ற திரவ பதார்த்தத்தை ஊர்வலமாகப் பிள்ளை வீட்டுக்கு அனுப்புவது வழக்கம். அங்ஙனமே, அவுரங்கசீப் விவாசத்தின் போதும் நடைபெற்றது. ஆண் பெண் வேலைக்காரர்களும் சங்கீதக்காரர்களும் ஊர்வலத்துடன் வந்தார்கள். மண மகனுக்கு வேண்டிய அழகிய ஆடை ஒன்றும், வாசனைத் திரவியங்களும் சர்க்கரையும், பல வகைப் பழங்களும், வெற்றிலை பாக்கு முதலியவைகளும் வேறு பல பொருள்களும் ஊர்வலத்துடன் வந்தன. வாணவேடிக்கை நடைபெற்றது.

அரண்மனையின் அந்தரங்க மண்டபத்தில் (திவானி. யி. காஸ்) ஹினா பந்தி என்ற சடங்கு நடைபெற்றது. ஸ்திரீகள் திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு மணமகனுடைய கால்களிலும் கைகளிலும் ஹினாவைப் பூசினார்கள். பிறகு, அவுரங்கசீப், தனது விருந்தினரை—ஆண்களை மட்டும்—வரவேற்று உபசரித்தான். நன்றாக அலங்கரிககப் பட்டிருந்த அந்த மண்டபத்தில் வரிசையாக வழங்கப் பட்ட யாவும் அனைவரும் பார்க்கும் பொருட்டுப் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. எல்லாருக்கும் வாசனைத் திரவியங்களும தாம்பூலமும் வழங்கப் பட்டன. மண்டபத்திற்கு வெளியே வாண வேடிக்கைகள் நடந்துகொண்டிருந்தன. ஆட்டக் கச்சேரி ஒருபுறம்; பாட்டுக் கச்சேரி ஒருபுறம், சித்திரிக்கப் பட்ட திரைகளுக்குப் பின்னால் ஸ்திரீகள் இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இவை யாவும் முடிந்த பின்னர் ஆடம்பரமான ஒரு விருந்து நடந்தது. மணமகனாகிய அவுரங்கசீப் நடுவண் அமர்ந்து சந்தோஷத்துடன் அனைவருடனும் சம்பாஷித்துக்கொண்டு விருந்துண்டான். இதனுடன் அன்றிரவு கழிந்தது.

அவுரங்கசீபின் விவாகம்

மறுநாள் இரவு விவாகம். பொழுது விடிவதற்கு நான்கு மணிக்கு முன்னால் முகூர்த்தம் நிச்சயிக்கப் பட்டிருந்தது. முகூர்த்தம் நடை பெறுவதற்கு நெடுநேரத்திற்கு முன்னரே, பரதம மந்திரியாகிய யாமினித்தௌலா அசப்கானும், மூரத்பக்ஷும், யமுனை நதிக்கரையிலிருந்த அவுரங்கசீபின் வாசஸ்தலத்திற்குச் சென்று, அவனை ஊர்வலமாக ஷாஜஹான் அரண்மனைக்கு அழைத்து வந்தனர். சக்ரவர்த்தியை விவாக புத்திரன் வணங்கினான். தகப்பன் ஆசீர்வதித்து, ஆடையாபரணங்களும், ஆயுதங்களும், யானைகளும், குதிரைகளும் பரிசிலாக அளித்தான்; அவுரங்கசீப் தரித்துக் கொண்டிருந்த தலைப் பாகையில், பவள சரங்களையும், விலையுயர்ந்த ரத்தின ஹாரங்களையும் அவன் முகம் மறைக்கும் படி தன்கையாலேயே சக்ரவர்த்தி கட்டினான். இங்ஙனம் முகமூடி போல் கட்டப் படுவதற்கு ‘சேரா என்று பெயர். சக்ரவர்த்தியின் அரண்மனையிலிருந்து அழகான, ஆடம்பரமான ஊர்வலம் புறப்பட்டது. மூரத்தும் யாமினித்தௌலாவும் வேறு பல ஆஸ்தானிகர்களும் அசுவத்தின் மீதமர்ந்து புடை சூழ்ந்து செல்ல, அவுரங்கசீப் முக்கியமான வீதிகளின் வழியே ஊர்வலம் வந்தான். இவ்வூர் வலத்தின் சிறப்பை யாரால் வருணிக்க முடியும்? ஹிந்துஸ்தானத்து பாதுஷாவின் குமாரனுக்கு விவாகம். அதிலும் வெற்றி வீரனாய் விளங்கும் அவுரங்கசீப்புக்கு என்றால் சொல்ல வேண்டுமோ? விளக்குகளின் வரிசையென்ன, வாண வேடிக்கையென்ன, சங்கீதக் கச்சேரிகளின் விமரிசையென்ன, இவைகள் யாவும் பார்ப்பவருடைய உள்ளத்தைப் பிரமிக்கச் செய்தன. இங்ஙனம் கம்பீரமாகச் சென்ற ஊர்வலம் பெண் வீடடைந்தது. பெண்ணின் தகப்பனாராகிய ஷாநவாஸ்கான் அனைவரையும் வரவேற்று உபசரித்தான். முகூர்த்தத்திற்குச் சிறிது நேரம் முன்னரே, ஷாஜஹானும் வந்து சேர்ந்தான். அவன் முன்னிலையில் முகூர்த்தமும் நடை பெற்றது.

விவாகச் சடங்குகள் யாவும் முடிந்த பிறகு மே மாதம் பதினான்காந் தேதி அவுரங்கசீப்பின் அரண்மனையில் ஓர் உபசரிப்பு நடை பெற்றது. ஷாஜஹானும் பிரசன்னமாயிருந்தான். சமஸ்தானப் பிரபுக்களுக்கும் பிறருக்கும் சன்மானங்கள் வழங்கப் பட்டன. பரிசு பெற்ற ஒவ்வொருவரும் முதலில் சக்ரவர்த்தியையும் பின்னர் மணமகனையும் வணங்கிவிட்டுச் சென்றனர். விவாகத்திற்கென்று வந்திருந்த அவுரங்கசீப், ஆக்ராவில் தன் தகப்பனாருடன் மூன்று மாதம் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருந்து விட்டுப் பிறகு செப்டம்பர் மாதம் நான்காந் தேதி தட்சணத்திற்குப் புறப்பட்டான்.

அவுரங்க சீப்புக்குப் பல மனைவியருண்டு. இவர்களைப்பற்றியும் அவனுடைய சுற்றத்தாரைப் பற்றியும் பிறிதொரு முறை எழுதுவோம்.

பால் உணவு

ஸ்ரீமாந் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை யவர்கள் எழுதியது.

பால் இயற்கை ஆகார மாகும். ஒவ்வொருவரும் பாலைப் பார்த்துஞ் சுவைத்து மிருக்கின்றோம்; ஆனால் அது மிகவும் விலையுயர்ந்த ஆகாரமாவ தெப்படி யென்பதைத் தெரிந்து கொண்டிருப்பவர்கள் மிகச் சிலரே யாவர். நாம் உண்டு அனுபவப் பட்டிருக்கிற பல வகை ஆகாரங்களில் பால் பூரண (perfect) ஆகார மாகும். அஃதெப்படி யெனின், இவ்வாகாரத்தில் நமது தேகவளர்ச்சிக்கும் சௌக்கியத்திற்கும் வேண்டிய சத்துக்களெல்லாம் தக்க அளவோடு சேர்ந்திருக்கின்றன. இவ்வாகாரம் குழந்தைகளுக்கும், நோயினால் மெலிந்தவர்களுக்கும், விருத்தாப்பியர்க்கும் அவசியமானதாகும். நெடுங் காலத்திற்கு முன்னிருந்த ஆயுள்வேத பண்டிதர்கள் "பாலுண்போம் எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்" என்றும் "பாலும் நெய்யும் மெய்க்குறுதி" என்றும் எல்லோரும் அனுசரிக்கும்படி பொதுவாகக் கூறியிருக்கின்றனர். நூலாராய்ச்சியுள்ள சில ஆங்கில வைத்திய பண்டிதர்கள், வயதில் மூத்தோர்களும் யௌவன பருவமடைந்த பிள்ளைகளும் தினந்தோறும ஒரு படி பால் சாப்பிட்டு வருவார்களானால், அவர்கள் இப்போதிருப்பதைப் பார்க்கிலும் மிக்க பலசாலிகளாயும், மிக்க ஆரோக்கிய முள்ளவர்களாயு மிருப்பார்களென்றுஞ் சொல்லுகின்றனர்.

பால் ஒரு விதத்தில் மாமிச ஆகாரமா யிருந்த போதிலும், அதனை மாமிச ஆகாரத்திற்கும் மரக்கறி ஆகாரத்திற்கும் நடுத்தரமாகச் சொல்லலாம; அவ்விரண்டினுடைய தேக வளர்ச்சியைத் தாத்தக்க குணங்களும இப் பால் ஒன்றினிடத் துண்டு; ஆகையால, சைவ போசனிகளுக்கு (vegetarians) அது முக்கியமான ஆகாரமாகும். அதிலிருந்துண்டாகுந் தயிர், மோர், நெய் முதலியவை அவர்கள் உண்ணும் தினசரி போசனத்தில் சாதாரணமாய் ஓர் நல்ல பகுதிகளாயு மிருக்கின்றன. அநேக அசர பதார்த்த போசனத்தில் தேகவளர்ச்சித் தேவையான சத்துக்கள் குறைந்திருப்பதால், அக் குறைவை மேலே சொல்லியபடி பால் நிறைவாக்குகின்றது.

பால் உணவு

பசும்பாலின் அளவும் தன்மையும் பல காரணங் களால் பலவாருக வித்தியாசப்படும்: அவையாவன,

(1) பசுவின் வயதுக்குத் தக்கதாகப் பால் வித்தி யாசப்படும்.

(2) பசுவின் முதல் ஈற்றுக்குப் பால் கொஞ்சமாக வும் பின்பு வரவர அதிகமாயு மிருக்கும்.

(3) கன்று பிறந்த உடனே பால் மிகவுங் கனத்ததா யிருக்கும். இந்தப் பால் வயிற்றுப் போக்கை யுண்டாக்கும் தன்மை யுள்ளது. இதனுல் கன்றின் 'குடலில் தங்கி யிருந்த கல்மிஷங்களெல்லாம் வெளியே தள்ளப் படுகின் றன. கன்றுக் குட்டியின் இளம் பிராயத்தில் பால் அதிகத் தண்ணீர் கலந்ததா யிருக்கும். பின்பு அது வளர வளரப் பாலில் தேக வளர்ச்சிக்கு அனுகூலமான கனத்த சத்துக் கள் அதிகப்படுவதினுல் பாலுங் கனத்த தாகிவிடும்; ஆகை யால், இளங் குழந்தைகளுக்கு இளங் கன்றையுடைய பசு வின் பாலே யேற்றதாகும்.

(4) காலையில் கறக்கப்படும் பாலில் தண்ணீர் குறை வாயும் கனத்த சத்துக்கள் அதிகமாயு மிருக்கும்.

(5) பசு தின்னுகின்ற தீனிக்குத் தக்கபடி பால் வித்தியாசப்படும். வைக்கோல் தின்னுகிற மாட்டுக்குப் பால் குறைவாயும் மதுரம் அதிகமாயு மிருக்கும். புல் தின்னுகிற மாட்டுக்குப் பால் அதிகமாயும் மதுரம் குறை வாயு மிருக்கும். பசு தகாத பொருள்களைத் தின்னுமாகில் பாலின் தன்மையும் ஒருவாறு கெடுதலடையும். பால் கறக்கப் போவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னே பசு அதிகத் தண்ணீரைக் குடித்திருக்குமாளுல், பின்பு கறக்கப் படும பாலில் தண்ணீர் கலந்து அதின் அளவு அதிகப்படும்.

(6) கடைசியில் கறக்கப்படும் பாலில் அதிக ஆடை யிருக்கும.

ஜனங்கள் பச்சைப் பாலையும் அதிகமாக உபயோகிக் கிறபடியால், அப் பால் வியாதி யில்லாமலிருப்பது நல்லதாகும்; அன்றியும், குழந்தைகளுக்குப் பல காலும் பாலே ஆகார மாகிறபடியால், அதனில் ஒன்றுஞ்

சேராமலும் அதினின்றும் ஒன்றும் பிரித்தெடுத்து விடாமலுமிருப்பது முக்கியமானதாகும். இச் சென்னையில் சாதாரணமாக விற்பனையாவது பசுப்பாலும், எருமைப் பாலுமாம். சில இடங்களில் ஆட்டுப்பாலும் விற்பனையாகின்றது. இவற்றுளெல்லாம் ஒரே விதமான சத்துக்கள் விரவியிருக்கின்றன; ஆனால் அச் சத்துக்களின் பிரமாணங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும். அடியில் வரும் அட்டவணையில் பாலின் அமைப்பும் அதனிலுள்ள சத்துக்களின் பிரமாணம் வித்தியாசப் படுவதைக் காட்டுகின்றது.

பாலின் அமைப்பைக்காட்டும் அட்டவணை.

100 பங்கில்	தசையை வளர்க்கும் சத்து Proheeds	கொழுப்பு Fats	பாற்சக்கரை Lactose	உப்பு Salt	தண்ணீர் Water
முலைப்பால்	2·29	3·81	6·20	0·30	87·40
பசும்பால்	3·55	3·69	4·88	0·71	87·17
வெள்ளாட்டுப்பால்	4·30	4·78	4·46	0·75	85·71

நாம் ஆகாரமாக அருந்தும் பால் பசுவினிடமிருந்து பரிணமிக்கின்றதானாலும் அதனைப் பரிசுத்தமும் பூசிக்கத்தக்கதுமான அமிர்தமென்று நாம் சொல்லுகின்றோம்.

அமிர்தமாகிய பால் சுத்தமாயிருக்கும்போது உத்தமமான ஆகாரமாகிறது; ஆனால், அது சுத்தமாயிரா விட்டால் நமக்கு அபாயத்தை விளைவிக்கும்.

பாலின்மூலமாய்க் கிருமிகள் போகின்றன.

பாலின் மூலமாய்ப் பல வியாதிக் கிருமிகள் போகின்றன. வியாதிக கிருமிகள் பாலில் விரைவாக வளர்கின்றன. பாலில் வியாதிக் கிருமிகளிருந்தாலும், அப்பாலின் சுவை சுத்தமான பாலின் சுவையினின்றும் வேறுபடுவதில்லை, பார்ப்பதற்கும் அதன் நிறம் மாறுவதில்லை. இரண்டு

புட்டியில் சிறிதும் வியாதிக் கிருமிகளில்லாத சுத்தமான பாலை நிரப்பி அவற்றுள் ஒரு புட்டியில் அதிசார சுரக் கிருமிகளைப் போட்டு அவ்விரண்டு புட்டிகளையும் பனிக் கட்டி வைத்திருக்கும் ஒரு பெட்டியில் 24 மணி நேரம் வைத்துப் பின் அவற்றை யெடுத்துப் பார்த்தோமானால் எந்தப் புட்டியில் கிருமிகளைப் போட்டோ மென்று சொல்ல முடியாது. அவ்விரண்டு புட்டிப் பாலும் அதே நிறமாயும் அதே சுவையாயு மிருக்கும். ஆனால், இவ் விரண்டு புட்டிப் பாலுக்கும் என்ன வித்தியாச மெனின், ஒரு புட்டியிலுள்ள பாலைச் சாப்பிடுவோ மாயின், முன் னிருந்ததைவிட அதிக பலத்தையும், தேக வளர்ச்சிக்கும் தேகத்தில் குறைந்துள்ள சக்திக்கும் வேண்டிய சத்துக் களையுங் கொடுக்கும்; மற்றொரு புட்டியிலுள்ள பாலைச் சாப்பிடுவோமானால் நாம் நோயாளிகளாகிப் பெருந் துன் பத்திற் குள்ளாவோம்.

வியாதக் கிருமிகள் பாலில் எவ்வாறு சேர்கின்றன?

பாலின் சுவையினாலும் நிறத்தினாலும் அப் பாலில் வியாதிக் கிருமிகள் இருப்பதையு மில்லாததையும் நாம் சொ ல்ல முடியா தாகையால், வியாதிக் கிருமிகள் பாலில் சேராதபடி நாம் நம்மாற் கூடியவரையும் விழிப்போ டிருத் தல் வேண்டும். இதற்காக வியாதிக் கிருமிகள் எங்கிருந்து வருகின்றன? அவை பாலில் எவ்வாறு சேர்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வது நம்முடைய முதற் காரிய மாகும்.

பாலில் வியாதிக் கிருமிகள் சேரும் வகை.

ஒவ்வொரு கறவைப் பசுவின் உடம்பின் மேலும் மடி யின்மேலும் அழுக்கு அதிகமாகவோ குறைவாகவோ ஒட்டிக்கொண்டிருக்கும். சில பசுக்களில் அதிகமாகவே யிருக்கும். பசுவைக் கறக்கும்போது, பசுவின் மடியின் மேலுள்ள அழுக்கு, பாத்திரத்தில் விழுகின்றது. இவ் வழுக்கில் பல விதமான கிருமிகள் அநேக மிருக்கலாம். அவற்றுள் அநேகம வியாதிக்குக் காரணமான கிருமிகளாக விருக்கும். (வரும்)

சூரிய வெளிச்சம்

சூரிய வெளிச்சம் அறியாத அதிசயப் பிரதேசங்கள்:— முயன்றவர்கள் இத்தள்ளும் சக்தியை உணர்ந்திருப்பார்கள். அப்போது காதில் ஏதோ ஓர் ஓசை கேட்கும். தலையிலும் மார்பிலும் பெருங்கனத்தை வைத்து அமுக்குவது போல் தோன்றும். இத்தகைய சக்தி கடலின் அடித்தரையில் அபாரமா யிருக்கின்றது. அங்கு ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் சராசரி 2½ டன் நிறையுள்ள சக்தி அமுக்குவதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. பள்ளங்களில் இச்சக்தி சதுர அங்குலத்திற்கு 5 டன்னுக்கு மேலே இருக்கின்றது.

ஒரு வெறும் கண்ணாடிக் குப்பியைத் தக்கையால் அடைத்து அதனுடன் கனமான பொருளொன்றைக் கட்டிக் கடலில் போட்டால் என்ன நேரிடும்? திரும்பக் குப்பியை மேலே தூக்கும் போது தக்கை நீரின் கனத்தினால் தாக்கப்பட்டு உள்ளே சென்றிருக்கும்; குப்பிக்குள் நீர் நிரம்பியிருக்கும். உள்ளே வெறுமையாயுள்ள கண்ணாடி உருண்டையொன்றை அவ்வாறு போட்டால் அது நசுங்கிப் போய் விடும். அல்லது அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத சிறு துவாரங்களின் வழியாகத் தண்ணீர் உள்ளே போயிருக்கும்.

கடலில் ஆழமான விடங்களிலுள்ள சில பிராணிகள் தாவரங்களைப் போல் காணப்படும். அவை அழகிய தோற்றத்தையும் பல வகை வர்ணங்களையும் கொண்டிருக்கும். அவற்றின் உடல் செடியின் அடித்தண்டைப் போல் விருக்கும். தலையில் நன்கு மலர்ந்த புஷ்பங்களைப் போன்ற பொருள்கள் விளங்கும். ஆயினும் இவை தாவரங்கள் அல்ல; பிராணிகள் தான். ஏனெனில் அவ்வளவு ஆழமான விடங்களில் தாவரங்கள் முளைப்பதில்லை.

பூமியின் வயது:—இதுவரையில் பூமிக்குப் பலர் பலவிதமாக வயது சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார்கள். முடிவாக இறுதியில் இப்பூமண்டலத்திற்கு வயது 100 கோடி என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

இப்பூமியின் மேற்பரப்பில் கிட்டத்தட்ட முக்காற் பாகம் நீரில் மூழ்கி யிருக்கிறது. பூமியின நிலப்பரப்பு சுமார் 57,000,000 சதுர மைல்; நீர்ப்பரப்பு 140,000,000 சதுரமைல். ஆனால் இத்தப்புள்ளி விவரத்தைக்கொண்டு ஆழகடலின விஸ்தாரத்தின் அளவை உள்ள படி உணர்தல் எளிதன்று.

உலகிலுள்ள பெரிய மலைகளைக் காண்போர் அவைகளின் உயரத்தை எண்ணிப் பிரமித்துப் போகின்றனர். ஆனால் கடல் மட்டத்திற்கு மேல் நிலத்தின் சராசரி உயரத்தை விடச் சமுத்திரத்தின் சராசரி ஆழம் ஐந்து மடங்கு அதிகமானதெனில் அஃது நமக்கு எவ்வளவு பிரமிப்பை யளிக்க வேண்டும்? பெரிய மலைகளையும்

சேர்த்துக் கணக்கிடுங்கால் கடல் மட்டத்திற்கு மேல் நிலத்தின் சராசரி உயரம் அரை மைலுக்கும் குறைவுதான். சமுத்திரத்தின் சராசரி ஆழமோ $2\frac{1}{2}$ மைலாகும். சமுத்திரத்தில் அரைவாசிப் பிரதேசத்தின் ஆழம் $2\frac{1}{2}$ மைலுக்கும் 4 மைலுக்கு மிடையே யிருக்கும். இஃதன்றிக் கடலில் சில விடங்களில் பெருங் குழிகள் இருக்கின்றன. இவற்றுள் ஏதேனு மொன்றில், $5\frac{1}{2}$ மைல் உயரமுள்ள எவரஸ்ட் மலையை எடுத்துப் போட்டால் அது முழுவதும் மூழ்கிச் சிகரத்திற்கு மேல் $\frac{1}{2}$ மைல் உயரம் தண்ணீர் நிற்கும்.

இதை விடப் பெரும் ஆச்சரியம்! பூமியின் நிலப் பரப்பு முழுவதையும் கடல் மட்டத்திற்குச் செதுக்கிச், செதுக்கிய கல்மண் முதலிய வெல்லாவற்றையும் சமூத்திரத்தில் போட்டால் சமுத்திரத்தின் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படாது. அதற்குப் பின்னும் சமுத்திரம் $1\frac{3}{4}$ மைல் ஆழ முள்ளதா யிருக்கும்.

சமுத்திரத்தின் ஆழமான பிரதேசங்களை இதுகாறும் எந்த மனிதனும் சென்று பார்த்ததில்லை. எக்காலத்திலும் மனிதன் அங்குச் செல்ல முடியாதென்று சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். நீரின் அபரிமிதமான தள்ளும் சக்தியினால் நசுங்காம லிருக்கக்கூடிய எத்தகைய நீர்மூழ்கிச் சாதனத்தையும் அமைத்தல் அசாத்தியமான காரியம். குறைந்த ஆழமுள்ள விடங்களுக்குமே இது பொருந்துமாயின், கடலின் அடித்தரைக்குச் செல்வதைப் பற்றிக் கூற வேண்டுவதே யில்லை. ஆனால் புதிதாக ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களில் ஒன்றாகிய சமுத்திர சாஸ்திர வல்லுனர் சில கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றின் உதவியினால்கடலின் உள் பிரதேசங்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

கடல் நிறம் :—கடலின் 'குழிகள்' என்று மேலே கூறப்பட்டவை சாய்வான பக்கங்களையுடைய பள்ளத்தாக்குக ளல்ல. அவை குறுகிய, செங்குத்தான பிளவுக ளாகும். அவை கடலின் அடித்தரையில் ஏற்படும் பூகம்ப அதிர்ச்சியினால் ஏற்பட்டவை யென்று கருதப் படுகின்றன. நிலத்திலுள்ளது போலவே சமுத்திரத்திற்குள்ளும் அநேக மலைகள் இருக்கின்றன.

கடலின் பெரும் பாகம் அழகிய தெளிந்த நீல நிறமுடையதா யிருப்பதேன் என்பது இதுகாறும் திட்டமாக நிர்ணயிக்கப்படவில்லை. நீல வானத்தின் பிரதி பலிப்புக்கும், கடலின் நீலநிறத்துக்கும் ஏதேனும் சம்பந்த மிருக்கலாம். ஆழமும் ஒரு காரணமா யிருக்கலாம். ஏனெனில் நிலத்துக்கு வெகு தூரத்திலுள்ள விடங்களில் கடல் நீர் நல்ல நீல நிறமாகவும், ஆழமற்ற விடங்களில் பச்சை நிறமாகவும் இருக்கின்றது. கடல் நீருக்குள்ளே இருக்கும் தாவரவர்க்கங்களும் அதன் நிறம் மாறுபடுவதற்குக் காரண மாகின்றன. செங்கடல் (Red sea) தன் பெயரையும், செந்நிறத்தையும் பெற்றிருப்பதற்கு நீர்மட்டத்திற் கருகே மிதக்கும் செந்நிறக் கடற் பூண்டுகளே கார

ணம். கரையை யடுத்த பிரதேசங்களில், மண்ணின் தன்மையும், தாதுப் பொருள்களும் நீருக்கு நிற மளிக்கின்றன. நீரின் தூய்மைக்கும் அதன் நிறத்துக்கும் கூடச் சம்பந்தம் இருக்கின்றது. நன்கு வடி கட்டிய சுத்தமான நீருள்ள தடாகம் நீல நிறம் பொருந்தி விளங்கு வதிலிருந்து இதை அறியலாம்.

கடல்நீர் தெளிந்து துல்லியமா யிருப்பதெல்லாம் நீர் மட் டத்திற் கருகில் தான். 3000 அடி ஆழத்துக்குக் கீழே சூரிய வெளிச் சம் ஊடுருவிச் செல்வதில்லை. தாவரங்கள் வாழ்வதற்குச் சூரிய வெளிச்சம் இன்றியமையாத தாதலால் கடலில் 3000 அடிக்குக் கீழே கடற் பூண்டுகளே கிடையாது. சூரியனின் வெப்ப கிரணங் களோ 1500 அடிக்குக் கீழே செல்வதில்லை. இதன் பயனாக மேற் பரப்புக் கருகில் மட்டும் கடல்நீர் சிறிது சூடுள்ளதா யிருக்கின்றது; கீழே குளிர்ந்த நீர் தான். 600 அடிக்குக் கீழே நீரின் வெப்ப நிலை எக்காலத்திலும் மாறுவதே யில்லை. 3000 அடிக்குக் கீழேயுள்ள நீர்த் திரள் அவ்வளவும் 40 டிக்ரிக்கும் அதிக குளிர்ச்சி பொருந்தியது. கடலின் அடித்தரையிலுள்ள நீரோ 32 டிக்ரியே யுள்ளது. இன்னும் $3\frac{1}{2}$ டிக்ரி குறைந்து விட்டால், அதாவது $28\frac{1}{2}$ டிக்ரியாகி விட்டால் நீர் உறைந்து பனிக்கட்டி யாகி விடும்.

சமுத்திர ஜலம் நின்ற விடத்திலேயே நிற்பதில்லை. ஓரிடத்தி லிருந்து ஓரிடம் மாறிக் கொண்டே யிருக்கிறது. சமுத்திரத்திலேயே ஆறுகளும் ஏரிகளும் இருக்கின்றன. வெப்ப நிலை, காற்று, தண்ணீ ரின் கனம் இவைகளின் மாறுதலின் பயனாக மேற்கண்ட ஆறுகள், ஏரிகள் முதலியவை ஏற்படுகின்றன. இம் மாறுதல்களுக்குச் சூரிய னே காரணம்.

நிலத்தி லிருப்பதை விட நீரில் அதிகப் பிராணிகளும், தாவரங் களும் வாழ்ந்து வருகின்றன. அவைகளின் பல்வேறு வடிவங்களும் வர்ணங்களும் பார்ப்போருக்கு அச்சத்தையும் அதிசயத்தையும் விளை விப்பனவாக விருக்கும்.

கடல் மூழ்குவதையே தொழிலாகக் கொண்டவர்கள் 200 அடி ஆழம் வரையில் இறங்கி யிருக்கிறார்கள். அதற்குக் கீழே இறங்க முடியாத தன் காரணம் நீருக்கு அங்கு ஏற்படும் அபரிமிதமான தள்ளும் சக்தியே. நீருக்கு இத்தள்ளும் சக்தி அதன் கனத்தினால் ஏற்படுகிறது. ஓர் ஏரியிலோ, ஆற்றிலோ மூழ்கி மண்ணெடுக்க மையினும் கறுத்த இருளும், பொறுக்க முடியாத குளிரும் நிறைந்துள்ள ஒரு பிரதேசம்; சூரிய கிரணங்கள் அங்கு எட்டிப் பார்த்ததே யில்லை; முடிவற்றதெனத் தோன்றும் விஸ்தாரம்; மரம் செடிகொடிகளாவது, காற்றாவது இல்லாத விடம்; சில விகாரமான பிராணிகள் மட்டும் அங்கு ஊர்ந்து கொண்டிருக்கும்; எந்த மனித னும் அங்கு ஒரு கண நேரமும் உயிருடன் இருக்க முடியாது. மனித முயற்சியினாலான எந்தப் பொருளாயினும் அங்கு வைக்கப்பட்டால்

அந்தக் கணமே, உலகிலுள்ள மலைகளெல்லா வற்றினுடைய கனத்தையும் விட அதிகமான கனத்தினல் நசுக்கப் பட்டு நாசமாகி விடும்; இத்தகைய பிரதேச மொன்றைக் கற்பனு சக்தியினல் பாவித்துக் கொள்ளுங்கள். நமது பூவுலகில் பெரும் பாகம் இத்தகைய விடமே யாகும். எங்ஙனமெனில், சமுத்திரத்தின் அடிப்பாகம் இத்தகைய பிரதேசமே யென்று நவீன சாஸ்திர ஆராய்ச்சி நமக்கு அறிவிக்கின்றது.

கடல் உப்பு:—சூரிய வெப்பத்தால் கடல் நீர் அதிகமாக நீராவியாகிக் கொண்டிருக்கும் செங்கடல் போன்ற பிரதேசங்களில் உப்பு அதிகமாயிருக்கும். சமுத்திர முழுவதிலும் மொத்தம் 5,000,000 கன மைல் உப்பு இருக்கிறதாம். அதாவது சராசரி 1000 பவுண்டு தண்ணீரில் 35 பவுண்டு உப்பு இருக்கிறது. இது காறும் நமக்குத் தெரிந்துள்ள 92 தாதுப்பொருள் Element களில் 32 கடல் நீரில் இருக்கின்றன. அமெரிக்காவில் உள் ஆறுகள் மட்டும் ஆண்டுதோறும் 500,000,000 டன் உப்புக்களைச் சமுத்திரத்தில் கொண்டுவந்து சேர்க்கின்றனவாம். மா. ரெ.

ஜாதி விதிகளின் பயமும் மாமூல் அல்லது சம்பிரதாய மென்ற பயங்கரமான பிசாசும் ஒரு மனிதன் மற்றத் தேசத்தவருடன் தானும் ஒன்று என்று அறிவதற்கு இடை யூறுக இடையே நிற்கின்றன. மனு வசித்த காலம் எப்போதே போய்விட்டது. பூமியானது பல வித மாறுதல்களை யடைந்து விட்டது. நதிகள் முன்பு சென்ற மார்க்கங்களை யெல்லாம் அடியோடு நீத்தன. அடர்ந்த காடுகள் வெட்டிக் கொளுத்தப்பட்டுப் போயின. புஷ்ப ஜாதிகளும் மிருக ஜாதிகளுமே மாறிவிட்டன. தேச பாஷையும் தேசத்தை விட்டோடி விட்டது. தனியான சுதந்திர எண்ணங்கள் குற்றமாகக் கருதப்படுகிறது. வழக்கமில்லாத பாஷையின் மூலமாகக் கிடைப்பதெல்லாம் தெய்வீக மானது. புதிய சக்தியைப் பழைய உருவத்திற்குள் புகுத்த வேண்டுமாம். ஐயோ, எல்லா வேலையும் கௌரவம் பெற்றவைக ளல்லவோ, இறந்து போனவர்களது நோக்கப்படியும், மனே பாவனைகளின் படியும் உங்கள் பகுத்தறிவு சரிப்படாமற் போனல் நீங்கள் இகழப்படுவீர்கள். உங்களுக்கு விரோதமாக எவரும் திரும்புவார்கள். **சுவாமி ராம தீர்த்தர்.**

உலகத்தில் வறுமையைப் போன்ற கல்வியே கிடையாது.
டிஸராலி.

காலத்தை வீணுக்காதே. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு லக்ஷம் பொன் பெறும். **டாக்டர் மார்டன்.**

இந்தியா அடிமைத் தனத்தினின்றும் எழவேண்டும். இல்லையேல் அடியோடு மடிவது நலம். **வாஸ்வானி.**

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

ஸ்ரீமாந் பாதூர் வே. ராஜகோபாலாச்சாரியார் எழுதியது.

III

உரங்களும், உர மிடுதலும்.

(சகல உரிமைகளும் ஆசிரியருக்கே.)

நமக்கும், நமது குடும்பத்திலுள்ள ஜனங்களுக்கும், நமது சுயராஜ்யப் பண்ணையின் அங்கத்தினர்களான பண்ணையாட்களின் குடும்பங்களுக்கும், கால் நடைகளுக்கும், உணவளித்து ரக்ஷிக்கும் நமது ஐந்து ஏக்கர் பூமிக்கு ஸம்பூரணமான உணவை நாமும் கொடுத்து வந்தால்தான், நமக்கு அது நல்ல பலனைக் கொடுத்துக் கொண்டு வரும். சிறிய பண்ணையை வைத்தாளுவதில் முதல் தரமான விவசாய முறைகளைச் சுலபமாகக் கையாள முடியும். இவ்வாறு கையாண்டால் தான், பிறர் கைகளை எதிர் பார்த்துக்கொண்டு நாம் நிற்காமலிருக்க முடியும். நல்ல விதை, ஆழமான உழவு, போதுமான உரம், தேவையான தண்ணீர், சரியான காலத்து அறுவடை, மாசுலை நல்ல விலைக்கு விற்பது, ஆக இவ்வாறும் நவீன நாகரீக விவசாயத்தின் அஸ்திவாரங்கள்.

"ஏராலே சேராக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமை யன்றிக்
கராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலேபசிதீர்வா ரகலிடத்திற் பிறந்தோரே."—கம்பர்.

அதாவது, ஏர்கொண்டு உழுது சகதியாக்கி, எருவிட்டு உண வீட்டி, நீர் பெருக்கிப் பசும் பயிரை நிலைபெறச் செய்வார் உழவரா லன்றி, மற்று மேகத்தாலேயோ, அல்லது காவேரி நதியாலேயோ, அல்லது அகன்ற இப்பூமியில் எதனுல் எல்லா ஜீவராசிகளுக்கும் உணவு படைக்க முடியும்? என்று கேட்கிறுர் கம்ப நாட்டாழ்வார். நமது பூமி முன்னுட்களில் கொடுத்துக் கொண்டு வந்த கண்டு முதலைப்போல், தற்போது தரவில்லையென்று பலர் கூறுகின்றனர். முற்காலத்திலோ ஏராளமான காடுகள் இருந்தன. கால் நடைகள், திடமுள்ளதாய், வைரம் பாய்ந்ததாய் ஏராளமாக இருந்து வந்தன. இவைகள் அபரிமிதமாக எருவைத் தந்துவந்த தோடு, எல்லையற்ற காடுகள் எங்கு மிருந்ததால், தழைகளும் மிகவும் சிரமமின்றிக் கிடைத்தன. தற்பொழுதோ, எல்லாம் தலைகீழாய் இருக்கின்றன. பெயருக்கு மாத்திரம் "மாடு" என்று சொல்லத் தகுந்த வீங்கல் களைக்கொண்டு நாம் நடாத்தும் கிருஷி, எவ்வித பலனை அளிக்கும்? இவ்வீங்கல்கள் அதிகமான எருவைத் தருமென்று எண்ண இடமிருக் கிறதா? கல்வி அறிவு அதிகமாயுள்ள ஜாதியர்கள் நாட்டுப்

புறங்களை விட்டு, வெளியேறி விட்டனர். மூலதன வசதியின்றி, கல்வி அபிவிருத்திக்கான ஸ்தாபனங்களுமின்றி, கிராமாந்தரங்களில் போக்கு வரவுக்குப் போதிய சாதனங்களுமின்றி, தவிக்கும் தென்னிந்திய கிருஷிகர்கள் நடத்தும் விவசாயத்தில், இது பரியந்தம் ஏராளமான லாபம் கிடைக்காதது உண்மையே. உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் விவசாயம் முன்னேறி வருகிறதைப் பரிசீலனை செய்தால் புலனாகும். அனாதி காலந்தொட்டு, விவசாயத்தையே ஜீவதாரமாயுள்ள இந்திய தேசத்தில் மாத்திரம், விவசாயம் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருவதற்குக் காரணமென்ன? பொது ஜனங்களும், பிரமுகர்களும், பத்திராசிரியர்களும், இந்திய விவசாயத்தைப் பற்றிக் கனவிலும் நினைத்து வரவே யில்லை. சகல பிணிகளையும் போக்கக்கூடிய மருந்து "சுயராஜ்யம்" தான் என்று எண்ணி இந்தியாவின் வயிற்றைப் பட்டினி போட்டு வருகிறார்கள். பொதுவாக விவசாயத்தை, ஒரு மாற்றாந்தாய் தனது மூத்த தாரத்துக் குழந்தைகளை நடத்தி வருவதைப் போன்று, நமது ஜனத்தலைவர்கள் நடத்திவரும் போது, இந்திய விவசாயம் எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? விவசாயம், நமது தலைவர்களின் எண்ணத்தில் ஒரு தீண்டப்படாத தொழிலாக இருக்கையில், விவசாயத்திற்கு அடிப்படையாக இருக்கும் உரங்களைப் பற்றி ஏதாவது கவனம் செலுத்த அவர்களுடைய மனம் இடங்கொடுக்குமென்று நாம் நம்பிக்கொண் டிருக்கலாமா? இங்கிலாந்தில் விவசாயம் மிகவும் உன்னத ஸ்திதியை யடைந்தது, தலைவர்களின் உழைப்பினால் தான். அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்டிரேலியா, டென்மார்க், இட்டலி, ஜெர்மெனி முதலிய தேசங்களின் விவசாய சரித்திரத்தைக் கவனித்தால், எவனுக்கும் நமது தேசத்துத் தலைவர்களின் பாலும், தலையாட்டிகளின் பாலும் மகத்தான வெறுப்பையே உண்டாக்கும். இந்திய தேசம் தற்கொலை புரிந்துகொள்ள நேர்ந்திருக்கிறது, நமது தலைவர்கள் விவசாய விஷயங்களிலும், எரு விஷயங்களிலும், மௌனம் பூண்டு ஒழுகி வருகிறதினால் தானென்று, உலக விவசாய சரித்திரத்தை அறிந்த எவனும் மெய்யறிவு பெற்றுவிடுவான்.

பல்லாண்டுகளுக்கு முன் இந்தியாவின் விவசாய ஸ்திதியை அறிந்து போக இங்கு வந்திருந்த, விவசாய உலகத்தில் ஒப்புயர்வற்ற கீர்த்தியடைந்த டாக்டர் போல்கர் என்பார், தமது அறிக்கையில் நாம் எவ்வாறு விவசாய விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறோமென்று செவ்வனே நமக்கு அறிவுறுத்தி யிருக்கிறார்.

"உண்மையாக, இந்தியா தற்கொலை புரிந்துகொண்டு வருகிறது! அது உரஸத்து ஏராளமாக அடங்கியிருக்கும் எண்ணெய் வித்துக்களை அப்படியே அயல் நாடுகளுக்கு ஏற்றி அனுப்பி வருகிறது. எண்ணெய் வித்துகளினின்று எண்ணெயைப் பிரித்து எடுத்து, எருஸத்துகள் நிறைந்த புண்ணாக்கை இங்கே வைத்துக்கொண்டு, எண்ணெயை மாத்திரம் வெளியே ஏற்றி அனுப்பாமல், எண்ணெய் வித்துக்களை அப்படியே அன்னிய தேசங்களுக்கு இந்தியா கண்மூடித்தனமாக

ஏற்றி அனுப்பி வருகிறது. விவசாய பூமிகளேயும், அவைகளின் வளத்தையும் அப்படியே அன்னிய தேசங்களுக்கு அனுப்பி வருவதைப்போல் தான் நாம் இதை எண்ணவேண்டும்" என்று டாக்டர் போல்கர் இந்தியர்களுக்கு அறிவித்து வெகுகாலமாயினும், வருஷம் தப்பாமல், கப்பல் கப்பலாய் எண்ணெய் வித்துக்கள் வெளிச்சென்ற வண்ணமாய்த் தான் இருக்கின்றன. இந்தியாவின் பூமிவளத்தைச் சுரண்டி அனுப்பும் நமது கைங்கரியம், இத்தோடு நின்று விடுகிறதென்று எண்ண வேண்டியதில்லே. உரங்களேத் தரும் கால் நடைகளேயும், வெளி நாடுகளுக்கு ஏற்றி அனுப்பிவிடுகிறோம். எலும்பு உரங்களேயும் நாம் கப்பலேற்றி விடுகிறோம். உற்பத்தியாகும் தானியத்தையும், இதர விளே பொருள்களேயும் அப்படியே கப்பலேற்றி அனுப்பி விடுகிறோம். பூமியின் உர சத்தை இத்தனே விளேபொருள்களின் மூலமாக நாம் அனுப்புவதற்குப் பதிலாக நமக்குக் கிடைப்பது என்ன? பூமிக்குத் தேவையேயில்லாத, பூமியின் வளத்தை அதிகரிக்காத, ஸோப்பு, கண்ணுடி, இரும்புச் சாமான்கள், மோட்டார்கள், முதலியவைகளே!

நாம் நமது ஐந்து ஏக்கர் சுயராஜ்யப் பண்ணேயில் இவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது. நாமும், கால்நடைகளும், நமது பண்ணேயாட்களும் பண்ணேயிலேயே குடியிருந்து கொண்டு, அங்கு விளேயும் பொருள்களே, நாம் அங்கேயே உபயோகித்தால், நமது ஐந்து ஏக்கர் சுயராஜ்யப் பண்ணேயை விட்டு அதிகமான உரஸத்து அப்புறப் படாது. பணத்துக்காக நாம் விற்கும் ஒரு ஏக்கர் மாசூலேத்தவிர்த்துப் பண்ணேக்கு வெளியே அதிக உரஸத்து அப்புறப் படாது. பணத்திற்காக நாம் விற்கும் மாசூலினுல் அப்புறப்படுத்தப்பட்டுப் போகும் உரஸத்தை நிலத்திற்கு ஈடு செய்வதற்காக நாம் வெளியிலிருந்து உரங்கள் வாங்கி, நமது பண்ணேக்கு இடவேண்டியது அவசியம். முதலில் நமது பண்ணேயிலிருக்கும் உரஸத்து அப்புறப்படுத்தப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு பண்ணேயின் வளத்தை அதிகரிப்பதற்கு தீவிரமான முயற்சிகளேச் செய்ய வேண்டும்.

ஏராளமான பணத்தைக் கொட்டி நிலத்தை வாங்கிவிட்ட மாத்திரத்திலேயே அந்த நிலம் விடாமல் வருஷத்திற்கு வருஷம் லாபம் தந்து கொண்டிருக்கவேண்டு மென் றெண்ணுவது தவறு. இது மோசமான எண்ணம். நமது நிலங்களேயும், பண்ணேகளேயும், "பாங்கி"களேப்போலும், கைத்தொழில் ஸ்தாபனங்களேப் போலும், எண்ண வேண்டுமே யல்லாது, நமது நிலங்களேக் காமதேனுகளாக எண்ணிச் சுரண்ட முற்படுவது அறியாத்தனம். ஒரு நெசவுத் தொழிற் சாலேக்குப் பஞ்சு கொடுக்காமல் போனுல், அது எவ்வாறு வேலே செய்ய முடியும்? அதினுல் எவ்வாறு நெசவுச் சாலேக் குடையவன்லாபமடைய;முடியும்? ஒரு பாங்கியில் நாம் பணம் போட்டால் தான் வட்டி வந்து கொண்டிருக்கும். போட்ட பணத்திற்குமேல் பாங்கியிலிருந்து எடுத்து விட்டால் பாங்கி வட்டி கொடுக்குமா?

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

நாம் இடும் எருக்களின் மூலமாக, நமது பண்ணைகளுக்கு உணவு தந்து வந்தால் தான் அவைகள் நாம் கொடுத்ததை விட அதிகமாக லாபம் தந்து கொண்டிருக்கும். நாம் வருஷந் தவறாமல் நிலங்களுக்கு உரமிட்டுக் கொண்டு வந்தால் தான் நமக்கு லாபம் வந்து கொண்டே யிருக்கும். "நிலத்தை வாங்கினேன். அதனால் எனக்குக் கால் வட்டி கூடக் கட்டவில்லை" யென்று சொல்லும் மாந்தர்களின் கூற்றுக்கு யாதொரு மதிப்பும் வைக்கக்கூடாதென்றே ஒவ்வொருவரையும் நான் வேண்டுகின்றேன். நிலங்களின் உண்மையான மதிப்பு இன்னது தானென்று இத்தகைய மாந்தர்கள் அறிந்துகொண்டார்களில்லை.

"எவ்வளவு குத்தகை வரும்" என்று பட்டணத்திலிருந்து கடித மூலமாகக் கேட்டறிந்து, திருப்திகொண்டு, நிலத்தை வாங்கும் பட்டணத்து மிராசுதார்களைப்பற்றி நான் இங்கு பேசவில்லை. பட்டணத்திலிருந்து மிராசுதார்களாகப் பார்ப்பவர்கள், ஏராளமான பணத்தைக் கொட்டி நிலங்களை வாங்குவதும் நியாயமே. அதிக உழைப்பின்றிச் சம்பாதிக்கும் பணத்திற்கு, ஏதாவது ஒரு வழி வேண்டுமல்லவா? இவர்கள் நியாயமான விலைக்கு மேல் மிகவும் அதிகமான தொகையை நாட்டுப்புறங்களை விடாமலிருக்கிற வனுடைய நிலங்களுக்குக் கொடுத்து வாங்குவதும் நியாயந்தான்.

நிலத்தில் உரஸத்துக்களில் ஒவ்வொன்றும் இருக்கிறதா? இல்லையா? அல்லது ஒவ்வொன்றிலும் எவ்வெவ்வளவு பாகம் எந்த நிலைமையில் இருக்கிறது, என்று பார்த்து நிலத்தை வாங்க நேரமில்லாம விருப்பவன் நிலங்களுக்கு உரமிட வேண்டிய தவசியத்தை எவ்வாறு கவனிப்பான்?

"குத்தகை என்ன வரும்?" என்ற ஒரே மரக்கால் போட்டு அளந்து நிலத்தை மதிப்பிடும் பேதை மக்கள், நாட்டில் அதிகரித்து வரும் பரியந்தம் இந்திய விவசாயம் க்ஷீணமடைந்து கொண்டு தான் வரும்.

நிலத்தின் மதிப்பின் நிர்த்தாரணத்தில் குத்தகை ஒரு சிறு அம்சம். இதை ஒரு பெரு அம்சமாக நினைக்கக்கூடாது. எருவையும், உரங்களையும் அதிகமாக இட்டுக் காலா காலங்களில் செவ்வனே கிருஷியை நடத்தினால் பூமி ஏராளமான லாபத்தைத் தந்துகொண்டு தான் வரும்.

நமது ஐந்து ஏக்கர் சுயராஜ்யப் பண்ணைக் குடையவர்கள், தாமே பயிர்த்தொழிலில் ஈடுபட்டு நடத்தி வரவேண்டு மென்று வற்புறுத்தவே நான் இவ்வளவு தூரம் விவரமாக எழுத நேர்ந்திருக்கிறது. பண்ணையிலேயே குடியிருந்து கொண்டு, விவசாயத்தை நடத்தினால் தான், நமது நிலங்களுக்கு எந்தெந்த எரு விட்டால் நல்ல பலன் கிடைக்குமென்று அநுபவ பூர்வமாகக் கண்டறிந்துக் கொள்ளலாம். ஒரு அநுபவ கிருஷிகனை, "நிலத்திற்கு நல்ல உரம் என்ன" வென்று கேட்போமாகில் அவன் "நிலத்திற் குடையவன் தனது நிலத்தைச் சுற்றி இரண்டு தரமாக வருவதே" என்று பதிலளிப்பா னென்பதில்

எனக்குச் சந்தேகமேயில்லை. பண்ணைக்கு உரங்கள் அவசியமில்லையென்ற கருத்தோடு அவன் இவ்வாறு சொல்லவே மாட்டான். "பண்ணைக்குடையவன் தினம் இரண்டு முறைகள் தனது பூமியைச் சுற்றிப் பார்த்து வரு''வானாகில் ஒவ்வொரு தினமும் பண்ணையிலிருக்கும் பயிர் வளர்ச்சியின் தன்மையை அவன் அறிதல் கூடும். எரு இட்டுக் கிருஷி செய்யப்படும் பக்கத்து நிலங்களின் பயிர்களின் வளர்ச்சியை அவன் நேரே கண்டு தானும் தனது நிலங்களுக்கு உரமிடுவான் என்ற விரிவான கருத்தே, அநுபவ கிருஷிகளின் பதிலில் பதிந்து கிடக்கிறது. எனவே உரங்கள் நிலங்களுக்கு இன்றியமையாதவை. உண்மையாக "எரு செய்யும் ஊழியம் இனத்தவன்' செய்யான். இதில் யாதொரு ஸந்தேகமுமில்லை.

தென்னிந்தியாவில் பல விதமான உரங்கள் இருக்கின்றன. தொழு எரு, (மாட்டுச்சாணம், வைக்கோல், மூத்திரம் இம்மூன்று சேர்ந்து மக்கியது), புண்ணாக்குகள், மீன் எரு, பசுந்தாள் எரு, எலும்புத்தூள், முதலிய பல எரு தினுசுகள் ஏராளமாகத் தென்னிந்தியாவில் கிடைக்கும். பண்ணையிருக்குமிடத்தில் இவைகளில் எது சுலபமாயும், மலிவாயும் கிடைக்குமோ அவற்றை வாங்கிக் கூசாமல் நிலங்களுக்கு வருஷா வருஷம் நாம் இட்டுக்கொண்டு வரவேண்டும்.

ஒரு ஜதை மாட்டினின்று ஒரு வருஷத்திற்கு 9 வண்டி தொழு எருக்குமேல் உற்பத்தி செய்து விட முடியாது. நமது ஐந்து ஏக்கர் பண்ணையின் கால்நடைகளின் சங்கியை, 8-க்கு மேற்படாதாகையாலும், என்ன ஜாக்கிரதையாக எருவைச் சேகரம் செய்தாலும் ஒரு போதும் 30 வண்டி தொழு எருவுக்கு மேல் நாம் இப்பண்ணையினின்று உற்பத்தி செய்து விட முடியாது. தரமாய், அதிக லாபம் தருமாறு செய்யப்படும் கிருஷிக்கு, இவ்வெரு, ஒரு ஏக்கருக்குக்கூடப் போதாது. எனவே வேறு உரஸத்துக்களை, வேறு விதங்களிலும் சேகரம் செய்துகொள்ள வேண்டியது அவசியம். நமது ஐந்து ஏக்கர் பண்ணையின் சாகுபடி திட்டத்தில் நஞ்சைப்பயிர் சேர்ந்திருந்தால், நஞ்சை சாகுபடிக்கு ஒதுக்கி வைத்திருக்கும் நிலத்தில் பசுந்தாள் உரப் பயிருக்கான மாகூலைச் செய்து, காலத்தில் அதை மடக்கி உழுதுவிடலாம். தக்கைப் பூண்டு, செணப்பு, கொளுஞ்சி, முதலிய பயிர்களுக்கு, ஆகாயத்திலுள்ள "நைட்ரொஜன்" என்னும் உரஸத்தை பூமிக்குள் சேகரம் செய்யும் குணமிருப்பதால், பசுந்தாள் உரப் பயிர்களாக, இம்மூன்றும் பல இடங்களில் பயிரிடப் படுகின்றன. பசுந்தாள் உரப்பயிர்களை நிலத்திலேயே சாகுபடி செய்து விட்டால் நஞ்சைக்கு வேறு விதமான உரங்கள் அதிகமாகப் போடத் தேவையில்லை.

காடுகள் பண்ணைக்கு அருகில் இருக்குமாயின் அவைகளிலிருந்து சொற்ப விலை கொடுத்து, வண்டி வண்டியாகத் தழைகளை வெட்டி ஏற்றிக்கொண்டுவந்து, நஞ்சை நிலங்களுக்கு இடலாம். தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம் முதலிய மணிலாக்கொட்டை சாகுபடி

செய்யும் ஜில்லாக்களில், சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ஒரு பாரம் வீதம் மணிலாக்கொட்டைப் புண்ணாக்கை நெற்பயிருக்கும் போடுகிறார்கள். இதை 3 முதல் 4 பாரம் வரையில் பலதடவைகளில் கரும்புக்கும், மோரீசு வாழைக்கும் இடுகிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் முதலிய ஆந்திர ஜில்லாக்களில் முத்துக் கொட்டை சாகுபடி ஏராளமாகச் செய்யப் படுவதால், அங்கே முத்துக்கொட்டைப் புண்ணாக்கை நெல்லுக்கும், கரும்புக்கும், புகையிலைக்கும், மிளகாய்க்கும் போடுகிறார்கள். மேற்குக் கரையோரங்களில் மீன் எரு ஏராளமாகக் குறைந்த விலைக்குக் கிடைத்து வருவதால், அங்கே அநேக பயிர்கள் மீன் உரத்தையே நம்பியிருக்கின்றன. பெரிய நகரங்களுக்கு அருகில் உள்ளவர்கள், முனிஸிப்பாலித்தி குப்பைகளை ஏலமெடுத்து, நிலங்களுக்கு ஏராளமாக உபயோகிக்கிறார்கள். மணிலாக்கொட்டை உடைக்கும் யந்திரசாலைகளுக்கு அருகிலுள்ள நஞ்சை நிலங்களுக்கு மணிலாக்கொட்டைத் தோல் உரமாக இடப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு, 20 வண்டி வீதம் இத் தோலை களர் பூமிகளுக்கும் கொட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். களரும் திருந்தி விடுகிறது. ஆட்டுக்கிடையையும், மாட்டுக்கிடையையும், பல இடங்களில் நிலத்தில் மடக்குகிறார்கள். குதிரைச்சாணியையும் பல இடங்களில் பயிருக்குப் போட்டு லாபத்தை அடைகிறார்கள். ரோஜாச் செடிக்குக் குதிரை சாணி முக்கியமான எருவாகக் கருதப்படுகிறது.

தோல் பதனிடும் சாலைகள், ஏராளமாக இருக்கும் இடங்களில் தோல் கழிவையும், உரோமத்தையும், பயிர்களுக்கு உரங்களாக உபயோகிக்கிறார்கள். எலும்புத்தூள் செய்யும் யந்திர சாலைகள் அருகில் இருக்கும் பிரதேசங்களில், எலும்புத்தூளையும், மாட்டுக் கொம்புத்தூளையும், எருவாக உபயோகித்து வருகிறார்கள். பன்றி எரு, ஆட்டு எரு முதலியன கிடைக்கு மிடங்களில் இவைகளையும் எருக்களாக தாராளமாக உபயோகப் படுத்தலாம். திருப்பதி க்ஷேத்திரத்தில் வாங்கும் தலைமயிரில், பெரும்பான்மையான பாகம் எருவாக உபயோகப்படும் போது, மற்று எந்தப் பதார்த்தத்தைத் தான் எருவாக உபயோகப்படுத்தக் கூடாது? ஆனாலும் சிலவற்றை மிகவும் அதிகமாக உபயோகப் படுத்தவேண்டும். சிலவற்றைக் குறைவாக உபயோகப்படுத்தினால் போதும்.

இவ்வளவும் இயற்கை எருத் தினுசுகள். இவைகளைத் தவிர்த்து செயற்கை உரங்களும் உள. இவைகளில் முக்கியமானதும் பயிர்களுக்கு யாதொரு சந்தேகமுமின்றி இடக்கூடியதாகவு மிருப்பது சூப்பர் பாஸ்பாட். இதைத் தனியாக எந்தப் பயிருக்கிட்டாலும் லாபத்தைத் தராது. பசுந்தாள் உரம், தொழு எரு முதலிய "நைட்ரொஜன்" ஸத்துள்ள எருக்களை, நிலங்களுக்குப் போடுவதோடு இதையும் ஏக்கர் ஒன்றுக்கு ஒன்றரை அந்தர் (168 ராத்தல்) வீதம் இட்டால் ஏராளமான லாபத்தைத் தரும்.

நாம் இடும் பயிர், நிலத்திலுள்ள இயற்கையான உரத்தின் அளவு, உரங்களின் விலை, முதலியவற்றை முதலில் சீர் தூக்கிப் பார்த்து விட்டு உரங்களை நாம் வாங்க வேண்டும். மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் எரு தினுசுகளை, அவைகளிடத்திலிருக்கும் மூன்று எரு ஸத்துக்களுக்காகத் தான் நாம் விலை கொடுத்து வாங்கி, நிலத்தில் போடுகிறோம். அவைகள், (1) உப்புவாயு ஸத்து (Nitrogen) அதாவது நைட்ரோஜன்ஸத்து, (2) பிரகாச தாமிலம் (Phosphoric acid) அதாவது பாஸ்பாரிக் ஆஸிட், (3) சாம்பல் காறம் அதாவது பொட்டாஷ் (Potash), என்னும் மூன்றுமே தான். இம்மூன்று உரஸத்துக்களில் எந்த உர ஸத்து நாம் இடும் பயிருக்கு அதிகமாகத் தேவையாக இருக்கிறதோ, அந்த உரஸத்து அதிகமாகவுள்ள உரத்தை வாங்கியிடுதல் வேண்டும். எருக்களிலுள்ள உர ஸத்துக்கு மாத்திரந் தான் நாம் பணம் கொடுக்க வேண்டுமே யல்லாது, அவைகளின் வருமானத்தைக் கண்டு விலை கொடுக்கக்கூடாது. மேல்நாட்டு விவசாயிகள் உரங்களை வாங்கும்போது அவைகளிலுள்ள உரஸத்து, மொத்தத்தில் எவ்வளவு பாகம் இருக்கிறதென்று பரிசோதித்துப் பார்த்த பின்னே, விலை கொடுக்கிறார்கள். மண்கலந்த வளவனூர் மணிலாக்கொட்டைப் புண்ணாக்கைப், பிரஸ் புண்ணாக்கைவிட மிகவும் குறைந்த விலைக்குக் காப்பித் தோட்டக்காரர்கள் வாங்கிவருவதற்கு வளவனூர்ப் புண்ணாக்கில் குறைந்த "நைட்ரோஜன்" ஸத்து இருப்பதே காரணம்.

மூத்திரமும், சாணமும் சேர்ந்த நல்ல தொழு எருவுக்கு வண்டி ஒன்றுக்கு ரூ. 1 வீதம் கொடுக்கலாம். நெற்பயிருக்கு இந்த எருவை உபயோகிப்பதை விடத் தோட்டக்கால் சாகுபடிக்கு இடுவதே மேலானது. நஞ்சை நிலங்களுக்கு ஏற்கனவே கூறியுள்ள பிரகாரம் பசுந்தாள் உரப்பயிர்களை யிட்டு நிலத்திலேயே மடக்கி உழுவது தான் லாபம். பசுந்தாள் பயிர் மூலமாக "நைட்ரொஜன்" உரஸத்தை மிகவும் குறைந்த செலவில் நிலங்களுக்கு இட்டு விடலாம். நெற்பயிருக்குப் பசுந்தாள் பயிரோடு ஒன்று அல்லது ஒன்றரை அந்தர் "ஸூப்பர்பாஸ்பேட்" என்ற செயற்கை உரத்தை இடுவதினால் லாபத்தை அதிகரிக்கும்.

பொதுவாக எரு தினுசுகளை இதுவரையில் கவனித்து வந்தேன். இனித் தென்னாட்டில் அகப்படும் எருக்களைப் பற்றிய சில விவரங்களை அடியில் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

எரு தினுசுகளைப் பல இனங்களாகப் பிரிக்கலாம். அவைகளாவன :—

(1) பசுந்தாள் உரங்கள், (2) தொழு எரு முதலிய மிருகங்களின் மூலமாக அகப்படும் எருக்கள், (3) புண்ணாக்குகள், (4) செயற்கை எருக்களும் ரஸாயன எருக்களும்.

(இன்னும் வரும்.)

டாக்டர் சுப்பிரமணிய ஐயர்

1924௵ டிசம்பர் மாதம் 5-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு எட்டேமுக்கால் மணிக்குச் சென்னையை அடுத்த கிண்டியில் ஆண்டவன் அடியிணை சேர்ந்த டாக்டர் சுப்பிர மணி ஐயரின் சரித்திரச் சுருக்கம்.

1842-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி மதுரை ஜில்லாவில் கௌரவமுள்ள ஒரு பிராமண குடும்பத்தில் மணி ஐயர் என்று பிற்காலத்தில் வழங்கப்பட்ட ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய ஐயர் ஸ்ரீமான் சுப்பையருக்கு மூன்றாவது குமாரனாகப் பிறந்தார்; பிறந்த இரண்டா மாண்டினில் தமது தகப்பனாரை இழக்கும் துர்ப்பாக்கிய ரானார். இவர், தமது ஒன்பதாவது வயதில் இங்கிலீஷ் மொழியைக் கற்கத் தொடங்கினார். ஒரு மிஷன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டு அங்குச் சிலகாலம் வாசித்துவந்தார். பிறகு கிருஷ்ண சாமி செட்டியார் என்ற ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கல்விச் சாலைக்கு அனுப்பப்பட்டார். அப்புறம் 1856-ம் வருஷம் ஜில்லாக் கல்விக்கழகத்தில் பயில ஆரம்பித்தார். இங்கு இவருடைய புத்திக் கூர்மையைக்கண்டு இவருக்கு உபகாரச்சம்பளம் அளிக்கப்பட்டது. இச்சமயத்தில் இவர் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வந்த இங்கிலீஷ் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். உடனே மதுரை டிப்டி கலெக்டர் காரியாலயத்தில் இவருக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. அப்பொழுது டிப்டி கலெக்டராயிருந்த ஸ்ரீமான் இராமராவ் என்பவர் இவருடைய அறிவின் தெளிவைக்கண்டு வியந்து, தாம் இராமநாதபுரம் சென்ற காலை இவரையும் அழைத்துச்சென்றார். ஆனால் நமது 'மணி' மீண்டும் மதுரைக்கு வந்து கலெக்டர் காரியாலயத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தார். இந்த உத்தியோகத்தைப் பார்த்துக்கொண்டே, இவர் சட்ட நூல்களைப் படித்து நியாயவாதி (பிளீடர்) பரீட்சைக்குச் சென்று முதலில் தேறினார். ஆனால் இவருக்குச் சன்னது கிடைக்கவில்லை. ஏனெனில், அப்பொழுது ஜில்லா நீதிபதி உத்தியோகம் வகித்திருந்த ஸ்ரீமான் காட்டன் என்பவர் கோர்ட்டுக்கு வந்ததும், இவர் சலாம்செய்ய வில்லையாம். விநோதம்! பிறகு, ஸ்ரீமான் மணி ஐயர், ஜில்லா கலெக்டரால் பப்ளிக் பிராசிகியூடராக நியமிக்கப்பட்டார். இந்த அலுவலைச் சில நாள் பார்த்துவிட்டு மறுபடியும் கலெக்டர் காரியாலயத்தில் உத்தியோகத்துக்கு அமர்ந்தார். இந்தக் காலத்திலேயே, அரசாங்கப் பரீட்சைகள் ஏற்படுத்தப்பட்டன. உடனே நமது ஐயர் 1865-ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும் 1866-ம் வருஷத்தில் எப். ஏ. பரீட்சையிலும் தேறினார். சென்னை உயர்தர நீதிமன்றத்தில் அரசாங்க ரிப்போர்ட்டராயிருந்த ஸ்ரீமான் ஜே. சி. மில்ஸ் என்பவரிடத்தில் அப்ரெண்டிஸாக வேலை பார்த்தார். இக்காலத்தில், மதுரையில் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த இவருடைய தமையனார், தம் தம்பியை மதுரைக்கே அழைத்துக்கொள்ள விரும்பினார். இவ

ருடைய விருப்பம் பூர்த்தியாயிற்று. ஸ்ரீமான் மணி ஐயர் மது... தாசில்தாராக நியமிக்கப்பட்டார். இந்த உத்தியோகத்தைச் சுமார் ஆறுமாத காலம் பார்த்தார். ஆனால் இது பிடியாமலோ என்னவோ மறுபடியும் சென்னைக்கு வந்து ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவு செய்துகொண்டார். சென்னையில் வக்கீலாகப் பதிவு செய்துகொண்ட இவர் மதுரையில் தம் தொழிலை ஆரம்பித்தார். அப்பொழுதே, அதி ர்ஷ்டதேவதை இவர் வசமானாள் என்று கூறவேண்டும்.

* * * * *

1870-ம் வருஷத்தில் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் மதுரை நகர பரிபாலன சபையின் அங்கத்தினராகவும், ஜில்லா போர்டின் அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார். இச்சபைகளில் அங்கம் வகித்த காலத்தில் ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். மதுரையில் பதினெட்டாயிரம் ரூபா செலவில் ஒரு நந்தவனத்தை ஏற்படுத்தினார். இது சம்பந்தமாக இவருடைய குடும்பத்தாரே நாலாயிரம் ரூபா வரை நன்கொடை யளித்தனர். மதுரைக் கோயிலைச் சுற்றியும் இவர் ஒரு தோட்டத்தை நிர்மாணம் செய்தார். 1875-ம் வருஷத்தில் எட்வர்ட் சக்ரவர்த்தி, இளவரசர் என்ற முறையில் மதுரைக்கு விஜயஞ் செய்தபோது, மதுரை வாசிகளின் சார்பாக ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அவருக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். 1884-ம் ஆண்டில் சென்னைக் கவர்னரா யிருந்த ஸர் எம். இ. டப் என்பவர் மதுரைக்கு விஜயஞ்செய்த காலத்தில் மதுரை நகரபரிபாலன சங்கத்தின் உதவித் தலைவர் என்ற முறையில் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார். அப்பொழுதே மணி ஐயரைப் பற்றிக் கவர்னர் நன்கு அறிந்து கொண்டார்போலும். உடனே அவரைச் சென்னைச் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினராக அரசாங்கத்தார் நியமித்தனர். 1877-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி லார்ட் லிட்டன் தர்பாரின்போது இவருக்கு ஒரு சன்மானப் பத்திரம் அளிக்கப்பட்டது.

* * * * *

1884-ம் வருஷம் நமது ஐயர் மனைவியை யிழந்தார். இதற்குப் பிறகு இவருடைய மனம் மத ஆராய்ச்சியில் திரும்பியது. பிரும்ம ஞானசபையில் ஓர் அங்கத்தினரானார். 1888-ம் வருஷத்தில் அரசாங்க நியாயவாதியாக இவர் நியமிக்கப்பட்டார். முதன் முதலாக இப்பதவியை வகித்த இந்தியர் இவரே. இக்காலத்தில் இவர் பல அரிய வழக்குகளைத் திறம்பட நடத்திப் பலருடைய மதிப்புக்கு உரியவரானார். 1877-ம் வருஷம் முதல் 1895-ம் வரும் வரை ஸ்ரீமான் ஐயர் பொதுஜன சேவையில் ஈடுபட்டு உழைத்துவந்தார். வக்கீல் தொழிலிலேயே தம் கவன மனைத்தையும் செலுத்தாமல் அரசாங்கத்தாருடைய கொள்கைகளுக்கு எப்பொழுதும் அடிமையாயிராமல் நியாயமாகவும், ஆண்மைத்தனத்துடனும் இவர் தம் காரியங்களைக் கவனித்துவந்தார். 1877-ம் வருஷம் ஏற்பட்ட பஞ்ச நிவாரண

கமிஷன் முன்னிலையில் இவர் சாட்சியம் கொடுத்தார். மிராசுதாரர்கள், தங்கள் குடியானவர்களை அதிகமாகத் துன்புறுத்தாதிருக்கும் பொருட்டு ஒரு சட்டம் செய்யப்படவேண்டுமென்று இவர் பெரும் பிரயாசைப்பட்டார். ஸ்தல ஸ்தாபனங்களில் ஜனப் பிரதிநிதிகள் தொகை அதிகமாகவும் உத்தியோக அங்கத்தினர் தொகை குறையவும் இவர் பட்டபாடுகள் எண்ணில. இது சம்பந்தமாக 1882-ம் வருஷத்தில் லார்ட் ரிப்பன் அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்தனர். இவ்வறிக்கையில் கண்ட விஷயங்களை எங்ஙனம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிக்கச் சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியில் நமது ஐயர் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். அக் கமிட்டியைச் சேர்ந்த பெரும்பான்மை அங்கத்தினர்களோடு இவர் அபிப்பிராய வேற்றுமை கொண்டார். எனவே ஓர் அழகிய மறுப்புரை எழுதினார். இதனால் இவருடைய செல்வாக்கு அதிகமாயிற்று.

* * * * *

காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்தவருள் ஸ்ரீமான் ஐயரும் ஒருவர். பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரசில், மாகாண சட்டசபைகளையும் இந்தியா சட்டசபையையும் சீர்திருத்தி விசாலிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைப் பிரரேபணை செய்து அழகாகப் பேசினார். கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரசில் இந்தியாவின் வறுமை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இவர் ஆதரித்துப் பேசினார். உயர்தர நீதிபதியாவதற்கு முன்னரும், அவ்வுத்தியோக முடிவுக்குப் பின்னரும் காங்கிரஸ் மகா சபையின் நோக்கங்களையும் அதன் கொள்கைகளையும் எங்கனும் பரப்பி வருவதில் தளரா ஊக்கத்துடன் உழைத்து வந்தார். 1914-ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரசின் உபசரணைக் கூட்டத் தலைவராக இவர் இருந்தார். ஸ்ரீமான் மணி ஐயர் சென்னைச் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினராக நியமிக்கப்பட்ட காலத்தில், உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தினர்களுக்குச் சொற்ப அதிகாரமே இருந்தது. தீர்மானங்களைக் கொண்டுவரும் உரிமை யாவது, கேள்விகளைக் கேட்கும் உரிமையாவது அப்பொழுது அங்கத்தினர்களுக்கு இல்லை. ஆயினும் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்கள் தங்களாலான நன்மையைச் செய்து வந்தார்கள். 1885-ம் வருஷத்தில் ஸ்ரீமான் ஐயர் சென்னைச் சர்வகலாசாலையில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். 1907-ம் வருஷம் வரை சர்வகலாசாலையுடன் இவருக்குச் சம்பந்தம் இருந்து வந்தது. இக்காலத்தில் இவர் கல்வி அபிவிருத்திக்காகப் பெரிதும் பாடுபட்டார். பிறகு இவர் சர்வகலாசாலையின் உதவி சான்ஸலராக நியமிக்கப்பட்டார். முதன் முதலாக இப்பதவியை வகித்த இந்தியர் இவரே. இவருடைய அரிய ஊழியத்தின் பயனாக 1908-ம் வருஷம் இவருக்கு டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டது. 1896-ம் வருஷத்திய சர்வகலாசாலைப்

பட்ட மளிப்பு விழாவின்போது இவர் செய்த பிரசங்கம் இன்னும் பலருடைய செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

* * * * *

1895-ம் வருஷம் ஜனவரி மாதம் இவர் சென்னை உயர்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவருக்கு முன்னர் இப்பதவியை வகித்திருந்த ஸர் டி. முத்துசாமி ஐயருடைய பேரும் புகழும் எங்கும் பரவி யிருந்தன. அவர் பதவியில் வீற்றிருந்து நியாய உலகத்தில் இவர் நற்பெயரெடுத்தாரெனின் இவருடைய திறமையைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. 1899, 1903, 1906 ஆகிய இந்த வருஷங்களில் ஸ்ரீமான் மணி ஐயர் பிரதம நீதிபதியாகவும் வேலை பார்த்தார். 1900-ம் ஆண்டு இவருக்குச் 'சர்' பட்டம் கிடைத்தது. 1907-ம் வருஷம் நவம்பர் பதின்மூன்றாந் தேதி தமது நீதிபதி பதவியினின்றும் இவர் விலகிக் கொண்டார். இன்னும் எட்டு மாத காலம் இவர் உத்தியோகத்தி லிருந்தால் வருஷம் ஆயிரம் பவுன் உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கும். ஆனால் அக்கால அளவுவரை இல்லாமையினால் எண்ணூற்று எண்பது பவுனே இவர் உபகாரச் சம்பளமாகப் பெற்றுவந்தார்.

* * * * *

நீதிபதி பதவியினின்று விலகியதும் இவர் சும்மா இருக்கவில்லை. தேசத்தின் நினைவே இவருக்கு எப்பொழுதும் இருந்தது. நாட்டின் பொருட்டு இவர் விடாது உழைத்து வந்தார். ஹிந்து தர்ம ஸ்தாபனங்களைச் சீர்திருத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இவரால் காணப்பட்ட தர்ம ரட்சண சபைக்கு இவர் கடைசிக் காலம் வரை தலைவராக இருந்தார். ஹிந்துமத சம்பிரதாயங்களில் பல மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று இவர் பலமான அபிப்பிராயங் கொண்டிருந்தார். அரசியல் விஷயங்களிலும் இவர் தலையிடாமலிருக்கவில்லை. 1914-ம் வருஷத்து காங்கிரஸுக்கு இவர் உபசரணைக் கூட்டத்தலைவராக இருந்தாரென்று முன்னரே கூறினோம். 1915-ம் வருஷம் சுய ஆட்சி சங்கத்திற்குத் தலைவராக இருந்தார். 1917-ம் வருஷத்தில் பெசண்டம்மையார், ஸ்ரீமான்கள் வாடியா, அருண்டேல் ஆகிய இவர்கள் காப்பில் வைக்கப்பட்ட காலத்தில் இவர் கூறிய வீர உரைகளும் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளும் இன்னும் எவருடைய உள்ளத்தையும் விட்டகலவில்லை. இச்சமயத்திலேயே இவர் இந்தியாவின் நிலைமையைப் பற்றிப் பிரசிடெண்டு வில்சனுக்கு ஸ்ரீமான் ஹாட்சனர் என்பவர் மூலமாக ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். இது வெளியானதும், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் ஏற்பட்ட பரபரப்பை யாவர் வருணிக்க முடியும்? இக் கடிதத்தை, இங்கிலாந்திலுள்ள அமெரிக்காவின் பிரதிநிதி, பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு அளித்தனர். இது சம்பந்தமாகப் பார்லிமெண்டில் வாதம் நடைபெற்றது. இதன் பயனாக ஸ்ரீமான் மணி ஐயர் தமது 'ஸர்'ப் பட்டம் முதலானவைகளைத் துறந்தார். சீர்

திருத்த விசாரணை சம்பந்தமாக ஸ்ரீமான் மாண்டேகுவும் லார்ட் செம்ஸ்பர்டும் சென்னைக்கு விஜயஞ் செய்த காலத்தில், ஐயருடன் சம்பாஷித்தார்கள். அப்பொழுது, மேற்படி கடித சம்பந்தமாக இருதரத்தாருக்கும் பலத்த வாதம் நடை பெற்றதாகச் சொல்லப்படு கிறது. 1919-ம் வருஷத்தில் மகாத்மா காந்தி சத்தியாக்கிரக இயக் கத்தை ஆரம்பித்த காலத்தில், அதற்கு இவர் ஆதரவு கொடுத்தார். இங்ஙனமே பல இயக்கங்களிலும் இவர் சம்பந்தப்பட்டு உழைத்தார். மூப்பின் காரணமாக இவருக்குப் பார்வை மழுங்கியிருந்தபோதிலும், தினந்தோறும் பத்திரிகைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டு உலக விஷயங்களை அறிவதில் ஆவல் கொண்டிருந்தார்.

எதிர்காலத்தைப் பற்றிய ஜோஸியம்.

1923 வருஷம் நவம்பர் மாதம் 8-ந்தேதி மித்திரனில் மகாத்மா வின் விடுதலை என்ற தலையங்கத்தில் ஒரு ஜோசியம் என்று மகுட மிட்டு மகாத்மா காந்தியடிகள் 5-2-24 காலை 7 மணிக்கு விடுதலை யடைவா ரென்றும் 1931-ல் ஸ்வராஜ்யம் வருமென்றும் பிரசுரம் செய்திருந்ததையும், அதன்படியே மகாத்மா விடுதலை யடைந்த தையும் நீங்கள் அறிவீர்கள். அதன் தொடர்ச்சியாக மற்றும் சில விவ ரங்கள் ஸ்ரீ ஆஞ்சனேயானுக்கிரகத்தால் கீழே எழுதுகிறேன்.

மகாத்மாவும் ஸ்வராஜ்யமும்.

1931ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஸ்வராஜ்யம் ஸ்தாபன மாகும். உலக சிரேஷ்டரான மகாத்மா காந்தியடிகளால் ஸ்வராஜ் யம் ஸ்தாபித மாகாது. ஸ்வராஜ்ய ஸ்தாபன காலத்தில் "மகாத் மா" மௌனம் ஸாதித்து இருப்பார். அவருடைய ஆத்ம சக்தி எதைக்கோருகிறதோ அது 1930-ம் வருஷத்திலேயே பூர்த்தியாகி விடும். மாகூமிமை தங்கிய அரசாங்கத்தாராலேயே ஸ்வராஜ்யம் அளிக்கப்படும். பிராமணரல்லாத வகுப்பில் ஓர் கனவான் இதற்குக் காரண பூத ராவார். பலரும் அவரால் தான் ஸ்வராஜ்யம் கிடைத்த தென்று சொல்லிக் கொள்ளுவார்கள். ஸ்வய ராஜ்ய ஸ்தாபன காலத்தில் உலகத்தில் ஓர் விதமான கிளர்ச்சியும் இராது.

ஹிந்துக்களும் மகம்மதியர்களும்.

ஹிந்துக்களும், மகம்மதியர்களுக்கும் 1926-ல் பிரபலமான மனஸ்தாபங்க ளுண்டாகக் காரண மிருக்கிறது. 1928-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் ஹிந்துக்களும், முகம்மதியர்களும் (ஒரு தாய்வயிற்றுக் குழந்தைகள்போல்) உண்மையான ஒற்றுமையுடனும், சிநேகத்துடனும் வாழ ஆரம்பிப்பார்கள். அதுமுதல் கொண்டு சமா தானமாகவே யிருக்கும். மேல் குறித்த காலத்திற்குள் ஒற்றுமை என்பது வெறும் பேச்சுத்தான்.

கலியாணமான ஆண், பெண் கவனிக்கவேண்டிய சில முறைகள்.

இது ஒரு அமெரிக்கரால் எழுதப்பட்டது. ஒரு புருஷனும் ஒரு பெண்ணும் மணம் புரிந்தபின், தாங்கள் சந்தோஷமாய் ஒருமைப் பாடுடன் இருக்கக் கீழ்கண்டவைகளை அநுசரிக்கவேண்டும்.

மனைவி புருஷனிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறை.

1. மனைவி தன் கணவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்து, அவர் உத்தியோகச் சாலையிலிருந்து வந்தவுடனே அவரிடத்தில் குளிர்ந்த முகத்துடன் இனியவார்த்தைகளைச் சொல்லி வீட்டில் அவருக்கு வேண்டியவைகளை எல்லாம் தயார்செய்து வைத்து அவர் மன மகிழும்படி இங்கிதம் அறிந்து நடக்கவேண்டும். மேலும் புருஷன் தன்னிடத்தில் எவ்வளவு ஆசையும் பட்சமு முடையவராய் இருக்கிறாரோ அதைப் பார்க்கிலும் நான்கு பங்கு அதிக ஆசையும் பட்சமுமுடையவளாய் மனையாள் இருக்கவேண்டும்

2. தன் கணவனுக்கு இஷ்டமான பதார்த்தங்களையும், பாகங் களையும் தெரிந்துகொண்டு, பக்குவமாய்ச் சமையல் செய்து போடு வது நல்ல மனையாட்டின் கடமை. மேலும் தான் எவ்வித ஆடையா பரணங்கள் தரித்துக்கொண்டால் தன் புருஷன் மனதிற்கு விருப் பத்தைத் தருமோ அவைகளையே தரித்துக்கொள்ள வேண்டும்; மேலும் வீட்டுச் சம்சாரத்தை நடத்துவதிலும், தன்னுடைய நட வடிக்கைகளிலும், தன் கனவன் முகங்கோணமல் கற்புள்ள மனைவி நடந்துகொள்வாள்.

3. பர்த்தா எவ்வளவு சாதுவும் நற்குணமு முடையவராய் இருந்தபோதிலும் ஒருக்காலும் அவரிடத்தில் அதிகாரம் பண்ண மனைவி முயலக் கூடாது. அவ்விதம் செய்யும் மனைவி பிறரால் இகழ்ச்சி அடைவதுமன்றி தன் புருஷனுக்கும் அபகீர்த் தியை உண்டு பண்ணுவாள்.

4. கணவனுடைய கோரிக்கைகள் நியாயமாயும் யுக்தமாயும் காணப்பட்டால் அவைகளைச் சந்தோஷமாய். அவர் இஷ்டப்படி செய்ய மனைவி உடன்பட வேண்டும். கூடுமானல் அப்பேர்ப்பட்ட விஷயங்களை அவர்சொல்லுவதற்கு முன்னமே குறிப்பாகத் தெரிந்து கொண்டு நடப்பதே நற்குண நற்செய்கையுள்ள மனைவியினுடைய கடமை.

5. மனத்திற்கு சங்கடம் அல்லதுவெறுப்பை உண்டுபண்ணும் விஷயங்களைப் பற்றியும், முடிவில், கோபமாய் முடியும் விஷயங் களைக்குறித்தும் தன் புருஷனிடத்தில் பெண்சாதி வாதிக்கக் கூடாது; முக்கியமாய்ப் பலர்கூடி இருக்கிற இடங்களில் மேல் சொல்லியவற்றை முற்றிலும் விலக்கவேண்டும்.

6. புருஷன் தன் பெண்சாதியிடத்தில் சொல்லி ஆலோ சனை பண்ணமல் ஒருகாரியத்தைச் செய்யப்பிரவேசிக்கும் பொழுது,

மனைவி தானே போய் அந்தக் காரியத்தின் மத்தியில் பிரவேசிக்கக் கூடாது.

7. கணவனிடத்தில் காணப்பட்ட தப்பிதங்களையாவது அல்லது தங்க ளிருவருக்கும் சாதாரணமாய் நேரிடும் சிறு சண்டைகளை யாவது மனைவி தனது அன்பான சிநேகிதரிடத்தில் இரகசியமாய்ச் சொல்லிக்கொண்டாலும், அவைகள் எப்படியாவது அயலாருக்குத் தெரிந்து நகைக்க இடமுண்டாகும். ஆகையால் மனைவி தன் வீட்டுச் சங்கதிகளை வெளியிடக்கூடாது.

8. தனது புருஷன் புத்திமானும், கல்விமானும் இருக்கும் பட்சத்தில் அவரிடத்தில் சாதுரியமாய் பலவித விஷயங்களைப்பற்றி அவர் மனம் களிக்கும்படி சம்பாஷணை பண்ணும் பொருட்டு மனைவி தானும் விரைவாய் ஆவலுடன் கல்வியைக் கற்க முயற்சி செய்ய வேண்டும்.

9. தன் புருஷனுடைய இடையருத அன்பையும் அந்நியோந் நிய சிநேகத்தையும் கெடுக்கும் விஷயங்களைக் குறித்து மனைவி சாக்கிரதையா யிருக்கவேண்டும்.

10. வர்த்தகம் செய்வதில் சில சமயங்களில் லாபம் வருவதும் சில சமயங்களில் நஷ்டம் நேரிடுவதும் சாதாரணமாய் யாவருக்கும் தெரிந்த விஷயமாகையால், கணவன் வர்த்தகத்தில் பிரவேசித்திருந் தால் மனைவி செலவு பண்ணுவதில் சிக்கனமாக இருக்கவேண்டும். ஏனெனில் திரவியம் விசேஷமாய் வரும்போது அதைக் கண்கால் தெரியாமல் வீணில் செலவழித்து பின்பு ஒருவேளை வறுமைவந்த காலத்தில் தானும் தன்னுடைய குழந்தைகளும் திரவிய மின்மையால் வருந்தும்படி நேரிடும்.

11. ஆனுல் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் இருக்கின்ற லோபத்தனத்தையும் வரவுக்கு மிஞ்சி அதிகச் செலவு பண்ணும் துர்வழக்கத்தையும் மனைவி விலக்கவேண்டும்.

12. வஸ்திரங்கள், நகைகள், சாமான்கள் வாங்குவதிலும் இன்னம் அனேக வீட்டு விஷயங்களிலும் மாத்திரம் சிறுகச் செலவு பண்ணவேண்டுமே யல்லாமல் கஷ்டப்பட்டு வேலை செய்யும் வண்ணான், குப்பைக்காரன் முதலியவர்களுடைய கூலியை அநியாயமாய் மிகவும் குறைத்து அவர்கள் வயிற்றுச் சோற்றில் கல்லைப்போடுவது தரும மல்ல.

புருஷன் மனைவியிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை.

1. பெண்சாதி தனக்குச் சமமானவ ளென்று எண்ணி அவள் விஷயத்தில் அவமரியாதையாயும், கருத்தில்லாதவனுயும் இராமல், அன்பு பாராட்டுதல் புருஷனுடைய கடமை. மேலும் பெண் சாதியைப் பணிப் பெண்ணுக நினைத்து அதிகாரஞ் செய்யக் கூடாது அப்படி செய்வது தவருன கொள்கையாம்.

2. வீட்டு விஷயங்களில் எந்தக் காரியங்கள் பெண்சாதி மூலமாக நடக்கவேண்டுமோ அந்தக் காரியங்களை அவள் மூலமாகவே நடக்கும்படியாக விட்டுவிட வேண்டும். அப்படிச் செய்யாமல் எல்லா விஷயங்களிலும் கணவன் தலையிட்டுக்கொள்வது தவறு.

3. கணவன் வரவுக்கேற்ற சமயல் செய்வதற்கும், பெண்சாதி நிலைமைக்கேற்ற வஸ்திரம் முதலானவைகளை வாங்கக் கொள்வதற்கும், நகை நட்டு முதலியவை செய்துகொள்வதற்கும், போதுமான பணத்தைப் பெண்சாதி கையில் கொடுத்துவிட வேண்டும்.

4. மனைவி ஏதாகிலும் வேண்டுமென்று கேட்டால் அது நியாயமானதா யிருந்தால் அவள் கருத்துப்படி கணவன் நடந்து கொள்ளவேண்டும்.

5. சமயல் செய்வதிலும், இதர வீட்டு வேலைகளைச் சரியாய் நடத்துவதிலும் பெண்சாதி ஒரு வேலை தவறிப்போனால் அதற்காக அவள்மேல் அதிகக் கோபங்கொண்டு அவளைத் தூஷிக்கக் கூடாது. மேலும் சில மடையர்கள் சிறிய தப்பிதங்களுக் கெல்லாம் தடி யெடுத்து அடிப்பார்கள். இது தவறு.

6. பெண்களிலும் அனேகர் நல்ல விவேகமுடையவர்க ளிருக்கிறார்க ளாகையால் "தையல் சொல் கேளேல்', "பெண்புத்தி பின்புத்தி" என்னும் முதுமொழிகளைப் பாராட்டாமல், மனைவி நல்ல குணமும் புத்தியும் உடையவளா வென்று தெரிந்துகொண்டு, அப்படியாயின், புருஷன் ஒவ்வொரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போது அவளுடைய யோசனை யென்னவென்று கேட்டு நடத்தல் உத்தமம். தங்கள் மனையாட்டிகளின் புத்திமதிகளால பெருத்த அபாயங்களினின்றும் நீங்கிப் பிழைத்தவர்கள் அனேகர் உண்டு. பெண்சாதி பேச்சைக் கேட்பவன் என்று பிறர் சொல்வார்கள் என்று பயந்து எத்தனையோ பேர் தம் நாயகிமார் ஆலோசனைகளை அசட்டைசெய்து மூடத்தனமாகத் தங்களையும் தம்குடும்பங்களையும் கெடுத்துக்கொண்டார்கள். ஆலோசனை செய்வதற்கு மனைவிமாரே தக்கவர். நம்முடைய க்ஷேமலாபங்களில் கண்ணுங் கருத்துமா யிருப்பவர் நம் இல்லாளினும் வேறொருவர் உண்டா? இல்லையே.

7 வரவு குறைந்து அதிக சங்கடமான ஸ்திதியிலிருந்து மனங் கலங்கும் பொழுது புருஷன் நிலைமையை மனைவிக்கு அன்புடன் தெரிவிக்கவேண்டும். அப்பொழுது அவனுக்கு நேரிட்ட இக்கட்டுக் கேற்றாற்போல் செலவுசெய்வாள். மாதர் சில சமயங்களில் தங்கள் கணவருடைய நிலைமை யின்னதென் றறியாது பணத்தை தாராளமாய்ச் செலவு செய்வார்கள். கணவருடைய சங்கட ஸ்திதியை யறிந்திருப்பார்களானால் சிக்கனமாகச் செலவு செய்வர்.

8. மனைவி எவ்விஷயத்திலாயினும் பிழைபட்டால் நாலுபேர்க் கெதிரில் கண்டிக்கக் கூடாது. சில மனைவிமார் இதனைச் சகியார்கள். தனியாயிருக்கும்போது எவ்வளவு கண்டித்தாலும் பொறுப்பர். இது வன்றியும் மனைவியரை யடித்துத் தொந்தரவு செய்து மனம் நோவச் செய்வது மிகக் கொடிய விஷயம்.

சித்திரப் பத்தி

1. வாத்தியார் :—காலில்லாதவன் ? என்ன.
பையன் :—நொண்டி.
வாத்தியார் :—காலைத் தூக்கு. கண் இல்லாதவன் ?
அடுத்த பையன் :—குருடன்.
வாத்தியார் :— கண்ணை மூடிக்கொள்.
கோமாளி :—இந்தப் படிப்புக்கு இங்கு வர வேண்டுமா ?

2. கோமாளி:--இந்தப் படிப்பு எனக்குக் கூடத் தெரியும். வீணுகச் சம்பளம் கொடுப்பானேன் ? ஆனுல் கட்டடம் பிரமாண்டமாயிருக்கிறது.



3. பள்ளிச் சிறுவன் மனத்திற்கு விளக்காத பாடத்தை உருப்போடுகிறுன்.

4. இன்ஸ்பெக்டர் மாண வர்களைப் பார்வை யிட்டு "ஒழுங்காக ஆடையணிந்து சுத்த மாக இருப்பதற்காக" சந்தோஷப்பட்டு, வாத்தியாருக்கு நற் சாக்ஷிப் பத்திரம் கொடுத்துப் போ கிருர்.

5. பணத்தைக்கொட்டிப் படித்துவிட்டு, அழ காய் ஆடையணிந்து சேவகஞ் செய்ய ஒரு "ஆபீஸுக்கு"ப் போய் வேலை கேட் கிருன், பாவம். வேலை காலியில்லை யென்று முருக்காய்ப் பதில் சொல்லுகிருர்கள்.

6. அலைந்து அலைந்து ஒருவரு டங் கழித்து சப்ரிஜிஸ்தார் ஆபீஸில் 15 ரூ. சம்பளத் திற்கு காப்பிஸ்டாக அம ருகிருன். ஆனல் ஆடை முறுக்காய்த்தா னிருக்கி றது.

பத்திராதிபர் குறிப்புகள்

தேசபந்து தாசரின் தியாகம் :—கல்கத்தாப் பிரமுகரான தேசபந்து சித்தரஞ்சன தாசர் எட்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள தமது ஆஸ்திகள் அனைத்தையும் தருமத்திற்கு கொடுத்துவிட்டார். இதை நினைக்கும் போதே நமது எண்ணங்கள் 2000 வருஷத்திற்கு முன் "கபிலவஸ்து" என்ற நகரத்தில் அவதரித்த அரச குமாரனான "புத்தனி"டம் செல்லுகிறது. மாயையும் சுய நலமும் குடிகொண்டிருக்கும் இந்நாளில், நமது தாசரைப்போன்ற தியாகி ஒருவர் இருப்பது நம் தாய்நாடு செய்த பெருந்தவமே. தேசபந்துவுக்கு வருடத்தில் வக்கீல் தொழிலில்மட்டும் மூன்று நான்கு லக்ஷம் வந்துகொண்டிருந்தன. தேச கைங்கரியத்தில் ஈடுபட்டு, சகலத்தையும் துறந்து இன்று குடியிருக்கும் வீட்டையும் இதர சொத்துக்களையும் தேசக் கைங்கரியத்திற்கு அர்ப்பணம் செய்துவிட்டு ஆண்டியாகிவிட்டார். அவருடைய அரிய தியாகத்தை ஆங்கிலர்களும் மனதார வாழ்த்துகின்றனர். தேசபந்துவைப் போல், பாரத நாட்டில் பலர் ஏற்படவேண்டும்.

*   *   *   *   *

லீ கமிஷன் :—இந்தியாவில் உத்யோகம் செய்யும் ஐ. சி. எஸ். உத்யோகஸ்தர்களுக்கு இன்னும் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று லீ கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. இந்த சிபார்சால் நம் நாடு வருஷத்தில் ஏழு லக்ஷம் பவுன் அதிகார வர்க்கத்திற்காக அதிகமாகச் செலவழிக்க ஏற்படும். தற்சமயமுள்ள வரியின் பளுவைத் தாங்காமல் இந்தியர்கள் தவிக்கிறார்கள். திரும்பவும் ஏழு லக்ஷம் பவுன் அதிகமாக இந்தியா கொடுக்கவேண்டுமாம்! வெள்ளத்தின் கொடுமையால் உண்ண உணவில்லாமலும், உடுக்க உடையில்லாமலும் இருக்க இடமில்லாமலும் தவிக்கும் ஏழைகளுக்கு உதவிசெய்யப் பணமில்லை யென்கிறார்கள் நமது அரசாங்கத்தார். அதிகார வர்க்கத்தினர்களுக்கு செலவழிக்கப் பணம் எங்கிருந்து தான் வருமோ!

கலைச் சண்டை :—ஸ்ரீரங்கத்தில் திரும்பவும் வடகலை, தென்கலைச் சண்டை தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. கோர்ட்டு விவகாரமும் மும்முரமாய் நடந்து வருகிறது. ஸ்ரீரங்கம், ஜில்லா முனிசிபு, இவ்வழக்கு முடியும் வரை அகோபில மடம் ஜீயர் அவர்கள் கோயிலுக்குள் பரிவாரத்துடன் செல்லக் கூடாதென்று தடை உத்தரவு விடுத்திருக்கிறார்; வடகலை தென்கலைச் சண்டையின் பெயரால் லெக்ஷக்கணக்காய்ப் பணம் கோர்ட்டில் விரையம் செய்யப்படுகிறது. வக்கீல்களுக்கு இது நற்காலமே. தமிழ் நாட்டில், சமயச் சண்டை, ஜாதிச்சண்டை, விபூதி, திருமண்சண்டை, கலைச்சண்டை முதலிய சண்டைகள் மிகுதி. இச்சண்டைகள் என்று ஒழியுமோ அன்று தான் நாடு க்ஷேமமப்படும். தேச முன்னேற்றத்திற்காகச்

செய்யவேண்டிய காரியங்கள் பல உள. நமது மடாதிபதிகள், இத்தகைய சிறு விஷயங்களில் காலத்தையும் பணத்தையும் வீணுக்கு கிறார்கள். இந்த இரண்டையும் தேச நன்மைக்காகச் செலவழிப்பார்களானால், இனி எழுதப்போகும் இந்தியச் சரித்திரத்தில் இவ்வுத்தமர்களின் பெயர் பொன் எழுத்தால் எழுதப்படுமன்றோ? இனியாவது விழிப்பார்களாக.

மைசூர்ச் சட்டசபை:—கன்னட பாஷையை ராஜாங்க பாஷையாக்கி சட்டசபை நடவடிக்கைகள், கன்னட பாஷையிலேயே நடைபெறச் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு, தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ள தயாராயிருப்பதாக திவான் தெரிவித்திருக்கிறார். இது நன்று. இத்தீர்மானத்தைக் கொண்டு வந்த அங்கத்தினர்களை நாம் மனதார வாழ்த்துகிறோம். இதனால் கன்னட பாஷைக்கே நற்காலம் வந்துவிட்டதாகச் சொல்ல வேண்டும். சென்னைச் சட்டசபை அங்கத்தினர்கள் இனியாவது சுதேச பாஷையை பேசவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வருவார்களா? வங்காளத்தில் பாஷாபிவிருத்திக்காகப் பெருமுயற்சிகள் செய்துவருகின்றனர். ஆனால் நாமோ—தமிழரோ—இது காறும் என்ன செய்திருக்கிறோம். என்ன செய்யப் போகிறோம் தேசாபிமானம், பாஷாபிமானம், ஒவ்வொருவருக்கும் தானாக உண்டாகுவது இயல்பு. ஆனால் தமிழனிடம் இரண்டையும் காண்பது அரிதா யிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கம்தோற்றி (மகாத்மா நீடுழி வாழ்க) இரண்டு மூன்று வருடங்கள் வரை நமது ஆங்கில நிபுணர்—தமிழ்த் தலைவர்கள் தமிழிலேயே சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார்கள். இப்பொழுதோ சென்னையில் திரும்பவும் ஆங்கிலம் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. சமீபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் ஆங்கிலத்திலேயே சகல நடவடிக்கைகளும் நடந்தன. இதை நினைக்கும் போது எமது உள்ளம் ஏங்குகிறது. தமிழ்த் தாயிடம்தான் முறையிடவேண்டும்.

வரி விசாரணைக் கமிட்டி:—இந்தக் கமிட்டியார் டில்லியில் விசாரித்த சாட்சிகளில் ஒருவரான ஸ்ரீமான் ராதா கமால் மூக்கர்ஜி விசாரணையில் கீழ்வருமாறு சொல்லி யிருக்கிறார்.

> "தற்போதுள்ள நிலவரி முறையை அடியோடு ஒழித்துவிட்டு, விவசாயத்திலிருந்து கிடைக்கிற லாபத்தின் மேல் வரி அதாவது ஒரு பகுதி விதிப்பதென்ற முறையை அநுஷ்டிக்க வேண்டும். பிரான்ஸில் அம்முறைதான் கையாளப்படுகிறது"

காருண்ய கவர்ன்மெண்டார் இதனைக் கவனிப்பார்களா வென்று தான் நமது சந்தேகம். பொன் விளைந்த நம் நாட்டில் இன்று விவசாயத்தால் லாபமில்லையென்று எங்கும் கூக்குரல் கேட்கிறது. காரணம் என்ன? நிலங்களுள்ளவர்களில் அநேகர் நிலத்தை விற்றுவிட்டுப் பணத்தை

பாங்குகளில் சொற்ப வட்டிக்குப் போட்டுவிட்டு, பட்டணத்திற்கு ஊழியம் செய்யவந்து விடுகிறார்கள். வரி விசாரணைக் கமிட்டி இவ் விஷயமாய் நன்கு ஆராய்ந்து வரியைக் குறைக்க கவர்ன்மெண்டாருக்கு சிபார்ஸ் செய்வார்களென்று பெரிதும் நம்புகிறோம்.

வேளாளர் மகாநாடு:—இம்மாதம் 19, 20, 21-ந் தேதிகளில் வட ஆர்க்காடு ஜில்லா ஆம்பூரில் நமது அபிவிருத்தி இலாகா மந்திரி, உயர் திரு. திவான் பஹதூர் திரு. செ. சிவஞானம்பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ்க் கூடியது. நவசக்தி ஆசிரியர் திரு. கலியாண சுந்தர முதலியாரும் சென்றிருந்தார்: அன்னார் அங்கு, விவேகானந்தர் சங்கம், மாதர் சங்கம் முதலிய பல சங்கங்களில் உபந்நியாசங்கள் புரிந்தார்.

டாக்டர் சுப்பிரமணிய ஐயர்:—5-12-24ல் இவர் ஆண்டவன் அடியினை சேர்ந்தா ரென்பதை விசனத்துடன் தெரிவிக்கிறோம். தென்னாட்டுக்கிழச்சிங்கம்—நமது மணி ஐயர் விண்ணுலகம் சென்று விட்டார். இவருடைய சரித்திரச் சுருக்கம் மற்றொரு பகுதியில் வெளியிட்டிருக்கிறோம். தமிழ்நாட்டு இளைஞர்கள் இவர் அடிச்சுவட்டில் நடக்க முயலுவார்களாக.

ஏகாதிபத்ய பொருட் காட்சி.

வெம்ப்ளியில் நடைபெறும் ஏகாதிபத்ய பொருட் காட்சியை அடுத்த வருஷத்தில் வைத்து நடத்துவதாயிருந்தால் இந்தியா கவர்ன்மெண்டார் அதில் சம்பந்தப் படப் போவதில்லையென்று அலகபாத் ‘பயோனியர்’ பத்திரிகை கூறுகின்றது.

சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் 1-ந்தேதி ஜப்பானில் உண்டான பூகம்பத்திலிருந்து உண்டான பூகம்பங்களைப்பற்றி டோக்யோ சென்ட்ரல் அப்ஸர்வேட்டரி ஒரு சென்ஸஸ் கணக்கெடுத்திருக்கிறது. மொத்தம் உண்டான பூகம்பங்கள் சென்ற வருஷம் உண்டாயின. சென்ற செப்டம்பரில் மாத்திரம் 2,360 பூகம்பங்கள் உண்டாயின.

புகையிலை அபராதம்:—விர்ஜினியாவில் ஒரு மாதம் சேர்ந்தாற் போலக் கோயிலுக்கு வராதவர்கள் 50 பவுண்டு புகையிலை அபராதம் கொடுக்க வேண்டுமென்ற பழைய வழக்கம் இன்னும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறதாம்.

என்றும் இளைஞன்:—அமெரிக்காவில் 22 வயதான ஒருவன் தான் 7 வயதில் எப்படியிருந்தானோ அதேவிதமாக இப்போதும் இருக்கின்றானாம். அவனுக்கு எத்தனை வயதானாலும் 7 வயதுப் பையனாகவே காணப்படுவானென்ன அவனைப் பரிசோதித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

தேசபந்து தாஸ்,
அக்கிராசனாதிபதி
அகில இந்திய புத்தகசாலை மகாநாடு.

ஸ்ரீமாந் ஸி. ஆர். ரெட்டி
அக்கிராசனாதிபதி
அகில இந்திய மாணவர் மகாநாடு.

ஸ்ரீமாந் ஏ. ராமசாமி முதலியார்,
அக்கிராசனாதிபதி
அகில இந்திய பிராமணரல்லாதார் மகாநாடு.

அதிசயம்

[பரலி—சு. நெல்லையப்ப பிள்ளை எழுதியது.]

மகா மேதாவியான தர்ம ராஜனை ஒரு சமயத்தில் பூலோகத்திலே மிகவும் பெரிய அதிசயம் என்னவென்று கேட்க, தினந்தோறும் ஆயிரக் கணக்கானவர்கள் இறந்துகொண் டிருக்கவும், மனிதர்கள் தாங்கள் நீடூழி காலம் வாழ்ந்திருக்கப் போவது போலக் கருதிக்கொண் டிருப்பதே பூலோகத்தில் மிகப் பெரிய அதிசயமென்று தர்மராஜன் சொன்னார்.

***

பொய்யும் புலையும் கொலையும் மிகுந்த இந்தக் கலி காலத்திலே காந்தி யடிகள் தோன்றி உலகத்திற்கு அற நெறி காட்டுகின்றார். இதற்கு முந்திய யுகங்களிலே அற நெறி காட்டிச் சென்ற பெரியோர்களில் பாரத காலத்தில் தரும ராஜனை ஓர் தலைவனாகக் கொள்ள வேண்டும். தர்ம ராஜன் கூறியதாகப் பாரதக் கதை கூறும் மேற்கண்ட கூற்றின் உட்கருத்தை நாம் சிந்திக்க வேண்டும்.

***

நாள்தோறும் எத்தனையோ பேர்—எண்ணற்ற ஜனங்கள் சாகிறார்கள். நாமும் செத்துப் போவோம் என்று, எல்லோரும் இப்பொழுதே மாண்டொழிந்து போவோமென்று தர்ம ராஜன் சொல்லவில்லை. எல்லோரும் சாகிறார்களே. நாமும் சாகத்தானே போகிறோம். அதனால் ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று கருதிக் கண் மூடி மௌனமாயிருக்க வேண்டுமென்றும் தர்மராஜன் கருத வில்லை.

ஆனால் தர்மராஜன் அதிசய மடைந்ததற்குக் காரணம் வேறு. நாள்தோறும் எத்தனையோ பேர் உலக வாழ்வை நீத்து மரணம் அடைகின்றார்கள். குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வாலிபர்கள், கிழவர்கள் எல்லோரும், ஒரு வரன்முறையின்றித் தினந்தோறும் பல காரணங்களால் சாகிறார்கள். நாமும் ஒரு காலத்தில் சாகத் தான் போகிறோம். இந்த உலகம் நிலை யற்றது. இந்த உலக வாழ்க்கை—இந்த லௌகிகச் செல்வம், மாடமாளிகை, கூடகோபுரம், மனைவி, மக்கள், ஆடு, மாடுகள், பொன், மணி, நகை நட்டுகள், நில புலங்கள்—எல்லாம் நிலை யற்றவை. நமது வாழ்க்கையும் நிலை யற்றது. 'இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திட வில்லை.'

***

அவ்வாறு இருந்தும், உலகத்திலே மக்கள் எல்லோரும் ஒரே சகோதரர்கள்போல் அன்புடனும், ஐக்கியத்துடனும் கூடி இன்பத்துடன் வாழாமல், அற்ப காரணங்களுக்காகச் சண்டையிட்டு மண்டை யுடைத்துக் கொள்கிறார்கள். பொய் சொல்லுகிறார்கள். களவு செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் பகைக்கிறார்கள். வெறுக்கிறார்கள். இன்னும் எண்ணற்ற சிறுமைகள் புரிகிறார்கள்.

மானிட வாழ்க்கை நிலையற்றதா யிருக்கும் பொழுது, வையகச் செல்வ மெல்லாம் நிலையற்றதா யிருக்கும்பொழுது தெய்வத் திரு வருளால் பூமியில் வாழ்கின்ற நாம் இங்கே வாழ்ந்திருக்கும் சில காலத்தில் ஒருவர்க் கொருவர் அன்புடனும், ஐக்கியத்துடனும், கூடி வாழாமல், அற்ப காரணங்களுக்காகப் போராடிச் சீரழிந்துகொண் டிருக்கிறோம். காணி நிலத்திற்காகப் பத்துக் 'கோடு' ஏறுகிறோம். அற்ப காரணங்களுக்காக ஆயிரம் பொய் சொல்லுகிறோம். நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் நகைக்காகக் கோரமான கொலைகள் புரி கிறோம். ஜனங்களைப் பகைக்கிறோம். வெறுக்கிறோம்.........எண் ணிறந்த பாவங்களைப் புரிகிறோம்.......................திடீரென்று காலன் வந்துவிடுகிறான். கண்ணை மூடி விடுகிறோம்!

ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல

என்றார் திருவள்ளுவர்.

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன

என்றார் ஔவையார்.

இது பூலோகத்திலே மிகப் பெரிய தோர் அதிசய மல்லவா?

நீர்க்குமிழிக்கு நிகரான இந்த உலக வாழ்க்கையில் மனிதன் தருமத்தை—புண்ணியத்தைச் செய்யாமல் பாவத்தைச் செய்வதே பெரிய அதிசயம் என்று தர்மராஜன் கூறுகிறார்.

தரும நெறியிலே, சத்திய நெறியிலே வாழும் நன் மக்களுக்கு மரணம் இயற்கையாகவும் இன்பமாகவும் நேர்கின்றது. அதர்ம நெறியிலே செல்லுவோருக்கே மரணம் விபரீதமாகவும், கோரமாக வும் தோன்றுகிறது.

***

மனிதன் என்றும், எப்பொழுதும் தர்ம நெறியிலே சத்திய நெறியிலே செல்ல வேண்டும். மனம் பாவத்தைச் சிந்திக்கும் பொழுது மரணத்தைச் சிந்திக்கவேண்டும். 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்ற கிறிஸ்து நாதர் வாக்கில் மிகுந்த உண்மை யிருக் கிறது. பாவ மற்ற, புண்ணிய வாழ்க்கை நடத்துகிற நல்லோர் களுக்கு ஆயுள் நீண்டதாயும், வாழ்க்கை இன்பமாயும் அமைகின் றது. பாவமே புரியாத புண்ணிய சீலர்களுக்கு மரணம் இல்லை யென்று சொல்லலாம். முற்காலத்தில் மக்கள் நானூறு ஆண்டு களும், அதற்கு மேலாகவும் வாழ்ந்திருந்ததற்கு அவர்களது தர்ம வாழ்க்கையே காரண மாகும். கலியுகத்திற்குச் சாஸ்திரம் கூறும் நூறு வயது கூட இன்றி, இப்பொழுது ஆயுள் வரவரக்குறுகி வருவதற்கு மக்கள் இக்காலத்தில் பாவத்தை மிகுதியாகப் புரிவதே காரண மாகும்.

அதிசயம்

மனிதன் உள்ளத்திலே பாவ சிந்தனை தோன்றும் பொழுது, அவன் மரண சிந்தனை கொள்ள வேண்டும். நாளைக்கு, இன்னும் ஒரு மாதத்தில் தான் சாகப் போகிறதாக அறிந்த மனிதன் பாவம் செய்வானா? அண்ணன் தம்பிகளுடன் சண்டை போடுவானா? அக்கம் பக்கத்தாருடன் போராடுவானா, வேறு அக்கிரமங்கள் செய்வானா? பிறரைப் பகைப்பானா? வெறுப்பானா? ஓர் அரசன் கொடிய நோய் ஒன்றால் பெரிதும் வருந்திக் குற்றுயிராய் வாழ்ந்திருந்தான். ஒரு மூலிகையின் ரசத்தைக் குடித்தால் குணப்படுமென்று ஒரு முனிவர் சொன்னார். அரசன் அந்த ரசத்தை நாள்தோறும் குடித்து வந்தான். வரவர அதிகமாகக் குடித்து வந்தான். சில நாட்களில் அரசனுக்கு நோய் நீங்கி விட்டது. உடம்பில் வலிமை ஏற ஏற, அரசன் மனத்தில் அசுத்த எண்ணங்கள் தோன்றலாயின. அரசன் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக ரசத்தைக் குடித்தானோ அவ்வளவுக் கவ்வளவு அவன் உள்ளம் தீய சிந்தனைகளில் ஆழ்ந்து நிலையின்றித் தத்தளிக்கலாயிற்று. இவ்வாறாகவே, அரசன் ஒரு நாள் முனிவரை நோக்கித், தாங்கள் உபதேசித்தவாறு மூலிகை ரசத்தை உட்கொண்டதில், நோய் நீங்கி, உடம்பில் வன்மை ஏற்படவே, என் உள்ளத்தில் தீய எண்ணங்கள் தோன்றி என்னை வாட்டுகின்றன. அதனால் நான் பாவச் சேற்றில் அழுந்த நேரிடுமே என்று கவலைப்படைகிறேன். தாங்கள் என்னைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக அந்த ரசத்தை உட்கொண்டும், தேவரீர் பிரமசரிய நிலை தவறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? என்றான். முனிவர் சொன்னார்: அரசனே, உன் கேள்விக்குப் பின்னர் மறுமொழி கூறுகிறேன். அதற்கு முன் இப்பொழுது ஒரு முக்கிய செய்தியை உனக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, இன்று முதல் முப்பதாம் நாளில் உனக்கு மரணம் ஏற்படப் போகிறது. அந்த ரசத்தை நீ இதுவரை உட்கொண்ட அளவுக்கு ஏழு மடங்கு அதிகமாக இந்த முப்பது நாட்களும் நீ உட்கொண்டு வரவேண்டும் என்றார். அரசன் அவ்வாறே செய்தான். அவனது உடம் உரனும் பின் ஒளியும் அற்புதமாய்ப் பெருகி வந்தன. ஆனால் முன் அவன் உள்ளத்தை வருத்திய தீய எண்ணங்கள் இப்பொழுது எங்கே? மரண சிந்தனையால் அவை மாயமாய் மறைந்து போயின. பின்னர் முனிவர் அரசனைக் கண்டு உன்னை முன் வருத்திய பாவ சிந்தனைகள் எவ்வாறிருக்கின்றன? என்றார். சுவாமி, என் உள்ளத்தில் மரண சிந்தனை புகுந்திருக்கையில், தீய சிந்தனைகள் எவ்வாறு தலைகாட்ட முடியும்? என்றான் அரசன். உடனே முனிவர் 'அரசே, உனக்கு மரணம் ஏற்பட இன்னும் சுமார் ஒரு மாசம் இருக்கிறது. அவ்வாறிருந்தும் மரண சிந்தனை பாவ சிந்தனைகளையெல்லாம் உன் உள்ளத்திலிருந்து ஓட்டிவிட்டன. எனவே நீ எப்பொழுதும் மரணத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தால், தீய சிந்தனைகள் உன்னைச் சிறிதும் அணுகா. நான் எப்பொழுதும் மிருத்யுவை என் எதிரிலேயே

பார்த்துக்கொண் டிருக்கிறேன். எனவே, என் உள்ளத்தில் பாவ சிந்தனைக்கு இடமே யில்லை" என்றார். பாவ நாசத்திற்கு மரண சிந்தனையே பரம ஔஷதம். வங்க நாட்டுத் தேசபக்தரான காலஞ் சென்ற அஸ்வினி குமார தத்தர் இயற்றிய 'பக்தி யோகம்' என்ற நூலில் இந்தச் சிறு கதையைக் கூறி யிருக்கிறார்.

***

மரண சிந்தனையைக் கொண்டு, எமன் வரப்போகிறா னென்று கருதிக் கவலைப்பட்டுக் கொண்டு, ஊண் உறக்க மின்றி, அல்லும் பகலும் அழுதுகொண் டிருக்கவேண்டு மென்பது தரும ராஜன் நோக்கமல்ல. இந்த நிலையற்ற உலகத்தில், நிலையற்ற காரியங்களுக்காகப் போராடாமலும், பாவங்களைப் புரியாமலும், நிலையான அறத்தையும் அன்பையும் மேற்கொண்டு எல்லோருடனும் ஐக்கியமாக என்றும் இன்பத்துடன் வாழவேண்டு மென்பதே மரணத்தை அடிக்கடி நினைவூட்டும் நமது முன்னோர் கருத்து.

***

அற நெறியிலும் அன்பு நெறியிலும் வாழ்வதால், மனிதன் மரணத்தை வெல்லவும் கூடும். மரணம் நம்மிலே பலர் கருதுமாறு அவ்வளவு கோரமானது மல்ல. மரணத்தின் பின்னும் மனிதன் உயிர் வாழ்கின்றான். மரணத்தின் பின் மனிதர் நிலையைப் பற்றிய ஆராய்ச்சிகள் இப்பொழுது அதிகமாக ஏற்பட் டிருக்கின்றன. மரணம் அடைந்த உற்றார் உறவினர் களுடன் நாம் சில முறைகளால் செய்திப் போக்கு வரவு நடத்தலும் கூடும்.

என்றும் குமரனாய், என்றும் இளமையாய் என்றும் இன்பத்துடன் வாழ்ந்து, மரணத்தை வெல்வதற் குரிய முறைகளை நமது முன்னோர்கள் கூறி யிருக்கிறார்கள். அவர்கள் பின்னோர்களான தற்கால நம்மவர்களிலும் சிலர் அம் முறைகளை இப்பொழுது ஆராயத் தொடங்கி யிருக்கிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெறுவ தாக.

***

ஆனால் மரணத்திற் கஞ்சி, பாவ நெறியை விட்டு விலகி, இயற்கை நெறியான தர்ம நெறியிலே செல்வதால் தான் மக்கள் இன்ப வாழ்க்கை யெய்தி, என்றும் இளமையும், என்றும் இன்பமும் பொருந்திய மரண மற்ற பேரின்ப வாழ்க்கையை அடைதல் கூடும்.

இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய் !
இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டுவாய் !

என்று நாம் அனைவரும் தெய்வத்தைப் போற்றுவோ மாக.

குருவிப் பாட்டு

அருவி போலக் கவி பொழிய—எங்கள்
அன்னை பாதம் பணிவேனே
குருவிப் பாட்டை யான்பாடி—அந்தக்
கோதை பாதம் அணிவேனே. 1

சின்னஞ் சிறு குருவீ—நீ
செய்கிற வேலை யென்ன ?
வன்னக் குருவி—நீ
வாழும் முறை கூறாய் ? 2

கேளடா மானிடவா—எம்மில்
கீழோர் மேலோர் இல்லை
மீளா அடிமை இல்லை—எல்லோரும்
வேந்த ரெனத் திரிவோம் 3

உணவுக்கு வேலை யில்லை—எங்கும்
உணவு கிடைக்கு மடா ?
பணமும் காசு மில்லை—எங்கு
பார்க்கினும் உணவேடா ! 4

சிறிய தோர் வயிற்றினுக்காய்—நாங்கள்
ஜென்ம மெல்லாம் வீணாய்
மறியலில் இருப்பது போல்—பிறர்
வசத்தினில் உழல்வ தில்லை. 5

காற்றும் ஒளியு மிகு—ஆ
காயமே எங்கள்
ஏற்ற மிகு வீடு—இதற்
கெல்லை யொன் றில்லை யடா ! 6

வையகம் எங்குமுள—உயர்
வான பொருளெல்லாம்
ஐயமின் றெங்கள் பொருள்—இவை யெம்
ஆகார மாகு மடா ! 7

ஏழைகள் யாரு மில்லை—செல்வம்
ஏறியோர் என்று மில்லை
வாழ்வுகள் தாழ்வு மில்லை—என்றும்
மாண்புடன் வாழ்வ மடா ! 8

கள்ளம் கபட மில்லை—வெறும்
கர்வங்கள் சிறுமை யில்லை
எள்ளற் குரிய குணம் - இவை
யாவும் உம் குலத்தி லடா ! 9

களவுகள் கொலைக ளில்லை—பெருங்
காமுகர் சிறுமை யில்லை
இளைத்தவர்க்கே வலியர்—துன்பம்
இழைத்துமே கொல்ல லில்லை 10

சின்னஞ் சிறு குடிலில்—மிகச்
சீரழி வீடுகளில்
இன்னலில் வாழ்ந்திடுவீர்—இஃது
எங்களுக் கில்லை யடா! 11

பூநிறை தருக்களிலும்—மிகப்
பொலிவுடைச் சோலையிலும்
தேனிறை மலர்களிலும்—நாங்கள்
திரிந்து விளையாடு வோம். 12

குளத்திலும் ஏரியிலும்—சிறு
குன்றிலும் மலையினிலும்
புலத்திலும் வீட்டினிலும்—எப்
பொழுதும் விளையாடுவோம். 13

கட்டுகள் ஒன்றுமில்லை—பொய்க்
கதைகளும் ஒன்றுமில்லை
திட்டுகள் கலகங்கள்—முதற்
சிறுமைகள் ஒன்றுமில்லை. 14

குடும்பக் கவலையில்லை—சிறு
கும்பித் துயரமில்லை
இடும்பைகள் ஒன்றுமில்லை—எங்கட்
கின்பமே என்று மடா? 15

துன்பமொன் றில்லை யடா!—ஒரு
துயரமும் இல்லையடா!
இன்பமே எம் வாழ்க்கை—இதற்கு
ஏற்ற மொன் றில்லையடா! 16

காலையில் எழுந்திடுவோம்—பெருங்
கடவுளைப் பாடிடுவோம்
மாலையும் தொழுதிடுவோம்—நாங்கள்
மகிழ்ச்சியில் ஆடிடுவோம். 17

தானே தளைப்பட்டு—மிகச்
சஞ்சலப் படும் மனிதா!
நானோர் வார்த்தை சொல்வேன்—நீ மெய்ஞ்
ஞானத்தைக் கைக்கொள்ளடா! 18

விடுதலையைப் பெறடா—நீ
விண்ணவர் நிலை பெறடா!
கெடுதலை ஒன்றுமில்லை—உன்
கீழ்மைகள் உதறி டடா! 19

இன்ப நிலை பெறடா !—உன்
இன்னல்கள் ஒழிந்ததடா !
துன்பம் இனியில்லை—பெருஞ்
சோதி துணை யடடா ! 20

அன்பினைக் கைக் கொளடா !—இதை
அவனிக் கிங் கோதிடடா ?
துன்பம் இனி யில்லை—உன்
துயரங்கள் ஒழிந்ததடா ! 21

சத்தியம் கைக் கொளடா—இனிச்
சஞ்சலம் இல்லை யடா !
மிடத்தைகள் தள்ளிடடா !—வெறும்
வேஷங்கள் தள்ளிடடா ! 22

தர்மத்தைக் கைக் கொள் ளடா !—இனிச்
சங்கடம் இல்லை யடா !
கர்மங்கள் ஒன்றுமில்லை—இதில் உன்
கருத்தினை நாட்டிடடா ! 23

அச்சத்தை விட்டிடடா !—நல்
ஆண்மையைக் கைக் கொளடா
இச்சகத்தினிமேல் நீ—என்றும்
இன்பமே பெறுவை யடா ! ரெ. 24

மதிப்புரை

காந்தி புராணம் :—நமது நேயர்களுக்கு காந்தி புராணம் புதிதல்ல. ஏற்கனவே முதலில் வெளி வந்த இரண்டு காண்டங்களையும் அறிமுகம் செய்து வைத்திருக்கிறோம். மனமுவந்து மூன்றாங் காண்டத்தையும் நமது பார்வைக்கு அனுப்பிய திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மையாருக்கு நன்றி கூறுகிறோம். இது இனிய நடையில் சகலரும் எளிதில் படிக்கக் கூடிய செய்யுள் நடையில் எழுதிய நூல். இதில் காந்தியடிகள் ஏரவாடாச் சிறை சென்றது முதல் சமீபத்தில் நிகழ்ந்த மகாத்மாவின் உண்ணு விரதம் வரை அடங்கியுள்ளது. அம்மையார் தமிழகத்திற்குப் புதியவ ரல்லர். நூன்முகத்தில் அம்மையார் இம் மூன்றாங் காண்டம் செலவாகு முன்னராயினும் தேச விடுதலையும் சமாதான நிலைமையுந் தோன்றி அவைகளே நான்காம் காண்ட நறும் பயனுக ஒளிர்தரப் புனையும் பெருவாழ்வை யளிக்கத் திருவருளை வேண்டி நிற்கின்றேன் என்று பிரார்த்தித்திருக்கிற இப் பிரார்த்தனையில் நாமும் கலந்து கொள்ளுகிறோம். ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இந்நூல் இடம் பெற வேண்டுமென்பது நமது விருப்பம். இதன் விலை அணு பன்னிரண்டே.

பாணபுரத்து வீரன் :—இது ஸ்ரீமாந் வெ. சாமிநாத சர்மா நாடகத் தமிழில் இயற்றிய ஒரு அழகிய நூல்: நம் நாட்டில்—தமிழ் நாட்டில் மலிந்து, குவிந்து குஜிலியில் விற்கப்படும் நாடகங்களைப் போலல்ல. இது தேச பக்தியை உண்டாக்குமென்பது இந் நாடகத்தினைப் படிக்கும் நேயர்கட்கு நன்கு புலப்படும். மளமளப்பான காகிதத்தில் முத்துப் போன்ற எழுத்துக்களில் அச்சிடப்பட் டிருக்கிறது. உயர்ந்த காலிகோ பைண்ட் செய்யப்பட்டு, சீமையிலிருந்து வரும் புத்தகங்களைப் போல் வெளி அட்டையில் பாணபுரத்து வீரனின் படத்துடன் வெளிவந்திருக்கிறது. இப் புத்தகம் ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் முன்னுரை யணிந்திருக்கிறது. இதன் விலை ரூபாய் ஒன்றே. வேண்டுவோர் எஸ். ராதா அண்டு கம்பெனி, மிண்ட் கட்டடம், சென்னை யென்று எழுதிக்கொள்ளவும்.

கொங்கு வேளாள மித்திரன் :—இது ஓர் சமூக வாரப் பத்திரிகை ; சேலத்திலிருந்து வெளி வருகிறது. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந். ப. மு. செட்டியண்ணக் கவுண்டர். ஒவ்வொரு சமூகமும் காலத்திற் கேற்றாற்போல் சீர்திருத்தம் அடையவேண்டியது அவசியம். கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கு ஓர் பத்திரிக்கை ஏற்பட்டது நன்றே. இதிலிருக்கும் வியாசங்கள் நல்ல நடையில் எழுதப் பட்டிருக்கின்றன. இதன் வருடச் சந்தா ரூபாய் ஐந்து.

குழந்தைக் கட்டி :—இது ஸ்ரீமாந் எம். ஏ. கிருஷ்ணய்யர் எல். எம். பி. அவர்களால் எழுதப்பட்டது. சாதாரண நடையில் சகலரும் எளிதில் வாசிக்கும் படி எழுதப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில், சிசு மரணங்களைத் தடுப்பதற்காக எத்தனையோ சங்கங்கள் ஏற்பட்டு, லக்ஷக்கணக்காய் நோட்டீஸ்கள், இலவசமாய் வழங்கப்படுகின்றன. கூட்டங்கள் கூடி இதன் விஷயமாய்ப்பிரசாரம் செய்யப்படுகின்றது. நம் நாட்டில் முக்கியமான விஷயங்களில் சிரத்தைக் குறைவு மிகுதியா யிருக்கிறது. தேச முன்னேற்றத்திற்குக் குழந்தைகள் சரிவரக் கவனிக்கப்படல் வேண்டும். ஏனெனில் அவர்கள் தான் வருங்காலத்துத் தேசாபிமானிகள். குழந்தைக் கட்டி என்னும் ஈரல் நோயே குழந்தைகளைக் கொள்ளைக்கொண்டு போகின்றன வென்றும், இவ்வியாதி உற்பத்தியாகும் காரணமும் அதனைப் பரிகரிக்கும் மார்க்கமும் இன்னும் பல விஷயங்களும் விபரமாய் இப் புத்தகத்தில் காண்கின்றன. தமிழ் நாட்டுச் சகோதரர்கள் இப் புத்தகத்தை வாங்கி அவசியம் படிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதனால் தெரிய வேண்டிய விஷயங்கள் பல உள. இதன் விலை ரூ. 1-4-0. வேண்டுவோர் ஸ்ரீமாந் டி. ஜி. கிருஷ்ணஸ்வாமி பிள்ளை, தபாற்பெட்டி 1272, சென்னை என்று எழுதிக்கொள்ளவும்.



PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு
ரூ. **2-4.**



**"Collapsible"
Key Ring.**

A Key Ring that
does not buldge
the pocket,

**Price As. 3
each.**

Dozen Rs. 2.

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புது மாதிரி நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணு 14.
4 மு. ,, 1-க்கு ரூ. 1.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

அநேக நாளாக எதிர்ப்பார்த்திருந்த புஸ்தகம் வெளியாகிவிட்டது!

ஸ்ரீ ஸ்வாமி ராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்.

[தமிழ் மொழி பெயர்ப்பு]

நமது தேசாபிமான சிரேஷ்டர் ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரைப் போல் அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் முதலான அந்நிய நாடுகளுக்கு விஜயஞ்செய்து, நமது வேதாந்த ஜயபேரிகையை முழங்கச் செய்த பாஞ்சல நாட்டு அத்வைத கேஸரியாகிய ஸ்ரீ ஸ்வாமி இராம தீர்த்த பரமஹம்ச (M. A.) ரின் அற்புத சரித்திரம். அவரது ஆத்ம ஞானக் கொள்கைகள், உபதேசங்கள் முதலியவைகளைத் தமிழ் நாட்டார் மிகத் தெளிவாக அறிந்துகொள்ளும் வண்ணம் ஸ்வாமிகளின் அற்புத மான பிரசங்கங்கள் இதில் அடங்கியுள்ளன.

இதில் அடங்கிய விஷயங்கள்.

1. வெற்றி பெறும் இரஹஸ்யம், 2. இந்தியாவிற்குத் தற்காலம் வேண்டியவை, 3. ஆத்ம தர்மம், 4. சாதாரண தர்ம சபையின் கொள்கைகள், 5. ஸ்வாமிகள் எழுதிய கடிதங்களின் சாரங்கள், 6. பரிபூர்ண அன்பும், குணசோதனையும்.

(1) தீரத்தன்மை, (2) பரிசுத்த குணம் என்பதென்ன? (3) அழகு என்பது என்ன? (4) விதியென்பது, (5). தொழில், (6) சித்திரம், (7) அனுபவ ஞானம், சோம்பேறித்தனம் அல்லது தமோகுணம், (8) சுயம் ஜோதி, (9) சமஷ்டி பாவனையும் ஆத்மானுபவமும், (10) ப்ரஹ்மமும் சிருஷ்டியும், (11) ஆத்ம விரிவு, (12) சகோதரத்துவமா? ஏகதத்துவமா? (13) துக்க நிவிர்த்தியும் சுவானுபோகமும், (14) கிருகஸ்த தர்மம் பேராநந்தத்தைத் தருவதெப்படி? (15) தன் விதிக்குத் தானே கர்த்தா, (16) உன்னதமான ஊக்கம் என்னும் அமைதி, (17) அன்பெனப் படுவது யாது? (18) சத் சொருபானுபவம், (19) சத்பொருளும் பாவரூபமும், (20) வேதாந்தமும் சமூக உணர்ச்சியும், (21) அஞ்ஞானமே பாபகிறது, (22) ஆத்ம தர்ம விதி, (23) வேததத்துவ பொக்கிஷம், (24) கிருக தர்மம் கண்ணாடி போன்றது, (25) சில சிறு கதைகள்: (1) (99) என்ற மயக்கம், (2) இவனுக்கும் ஒரு கோடரி தீட்ட வேண்டும் போலும், (3) வீண் காலம் என்பது யாது? (4) கடவுள் எங்கு மிருக்கிறார் என்பதற்குத் தக்க ருஜு, (26) கடவுள் நன்றியறிவுள்ளவர், (27) ஸ்திரீகளிடம் ஆசை, (28) பிராணாயாமம், (29) அழகிய சிறு கதைகள்: (1) பைரன் என்ற கவி, (2) சங்கீதத்தில் ஆதிபுருஷன் அல்லது நாதன், (30) அமெரிக்கர்களுக்கு ஒரு விண்ணப்பம், ஓர் வேண்டுகோள், (31) வெற்றி பெறுதற்கேற்ற சாதனம், (1) வெற்றி பெறுவதற்கு வேண்டிய முதல் அம்சம் வேலை, (2) வெற்றி 2-வது அம்சம், (3) வெற்றி 3 பெறுவதற்கு வேண்டிய முதல் அம்சம் வேலை, (4) வெற்றி 4-வது அம்சம், (5) வெற்றி 5 பெறுவதற்கு வேண்டிய முதல் அம்சம் வேலை, (6) வெற்றி 6-வது அம்சம், (7) வெற்றி 7 பெறுவதற்கு வேண்டிய முதல் அம்சம் வேலை.

ஸ்ரீ ஸ்வாமிகள் யோக ஆசனபடத்துடன் உயர்ந்த காலிகோ கட்டடம் விலை ரு. **3-12-0.**

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
நெ. 4/34, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க் டவுன் (P.O.), சென்னை.

தங்களுக்குத் தென்னாட்டு பிராமணர்கள் செய்த சுத்தமான ஊறுகாய் வேண்டுமென்றால் உடனே தாமதமின்றிக் கிடைக்குமிடம் நமது கம்பனியே.

நோயாளிகளுக்கு மிகவும் நல்லது.

பாட்டல் ஒன்றுக்கு விலை ரூபா **1-8.**

தபாற் செலவு வேறு.

R. S. I. & Co., TRIPLICANE.

சர்வபடை சங்காரன்

எல்லா வித நாள்பட்ட படைகளையும், சொறி, சிரங்குகளையும் காயப் புண்களையும் சர்ம ரோகங்களையும் உடனே போக்கி குணத்தைத் தரும். விலை அணா 10.

எஸ். ராதா கம்பெனி, 246, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

உடைந்த கண்ணாடிகளை ஒட்டவைக்கும்

சுதேசித் திராவகம்

உங்களுடைய ஒரு ரூபாய் உங்களுக்கு அநேக ரூபாய்களைக் கொண்டு வரும். இது வரையிலும் வெளிவராதது. வெகு அபூர்வமாகவும் நூதனமாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. எவ்விதமான உடைந்த கண்ணாடிச் சாமான்களையும் ஒட்டவைப்பதில் சிறந்தது. நூற்றுக் கதிகமான உடைந்த சாமான்களை ஒட்ட வைப்பதற்குப் போதுமான ஒரு அவுன்சு புட்டி விலை ரூபாய் ஒன்றே.

சித்தகல்ப மகரத்வஜம்

அகில இந்திய ஆயுர்வேத மகாசபைகளில் 1919, 1920, 1921, 1922, 1923, 1924-ம் வருஷங்களில் நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பெற்றது. என்னாட் பட்டதாயினும் எப்படிப் பட்டதாயினும் எல்லாவித வியாதிகளையும் போக்கக்கூடிய ஓர் அபூர்வமான அமிர்தம்.

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

---

60 மாத்திரைகள் கொண்ட பட்டி ஒன்று ரு. **10** தான்.

பர்மாவுக்கு சோல் ஏஜெண்டுகள் :—

ஜி. ஜி. அண்டு ஸன்ஸ்,

60, மெர்ச்சண்டு வீதி, ரங்கூன்.

படிக்கப் படிக்க இனிக்கும் !   நினைக்க நினைக்க மணக்கும் !!

சரீர . மர்ம சாஸ்திரம்.

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இவ்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி,
சவுக்கார்பேட்டை, மதராஸ்.

மஹானின் மூலிகை.

சங்கத்தில் தங்கமெடல் பெற்றது சகலவித நோய்களும் நீங்கியும் புத்திரபாக்கியம் உண்டாகியும் அபாரமான காரியங்களெல்லாம் மனம்போல் வெற்றியடைந்தும் ஏராளமான நற்சாக்ஷிகளுள்ளது.

எதற்காகத் தேவையானாலும் ஆரம்பமுதல் விபரமெழுதி ஒரணா ஸ்டாம்பு அனுப்பினால் விபரமும் புக்கும் கிடைக்கும்.

எஸ். ஏ. கே. பிள்ளை,
பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா [சவுத் இந்தியா.]

உங்களுக்கு எது வேண்டும்?

நேர்த்தியான தங்க கிலிட் கையி லணியும் கடியாரம்.



இது வெகு அருமையாய் அமைக்கப்பெற்ற கடியாரம். இது வெகு உறுதியானது. நீடித்து உழைப்பது. சரியான மணி நேரத்தைக் காண்பிக்கக் கூடியது. இவ்வித நம்பிக்கையானதும், வாங்குவோருக்கு மனத்திருப்தியைக் கொடுப்பதுமாகிய கடியாரம், இந்தக் குறைந்த விலைக்கு உலகில் அகப்படுவது அரிது. இதன் டயலில் ரேடியம் பதித்திருப்பதால், இருட்டிலும் பகலைப்போலவே தெளிவாய் மணி பார்க்கக்கூடும். மூன்று வருட உத்தரவாதம். ரவுண்ட் ஷேப் தங்க டையல் கடியாரம் ரூ. 7. சாதா அலாரம் டைம்பீஸ் ரூ. 5.

உயர்ந்த "பீ" டைம்பீஸ்,

பெயர்பெற்ற கம்பெனியாரால் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு சமானம் கிடையாது. விலை குறைக்கப்பட்டது.

முந்துங்கள் !   முந்துங்கள் !!

"பீ" டைம்பீஸ் விலை ந. 2-8.

காலத்திற்குச் சரியான மணியைக் காட்டும்.



விலாசம் :—வீ. எஸ். வாச் கம்பனி,
தபால் பெட்டி 105,   மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:—வேஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோட் : : சென்னை.

இனாம்! விலையுயர்ந்த 12 சாமான்கள்!! இனாம்!!!

18 காரட் ரோல்ட் கோல்ட் கேசுடன் பொன்டயல் ரிஸ்லெட் கெடியாரங்கள்.

இதுவரை இம்மாதிரியான கெடியாரங்கள் இந்தியாவுக்கு வந்ததில்லை என்பது உண்மை. கெடியாரம் டயல் முழுமையும் பொன் பிளேட்டினால் தயாரித்து வெகு ரம்யமாய் இருக்கும். உயர்ந்த சாமான்களைக் கொண்டு தயாரித்தது. நெடுநாள்வரை உழைக்கக்கூடியது. நம்பிக்கையாக 3 வருஷம் உத்திரவாதம் கொடுக்கப்படும்.

இனாம் விபரம்:—தோல்பட்டை 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, தந்த சீப்பு 1, செண்ட் புட்டி 1, இமிடேஷன் கல் மோதிரம் 1, மணிபர்ஸ் 1, சாவிவளையம் 1, பேனாகத்தி 1, கல்வைத்த பட்டன் 4 ஆக 12. விலை ரூ. 8-8-0.

N.B.—ரவுண்டு, 4 மூலை, 8 மூலை பாரல் ஷேப் முதலியவை உண்டு. ஷேப்பைக் குறித்து எழுதவும்.

விலாசம்:—நோபுல் வாட்சு கம்பனி,

1/33, தாதா முத்தையப்பன் தெருவு, மதறாஸ்.

கோஞ்சம் பிரதிகளே இருக்கின்றன ஆர்டருக்து முந்துங்கள்.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக்கூடிய சுலபமான!தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

குறைந்த விலை! **ஆங்கில ஆசான்** பெருத்த விஷயம்!!

அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கிய மானது.

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. 2. தபால் சேலவு அண 6.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 259, தங்கசாலை தெருவு,

மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

அருமையான ஓர் வேதாந்த நூல் எது?

ஞான இரகசிய சிந்தாமணி

என்னும் நூலே!

அது உண்மையா? அன்று! என்பதை பரீக்ஷித்து பாருங்கள். இகத்திற்கும் பரத்திற்கும் உரிய சுகத்தையடைய விரும்புகிறீர்களானால் இந்நூலைப் படியுங்கள். தனிப்பிரதி அணா 8.

ராம சுப்பிரமணிய நாவலர்,

ராமவிலாசம், தக்கலைப்போஸ்டு, பத்மநாபபுரம்.

ஆச்சரியம்! **இரகஸிய இங்கி.** ஆச்சரியம்!!

இந்த இங்கியினால் இரகசியங்கள் கடிதம் மூலமாய் ஒருவருக்கொருவர் அறியவேண்டுமானால் அதில் உள்ள விஷயமறியஉபயோகிக்கும் முறைப்படி செய்தால் உடனே ஆச்சரியமாக ஷை கடிதத்திலிருந்து கறுப்பு இங்கியில் எழுதிய எழுத்து போல் தெரியவரும். இதை உபயோகிக்கும் முறைப்படி செய்கிற வரையில் இதிலெழுதியுள்ள விஷயத்தை அறிய ஒருவராலுமாகாது. கிரையம் 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1.

யுனைடேட் இண்டியா நாவல் ஸ்டோர்ஸ்,

போஸ்ட் பாக்ஸ் 1238, மதராஸ்.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிட்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா என்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷதசாலை, எழும்பூர், மதராஸ்.

பம்பாய் சில்க் புடவை.

ஒரு பக்கம் நூல், மற்றொரு பக்கம் பட்டு, அசல்பெங்களூர் பட்டுப்புடவையை தோற்கடிக்கும், ரூ. 80 மதிக்கக்கூடியது. அநேகவிதமான கலர்களில் கிடைக்கும். அசல் பெங்களூர் புடவையையும் இதையும் ஒன்றாய்வைத்துப் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது. கலருக்கு உத்திரவாதம். தினப்படி துவைக்கலாம்.

18 மு x $2\frac{1}{2}$ அகலம் பட்டுக்கரை பெங்களூர் முந்தாணி, விலை ரூ. **30.**

ஷை ஜரிகை கரை, விலை ரூ. **36.**

கேட்லாக் இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ், சென்னை.

எந்த ஜாதியாருக்கும், எந்த நாட்டாருக்கும், எவ் வயதினருக்கும், எப்பாலாருக்கும், எக் காலத்திற்கும், எவ்விடத்திற்கும்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உயர்ந்த மருந்தென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள்; மருத்துவர்கள் மதிக்கிறார்கள்; வைத்தியர்கள் புகழ்கிறார்கள். நீங்கள் உபயோகித்துப் பாருங்கள். 16 நாளைக்கு உபயோகிக்கக்கூடிய 32 மாத்திரைகள் விலை ரூபாய் ஒன்றே. ஐந்து டப்பிகள் நாலு ரூபாய்க்குக் கிடைக்கும்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

அகஸ்தியர் ஆபிஸ்

1925.] ஷூத்திய கியாலண்டர் [1925.

பிரதிதினம் ஒருநாள் கிழிக்கக்கூடியது

விலை அணா 6.

தபால்சிலவு வேறு.

துரைசாமி & கம்பெனி,

58, பெரியண்ணமுதலி தெருவு,

மிண்ட் போஸ்ட்,

மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

P. V. ராஜன் பட்டணம் பொடி

R. S. சுகந்த மூக்குத்தூள்

இவைகள் குணத்திலும் மணத்திலும் மேன்மையுற்று அதிக நாள் வரை கெடாமலிருக்கக் கூடியது. இந்தியா முழுவதும் சப்ளை செய்து வருவதில் இவற்றின் குண விசேஷங்களுக்காக பல ஊர்களிலிருந்து பொன் மெடல்களும் ஸர்டிபிகேட்டுகளும் வந்துக்கொண்டிருக்கின்றன. ஒரு முறை தருவிப்பவர்கள் மருபடியும் எமது பொடியை மறக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். வெளியூர் ஆர்டர்களுக்கு உடனுக்குடனே கவனித்து தகுந்தபடி அநுப்பப்படும்.

பொடி வீசை 1-க்கு டின் உள்பட கிரயம் ரூ. 3-10-0. சிறிய டின்களிலும் அநுப்பப்படும். R. S. சுகந்த மூக்குத்தூள் பாட்டல் 1-க்கு விலை அணா 4. ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4-0. சேர் டின் ரூ. 1-12.

ரெயில் சார்ஜு போஸ்டேஜ் வகையரா பிரத்தியேகம். ரொக்கம் அல்லது வி. பி.

ராஜன் பரிமள வாசனை புகையிலை, அசல் பாலக்காட்டு புகையிலை, ராஜன் படை மருந்து, வாசனை மிகுந்த அசல் காஜிபூர் பன்னீர், தாழம்பூ பன்னீர், பர்ஹம்பூர் கார மசாலா முதலிய பல ரகங்களும் சரஸமான விலைக்கு அநுப்பப்படும்.

பி. வி. ராஜன் & கம்பெனி,

நெ. 44, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ்.

தந்தி விலாஸம்: "நஸ்யம்," மதராஸ்.

நல்ல சமாசாரம்

உயர்ந்த பட்டணம் பொடி.

நாங்கள் உயர்ந்த புகையிலையினால் மிக்க குணமும் மணமும் உள்ள பட்டணம் பொடியும், ஆர், எஸ். சுகந்த பூக்குத்தூளும், ராஜன் பரிமள வாசனைப் புகையிலையும் சிறந்த முறையில் விசேஷமாய் தயார் செய்து இந்தியா முழுதும் அனுப்பிவருவதுடன் கீழ்க்கண்ட சாமான்கள் நல்ல சரக்காயும் விலை சரசமாகவும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

வாசனை மிகுந்த அசல் காஜிபூர், பன்னீர், கல்கத்தா பரிமள சோப்புகள், வாசனை தைலம், அத்தர், பற்பொடி, தேள் மருந்து, பரஹம்பூர் காரமஸாலா, ஜெர்மனி, கல்கத்தா, விசித்திரமான கலர் படங்கள், பீடி, சுருட்டு, சிகரெட்டுகள் முதலியன எங்களிடம் கிடைக்கும்.

ரொக்கம் அல்லது வி. பி. பி. வெளியூர் ஆடர்களை உடனுக்குடனே கவனித்து தகுந்தவாறு அனுப்பப்படும். விலை விவரமடங்கிய புஸ்தகத்துக்கு எழுதினால் அனுப்புகிறோம்.

பி. வி. ராஜன் & கம்பெனி,
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

வீர்ஜ பூர்த்தி

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவருமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் தரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **1**-க்கு ரூ. **2**. வி. பி. சார்ஜ் வேறு. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 13, பைராகீமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

பர்மா ஏஜெண்ட்ஸ்:—ஜீ. ஜீ. அண்டு ஸன்ஸ்,
60, மெர்ச்சன்ட் ஸ்ட்ரீட், ரங்கூன்.

2/0346
சென்னை-600 008